

கல்கி
KALKI
3.11.1968
40 காசு

ஆ! நினைவிற்கு வருகிறது...

வீடொன்று
கட்டவேண்டும்





சங்கர் பிராண்ட் சிமெண்ட்

சீரிய தரக்கட்டுப்பாட்டின்கீழ் தயாரிக்கப்படுகிறது.
கட்டட வேலைகளுக்கு நம்பகமானது.

இப்பொழுது தாராளமாக கிடைக்கிறது
பெர்மிட் தேவை இல்லை.

அருகாமையிலுள்ள
விற்பனையாளர்களுக்கோ
அல்லது எங்களுக்கோ எழுதவும்.

SANKAR BRAND

**இந்தியா
சிமெண்ட்ஸ்
லிமிடெட்**
சென்னை-2

தொழிற்சாலைகள்;
சங்கர்நகர் & சங்கரி

கால்கேட் மூலம், வாய்-நாற்றத்தைத் தடுத்து நாள்முழுதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!





ஏனெனில்:
ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் க்ரீம் வாய்நாற்றத்தையும் பற்சிதைவை விளைவிக்கும் கிருமிகளையும் 85 சதவிகிதம் வரை அகற்றுகிறது.

கால்கேட் 10 க்கு 7 பேர்களில் வாய்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறதென்றும், உணவு உட்கொண்ட உடனேயே கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால் இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன! இந்த நிரூபணத்தைப் பெற்றிருப்பது கால்கேட் மட்டுமே!
அதன் வித்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையே தனி. கால்கேட் டென்டல்க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாது பல் துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இன் மூச்சோடு வெண்மையான பற்களும் பெறவே...மற்றெந்தப் பற்பசையையும்விட உலகிலே அதிக மக்கள் கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்.



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இப்பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத்பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பா பல மாதங்களுக்கு வரும்!


DC.G.37 TM

கல்கி

கல்கி ஐப்பசி 18 :: நவம்பர் 3

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


விண்வெளிப்
பயணங்கள்
லத்தீன் அமெரிக்கப் பயணம்
மாஸ்கோ பயணம்
ஐ.நா. பயணம்
ஐரோப்பா பயணம்
பிரிட்டன் பயணம்
பிரதம மந்திரி
மந்திரி
டில்லி



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 ★ இதழ் 14

பெரியார் விரும்பும் அரசாட்சி

ஜனநாயகத்தைவிட சர்வாதிகாரத்தையே தாம் விரும்புவதாகத் திரு ராமசாமிப் பெரியார் வெளிப்படக் கூறியிருக்கிறார். அவரது இம்முடிவுக்குப் பல நல்ல காரணங்கள் இருக்கின்றன. நல்லவராக ஒரு சர்வாதிகாரியைப் பெற்றுவிட்டோமாயின், தாறுமாறாகிக் கிடக்கும் ஜனநாயகத்தை விட உண்மையாகவே அது சிறந்ததுதான். ஜனநாயகத்தில் அதிகாரஸ்தானம் பெறுபவர்கள் அந்த அதிகார உடைமையை விடாமல் பற்றிக்கொள்ள விரும்புகிறார்கள். எனவே நல்ல அரசாட்சி நடக்க வேண்டும் என்பதில் கருத்தைச் செலுத்துவதைவிட, அடுத்த தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதிலேயே கருத்தைச் செலுத்துகிற போக்கு அவர்களிடம் ஏற்படுகிறது. இதனால்தான், தேர்தலைச் சாராத சர்வாதிகாரத்தைத் திரு பெரியார் அவர்கள் சிலாக்கியமாகக் கருதுகிறார்.

ஆனால் நல்லவராக ஒரு சர்வாதிகாரியைப் பெறுவதென்பது கஷ்டமான காரியம். ஏதோ அதிர்ஷ்டவசமாக ஒரு நல்லவர் சர்வாதிகாரியாகக் கிடைத்தால்தான் உண்டு. சர்வாதிகார ஸ்தானத்தில் நல்லவர் ஒருவரை அமர்த்தப் பகுத்தறிவுக்குப் பொருந்திய உபாயம் ஏதும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. என்றோ ஒரு காலத்தில் இப்படி ஒரு வழி காண முடியும் என்று வேண்டுமாயின் நம்பலாம். ஆனால் அப்படிக் காணும் வரையில் ஜனநாயகத்தைப் பின்பற்ற வேண்டியதுதான். இதனிடையில், ஜனநாயக அமைப்பில் ஆள்கிற கட்சியின் தலைவர்கள் அடுத்த தேர்தலைப் பற்றியே கருத்துள்ளவர்களாக இருப்பதை மாற்ற நாம் ஏதேனும் செய்தாக வேண்டும்.

உதாரணமாக, ஒருவர் மந்திரியாக ஒரு பதவி கால அளவு அதிகாரம் வகித்தால் அதன் பின் பத்தாண்டுகளுக்கு அவர் பதவி எதுவும் பெறக் கூடாது என்று சட்டப்படி விதி செய்யலாம். ஜனநாயகத்தில் உள்ளடங்கியுள்ள சபலங்களை விலக்குவதற்காக இதுபோல வேறு சில வழிகளையும் சிந்திக்கலாம்.

மதிப்புக்கு உகாத கட்சிக்காரர்களின் ஆதிக்கத்துக்கு ஆட்சித் தலைவர்கள் கீழ்ப்பட்டிருக்கும் நிலையை மாற்றி, அவர்களுக்கு இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை தர நாம் ஏதேனும் செய்ய வேண்டும்.

இதற்கெல்லாம் அடிப்படையான உண்மையாதெனில், ஒரு மக்கள் எத்தகைய அரசாங்கத்தைப் பெறத் தகுதி பெற்றிருக்கிறார்களோ, அத்தகைய அரசாங்கத்தைத்தான் அவர்கள் பெறுகின்றனர். அதாவது 'நடக்கிறபடி நடக்கட்டும்' என்ற மனப்பான்மையில் மக்கள் தீமையை எதிர்த்துப் போராடாமல் இருப்பின், தீமையேதான் ஆட்சி புரியும். தீமைக்குக் குறுகிய கால அளவில் நிறையச் சக்தி உண்டு; நீண்ட காலம் என்பதும் அடுத்தடுத்து வரும் பல குறுகிய காலங்கள்தான்!

மக்களுக்குப் பிரதிநிதித்துவம் தாங்குவது ஜனநாயகமே என்று இம்முறை உற்சாகத்துடன் உயர்த்திப் பேசிப் பாராட்டப்படுகிறது. ஆனால் பெரும்பான்மையான வாக்காளர்கள் லஞ்சத்தினால் ஆட்டி வைக்கப்படும்போது — பெரும்பான்மையான வாக்காளர்கள் ஏமாற்றுக்காரர்களால் ஏமாற்றப்படும்போது — இத் தீமையை வெல்ல நன்மக்களும் ஏதும் செய்யாமல் வெறுமே வீட்டில் உட்கார்ந்திருக்கும்போது — மக்களுக்கு உண்மையான பிரதிநிதித்துவம் தாங்கும் ஜனநாயகம் நடப்பதாகச் சொல்வதற்கில்லை. இது மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் ஆட்சி அல்ல; லஞ்சம் பெறுபவர்களுக்காக லஞ்சம் கொடுப்பவர்கள் நடத்தும் ஆட்சியே இது.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

என்ன சேதி?

சென்னையில் பிரகாசம்

மொழிவழி ராஜ்யங்கள் ஏற்பட்டபின் அண்டையில் உள்ள வேற்று மொழி ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களை ஏதோ வேற்று நாட்டைச் சேர்ந்தவர் போல் எண்ணி நடந்து கொள்வது நாட்டில் பல பகுதிகளிலும் காணப்படும் அருவருக்கத் தக்க மனோபாவமாகும். மராட்டியரும் கன்னடியரும் எவ்வளவு காலம் ஒற்றுமை உணர்ச்சியுடன் வாழ்ந்தார்கள்? மொழி வழி ராஜ்யம் ஏற்பட்டபின் அவர்களுக்குள் எவ்வளவு சண்டையும் சச்சரவும் ஏற்பட்டுவிட்டன? மகாராஷ்டிரத்திலும், மைசூரிலும் ஒரே காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்த போதிலும் ஏதோ வேற்று நாட்டாரைப் போல் சண்டை போட்டுக் கொள்வதைப் பார்க்கிறோம். இத்தகைய சூழ்நிலையில் சென்னை நகரசபை, ஆந்திர மக்களின் பெரும் தலைவர் ஆந்திர கேசரி பிரகாசம் பந்துலுகாரு அவர்களுக்குச் சென்னைக் கோட்டை ஸ்டேஷன் எதிரில் ஒரு சிலையை நிறுவியுள்ளது. அதை உதவி ஜனாதிபதி திரு வி. வி. கிரி அவர்கள் சென்ற வாரம் திறந்து வைத்தார்.

திரு பிரகாசம் காரு சென்னையில் பிரசித்தி பெற்ற வக்கீலாகத் தொழில் நடத்தி வந்தார். தேச விடுதலைப் போரில் சேர்ந்து தமது தொழில், திரவியம் யாவற்றையும் துறந்தார். அஞ்சா நெஞ்சம் படைத்த தீரர் என்று பெயர் எடுத்தார். ஆந்திர மாகாணப் பிரிவினைப் போராட்டத்திலும், சென்னை ஆந்திர ராஜ்யத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சியிலும் முன்னணியில் இருந்தார். அதையெல்லாம் பொருட்படுத்தாமல், தி. மு. க. ஆட்சிப் பொறுப்பிலுள்ள சென்னை நகரசபை அண்டை ராஜ்யத் தலைவர் என்னும் முறையில் திரு பிரகாசத்துக்குத் தமிழகத் தலைநகரில் சிலையெடுத்துக் கௌரவித்தது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். இத்தகைய பரஸ்பர நல் உணர்ச்சி நாட்டின் மற்றப் பகுதிகளிலும் பரவுமானால் மொழிவழி மாகாணம் ஏற்படுத்திய தீமையைப் போக்கச் சிறிதாவது வழி செய்ததாகும்.

உயர்நீதி மன்றங்களில் ஆங்கிலம்

ராஜ்ய உயர்நீதி மன்றங்களிலும் டில்லி சுப்ரீம் கோர்ட்டிலும் நீண்ட நெடுங் காலத்துக்கு ஆங்கிலமே தொடர்ந்து இருந்து வர வேண்டிய அவசியத்தை டில்லி உயர்நீதிமன்ற பிரதம நீதிபதி திரு ஹிதயதுல்லா சமீபத்தில் வற்புறுத்தினார்.

சட்டங்களின் மொழிபெயர்ப்புக்கள் மூலச் சட்டத்தின் முழுப் பொருளையும் தொனிப் பொருளையும் உணர்த்த இயலவே இயலாது. ஆகவே நீதி நாட்டில் நிலைநாட்டப் பெற வேண்டுமானால் இன்று நாட்டில் புழங்கி வரும் முறையை அப்படியே உயர் மட்டத்தில் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்.

ஹிந்தி மட்டுமே!

உத்தரப் பிரதேசத்தில் லக்னௌ சர்வகலாசாலையில் 1971லிருந்து பி. ஏ., பி.எஸ்ஸி., பி.காம் வகுப்புக்கள் ஹிந்தியில் மட்டுமே நடக்கும் என்பதாக அறிவித்திருக்கிறார்களாம். ஹிந்தி வெறியர்களின் இந்தப் போக்கைக் கண்டித்து ஆங்கிலோ இந்திய மக்களின் தலைவர் திரு பிராங்க் அந்தோனி குரல் எழுப்பி யிருக்கிறார்.

டில்லி உயர்நீதி மன்றம், எந்த சர்வ கலாசாலைக்கும், ஆங்கிலத்தை நீக்கிவிட்டு பிராந்திய மொழியை மட்டுமே போதனா மொழியாகச் செய்ய உரிமை இல்லை என்றும், ஆங்கிலத்தைத் தேசப்பிரஷ்டம் செய்வதற்குச் சர்வகலாசாலைகளுக்கு அதிகாரமில்லை என்றும் கண்டிப்பாகத் தெரிவித்திருப்பதை எடுத்துக் காட்டி யிருக்கிறார் திரு பிராங்க் அந்தோனி.

இன்று சர்வ கலாசாலைகளிலேயே இப்படி நாட்டுக்கும், எதிர்கால மாணவ சமுதாயத்துக்கும் தீமை விளைவிக்கும் நபர்கள் அதிகாரங்களில் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. மொழி வெறி என்ன பாடுபடுத்தும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

இவர்களை எதிர்த்துப் போராட என்றென்றும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.

பெருமையும் சிறுமையும்

இந்தியர் ஒருவர் நோபல் பரிசு பெறுகிறார் என்றால் அது மகத்தான, பெருமைக்குரிய விஷயமாகும். கவீந்திரராகிய ரவீந்திர நாத டாகுருக்கும், விஞ்ஞான விற்பன்னர் ஸி.வி. ராமன் அவர்களுக்கும் பிறகு, கோரானா என்ற இந்தியர் இவ்வாண்டு உயிரியல் ரசாயன ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெறுகிறார். முப்பதாண்டுகளுக்குப் பிற்கு மீண்டும் பாரதத்துக்கு இப்பெருமை கிட்டியது பற்றி நாம் பூரணமான நிறைவு பெறமுடியவில்லை. காரணம், கோரானாவின் திறன் உரம் பெற்றுச் செழிக்க இந்தப் பாரத தேசத்தில் இடம் இல்லை. அமெரிக்கா அவரை தத்துப் புத்திரராக சுவீகரித்துக் கொண்டதாலேயே அவர் இன்று உலக அரங்கில் சிறப்புற்றிருக்கிறார். இந்தியா விஞ்ஞானத்தில் முன்னேற வேண்டும் என்று ஓயாமல் கூறிவருகிற தலைவர்கள் இத்தேசத்தில் எவ்வித பட்சபாதமுமின்றி அறிஞர்களைப் பேணி வளர்ப்பதற்கு வழி செய்ய வேண்டியது அவசியம். நமக்குச் சிறுமையும், அவமானமும் ஊட்டும் விதத்தில் கோரானா இந்த உண்மையை உணர்த்தி விட்டார்.

ராஜாஜியின் கருத்துக்கள்

நமது இளைஞரில் ஏராளமானவர்களின் மனத்தைக் கம்யூனிஸ இலட்சியங்கள் வசப்படுத்துகின்றன. ஆனால் வாஸ்தவத்தில் கம்யூனிஸம் என்றால் என்ன, அதை எப்படி நிலைநிறுத்துவது என்பதைச் சோவியத் ருஷியாவும் அதன் கைப்பாவையான நாடுகளும் செக்கோஸ்லோவேகியாவில் நிர்வாணமாக நிரூபித்துக் காட்டிவிட்டன. செக்கில் ருஷியப் படையெடுப்பு பழசாகிப் போன விஷயம்தான். ஆயினும் இதைத் திருப்பித் திருப்பிச் சொல்லி நம்முடைய வலதுசாரி—இடதுசாரிக் கம்யூனிஸ்ட் இளைஞர்களுக்கு அறிவு புகட்டவேண்டியது அவசியம்.

ஃஃஃ

நாகர்கோயில் இடைத் தேர்தலுக்கு முன்னமேயே திரு காமராஜுக்கு மத்திய மந்திரி சபையில் ஸ்தானம் தரவேண்டும் என்று திரு நிஜலிங்கப்பா விரும்புவதாகப் பத்திரிகைச் செய்தி யொன்று கூறுகிறது. இப்படிச் செய்தால் இடைத் தேர்தலில் அவர் வெற்றி பெறுவது உறுதிப்படும் என்றே இவ்வாறு சொல்லப் பட்டிருக்கிறது. இது போல் ஒழுங்கினத்தைச் சூட்சுமமாகச் செய்ய வேண்டுமாயின், காங்கிரஸ் கட்சி எத்தகைய வீழ்ச்சி அடைந்து விட்டது! திரு நிஜலிங்கப்பாவின் யோசனையை ஸ்ரீமதி இந்திரா காந்தி ஏற்றுக் கொண்டால், என்றாவது ஒரு நாள் மைசூர் இடைத் தேர்தல் ஒன்றில் திரு நிஜலிங்கப்பா நிற்க வாய்ப்பு ஏற்பட்டால் அப்போது அவருக்கும் அதே போல் பதவி தரப்படும்.

இப்போது திரு காமராஜரை மத்திய மந்திரி சபையில் அமர்த்துவதற்கு நியாயமான காரணம் ஏதும் இல்லை. கட்சி நிர்வாகஸ்தர் என்ற முறையில் திரு காமராஜ் வெகு நல்ல முறையில் வேலை செய்திருப்பது உண்மை; ஆனால், மத்திய சர்க்காரின் எந்த இலாகாவில் அவர் தம் திறமையைக் காட்டுவார் என்று காண்பது சிரமமா யிருக்கிறது. அவருக்கு மத்திய மந்திரி சபையில் இடம் தருவது தமிழகத்தின் தி. மு. க. மந்திரி சபையைக் குழிபறிக்கும் தந்திரம் எனக் கருத இடம் உண்டு. நமது ராஜ்ய மக்கள் தி.மு.க. மந்திரி சபையைப் புறக்கணித்து விட்டு, மத்திய மந்திரி ஒருவரின் செல்வாக்கு மூலம் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வைப்பதற்கு இது ஒரு தந்திரம்.

ஃஃஃ

யூனியன் தொழில் காரியதரிசி திரு பி.வி. மாத்யூ ஜாம்ஷெட்பூரில் ஒரு நல்ல உரை நிகழ்த்தியுள்ளார். 'சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதைத் தடை செய்ய வேண்டும். அவர்களது கோரிக்கைகளுக்கு மத்தியஸ்தம் மூலமே தீர்வு காண வேண்டும்' என்பது திரு மாத்யூவின் யோசனை. இதை உடனடியாக ஆழ்ந்து கவனித்து முடிவு எடுக்க வேண்டும். இப்போதைக்கு நெருக்கடி ஏதும் இல்லை என்பதால் இவ்விஷயத்தைக் கிடப்பில் போட்டுவிடக் கூடாது. நெருக்கடியில்லாத சமயத்தில்தான் பிரச்னைகளை உணர்ச்சி வசப்படாமல் கவனித்து, உரிய முடிவு எடுக்க முடியும்.

ஃஃஃ

பெர்மிட் லைசென்ஸ் ராஜ்யத்தின் கீழ் நடைபெறும் கம்பெனிகளிடமிருந்து ஆள்கிற கட்சியானது 'நன்கொடை' எனக் கூறப்படும் ஒன்றைப் பெறுகிற வழக்கம் இனியும் நீடிக்கும். கம்பெனி நன்கொடையைத் தடுக்கச் சட்டம் செய்ய வேண்டும் என்ற உத்தேசத்தைக் காலவரம்பின்றித் தள்ளிப் போட்டு விட்டார்கள். ஒரு வாக்குறுதியின் அடிப்படையில் தங்களது ராஜ்யங்களை இந்திய யூனியனிடம் ஒப்புவித்த மன்னர்களுக்கு அந்த வாக்குறுதியை மறுப்பதற்குச் சட்டம் செய்யவே அவசரம் ஏற்பட்டு விட்டதாக மத்திய மந்திரி சபை கருதுகிறது போலும்! உடனடியாகக் கவனிக்க வேண்டிய விஷயம்.



மகாத்மா மணிமொழிகள்

எனக்குப் பாதைதெரியும். அது நேரானது. அது கத்தி முனை போன்றது. அதன் மீது நடப்பதில் மகிழ்கிறேன். நான் தடுக்கிக் கொள்ளும்போது விம்முகிறேன். 'நன்முயற்சி செய்பவன் நாசமடைய மாட்டான்' என்பது ஆண்டவன் வாக்கு. அந்த வாக்குறுதியில் எனக்கு உள்ளார்ந்த நம்பிக்கை. எனவே, என் பலவீனம் காரணமாக நான் ஆயிரம் முறை தோல்வியுற்றாலும் நம்பிக்கை இழக்க மாட்டேன். என்றேனும் ஒரு நாள் இந்த உடலைப் பூரணக் கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்து விடுவேன் என்றும் அன்று திவ்விய ஒளியைக் காண்பேன் என்றும் நம்புகிறேன்.

தேர்தல்களின் செலவைக் குறைத்து, கம்பெனி நன்கொடை பெற முடியாத கட்சிகளும் ஆளும் கட்சிபோல் சம வாய்ப்புப் பெற வழி காண்பதே. அந்தத் திசையில் அரசாங்கம் செல்வதாக அறிகுறிஎதுவும் இதுவரை இல்லை.

* * *

தேசிய மூவர்ணக் கொடிக்கும் காங்கிரஸ் கொடிக்கும் உள்ள ஒற்றுமை, காங்கிரஸல்லாத கட்சிகளுக்கு மிகவும் பிரதிகூலமாக உள்ளது. மக்கள் மனத்தில் இதனால் ஏற்படும் குழப்பத்தைத் தீர்க்க இப்போதேனும் காங்கிரஸ் கொடியை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். காங்கிரஸ் மூவர்ணத்தில் கொண்டாடும் உரிமையை விட்டு, வேறு ஏதோ ஒரே ஒரு வர்ணத்தைத் தேர்வுசெய்து அதில் ராட்டையைப் பொறித்துக் கொள்ள வேண்டும். அல்லது சர்க்காராவது தேசியக் கொடியை மாற்ற வேண்டும். ஆனால் பின்னால் சொன்னது சிரமமான காரியம்.

* * *

ராஜ்யங்கள் நடத்தும் லாட்டரிகள் சட்டத்துக்கு இசைந்தன அல்ல என்ற யூனியன் சட்ட மந்திராலயத்தின் கருத்தைத் தமிழக சட்ட மந்திரி ஆட்சேபிக்கிறார். ராஜ்ய சர்க்காரிடம் லைசென்ஸ் பெற்று அதிருஷ்டப் பரிசுப் போட்டி நடத்துபவர்கள் மீது குற்றம் சாட்டப்படலாகாது என்று 'பீனல் கோட்' விதி ஒன்று உள்ளது. இதைத் தமிழக மந்திரி தமக்கு ஆதரவாகக் காட்டுகிறார். ஆனால் சட்ட மந்திராலயக் கருத்துக்கு இது சரியான ஆட்சேபமாகாது. சர்க்கார் சம்பந்தப்படாத காரியங்களுக்காக லாட்டரி நடத்த ராஜ்ய சர்க்காரிடமிருந்து அநுமதி பெறுவது வேறு விஷயம்; சர்க்காரே தமக்கென லாட்டரி மூலம் பணம் சேர்ப்பது வேறு விஷயம். லைசென்ஸ் தருவதால், தாமே லாட்டரி நடத்த அதிகாரம் பெற்றதாகாது.

எது எப்படியாயினும் அரசியல் சட்ட சாஸனப்படி தவறாக உள்ள ஒன்றைப் 'பீனல் கோட்' ஷரத்தினால் சரியாக்கிவிட முடியாது' அரசியல் சாஸனப்படி அரசாங்க லாட்டரி தவறு என்றே நான் எடுத்துக் காட்டினேன். இதைத் தில்லி சட்ட மந்திராலயமும் ஒப்புக் கொண்டிருக்கிறது.

* * *

சென்னையின் பிரபல தொழிலதிபர் ஸ்ரீ ஈசுவரனுடன் நீண்ட நேரம் உரையாடினேன். தொழிலாளரின் வேலை நிறுத்தம் உற்பத்திக்கு நஷ்டம் விளைவித்து, நிர்வாகிகள் தொழிலாளிகள் இரு சாராருக்கும் ஊறு விளைவிக்கிறது என்றார். 'தொழிலாளிகளுக்குத் தவறான வழிகாட்டும் தொழிலாளர் தலைவர்களைப் புறக்கணித்து விட்டு, நிர்வாகஸ்தர் நேராக அறிவுள்ள தொழிலாளிகளுடன் தொடர்பு கொண்டு, அவர்களிடம் முதல்-தொழில் இரண்டுக்குமுள்ள பொதுவான நலன்களை உணர்த்த வேண்டும். இது கடினம், தொடக்கத்தில் தோல்வி ஏற்படலாம், ஆயினும் முயற்சியை விடக்கூடாது' என்கிறார் ஈசுவரன். தொழிலாளர்களை மேம்படுத்துவதற்காக ஸ்ரீ ஈசுவரனே முதலாளிகள் கோஷ்டியில் போராடி, தமது உறுதியால் வெற்றி பெற்றவர்.

தேர்தலும் டாலரும்

நவம்பர் 5-ந் தேதி அமெரிக்க ஜனாதிபதி தேர்தல். இத்தேர்தலை முன்னிட்டு மொத்தத்தில் ஒரு ஓட்டுக்கு அரை டாலர் வீதம் செலவாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். தேர்தல் தினத்துக்குள் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுபவர்கள் மொத்தம் 50 மில்லியன் டாலர்கள் செலவழித்திருப்பார்கள். இதில் பெரும் பகுதி விளம்பரத்துக்கே, அதிலும் முக்கியமாக ரேடியோ - டெலிவிஷன் மூலம் செய்யும் விளம்பரத்துக்கே செலவாகும்.

இதைப் பார்க்கும்போது பெரும் செல்வந்தர்கள் மட்டுமே ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியும் போலும் என்று தோன்றும். ஆனால் இது உண்மையல்ல. இம்முறை அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் மூவரில் யாருமே அமெரிக்காவின் கண்ணோட்டத்தில் பெரும் செல்வந்தர்கள் அல்ல.

உப ஜனாதிபதி ஹம்ப்ரே அண்மையில் டெலிவிஷனில் தோன்றியபோது பொருளாதார நெருக்கடி தமது தேர்தல் பிரசாரத்தைப் பாதிப்பதாக ஒளிவு மறைவின்றிச் சொன்னார். 'ஒன்றோ, ஐந்தோ, பத்தோ உங்களால் முடிந்ததை அனுப்புங்கள், நன்றியுடன் ஏற்கிறோம்' என்று ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதுவரை அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய இரு கட்சிகளின் சார்பில் இரு அபேட்சகர்கள் போட்டியிடுவதுதான் வழக்கம். இம்முறை சுயேச்சையாக ஒருவரும் நிற்கிறார். ஜார்ஜ் வாலஸ் என்ற பெயர் கொண்ட இவர் தமது பெயரை ஓட்டுச் சீட்டுகளில் இடம் பெறச் செய்ய சில மாகாண அரசாங்கங்கள் மீது வழக்குத் தொடுக்க நேர்ந்தது! இதற்கே இவருக்கு ஏராளமாகச் செலவாகி விட்டது.

தம்மிடம் பணம் இல்லை என்பதையே இவர் முக்கியமான பிரசார ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறார்.

அதிகமாகப் பணம் இல்லாதவர்கள் கூடத் தேர்தலுக்கு நிற்பதைச் சாத்தியமாக்குபவர்கள் மக்களே. தங்கள் மனதுக்குகந்தவர்கள் தேர்தலில் போட்டியிட ஒரு டாலருக்கும் குறைவாகச் சில்லறையாகக் கொடுப்பார்கள். ஆயிரக் கணக்கான டாலர்களுக்குச் 'செக்' வெட்டவும் செய்வார்கள்.

நிக்ஸன் ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு நேரடியாகக் கடிதம் எழுதிப் பணம் சேகரித்தார். இதுவரை 100,000 மக்களிடமிருந்து சராசரியாக ஒருவரிடமிருந்து 13 டாலர் வீதம் பணம் வந்தது. இன்னும் வந்து கொண்டிருக்கிறது.

பெரும் செல்வந்தர்கள் தேர்தல் செலவுக்கு ஏராளமான பணத்தை நன்கொடையாகக் கொடுத்து அதன் மூலம் பின்னால் ஜனாதிபதியைக் கைக்குள் போட்டுக் கொள்ள முடியுமா? - முடியாது. ஏனெனில் நூறு டாலர்களுக்கு அதிகமாகத் தரப்படும் எல்லா நன்கொடைகளைப் பற்றிய விவரங்களையும் காங்கிரஸ்-க்குத் (அமெரிக்க நாடாளு மன்றம்) தெரியப்படுத்த வேண்டும். தனி நபர்கள் மட்டுமே நன்கொடை தரலாம். கம்பெனிகளோ, யூனியன்களோ, கார்ப்பரேஷன்களோ அபேட்சகர்களுக்குப் பணம் உதவக் கூடாது என்பது சட்டம். தனிநபர்கள் தரும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கும் கிடையாது.







சமீபத்தில் விஜயவாடாவில் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரியர்களின் முகாமில் அகில இந்திய வேத சம்மேளனம் நடைபெற்றது. ஆசாரியர்களையும், இளைய ஸ்வாமிகளையும், வங்காள வித்யார்த்திகளையும், சில வேத வித்துக்களையும், இவ்விழாவில் கலந்து கொள்வதற்கென்றே வந்த தாய்லந்து ராஜகுரு ஸ்ரீ வாமதேவரையும் இங்கு காண்கிறோம்.



வேத சம்மேளனம்



★ நவம்பர் மாதத் தொடக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது. இதில் போட்டியிடும் மூவரில் ஒருவரான ரிச்சர்டு நிக்ஸனைப் பற்றிய சில சுவையான தகவல்களைத் தருகிறது இக் கட்டுரை.

ஆறு நெருக்கடிகளும் அயராத நெஞ்சமும்





தமது வாழ்விலே ஏற்பட்ட எத்தனையோ நெருக்கடியான நிலைமைகளுள் முக்கியமான ஆறினை மட்டும் பொறுக்கி எடுத்து அவற்றைப் பற்றிய விவரங்களை 'ஆறு நெருக்கடிகள்' என்ற தலைப்பில் புத்தகமாக அளித்திருக்கிறார் ரிச்சர்டு நிக்ஸன். இதன் முன்னுரையில் அவர் கூறுகிறார்: ஆறு நெருக்கடிகளைத் தேர்ந்தெடுத்தேன். இப்புத்தகத்தை எழுதுவது ஏழாவது பெரிய நெருக்கடியாகி விட்டது!

இந்த ஏழாவது நெருக்கடி பற்றி நிக்ஸன் மேலும் சொல்கிறார்:

ஐஸன்ஹோவர் சிகரெட் பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிட்டபோது நான் அவரை ஒரு முறை கேட்டேன்: ''மறுபடியும் சிகரெட் பிடிக்க ஆரம்பிக்க வேண்டும் என்ற நப்பாசை உங்களுக்கு ஏற்படுவதே இல்லையா?'' இதற்கு அவர், ''நான் மறுபடியும் சிகரெட் பிடிக்க ஆரம்பிக்கவே மாட்டேன் என்று உறுதியாகச் சொல்ல என்னால் முடியாது. ஆனால் நான் இன்னொரு முறை சிகரெட் பிடிப்பதை நிறுத்தும் முயற்சியில் ஈடுபடவே மாட்டேன்!'' என்றார்.

இந்தப் புத்தகத்தை எழுதி முடித்ததும் எனக்கு இந்த ஞாபகம்தான் வந்தது. என் வாழ்நாளில் நான் இன்னொரு புத்தகத்தை எழுத ஆரம்பிக்க மாட்டேன் என்று என்னால் கூறமுடியாது. ஆனால் என் வாழ்நாளில் நான் இன்னொரு புத்தகத்தை எழுதி முடிக்க மாட்டேன் என்பது நிச்சயம்!

நானூறு பக்கங்களுக்கு மேற்பட்ட இந்தப் புத்தகத்தின் முதல் நாலு வரிகளைப் படித்த பிறகு முழுவதையும் படித்து முடிக்காமல் கீழே வைக்க யாருக்கும் மனம் வராது. புத்தகத்தைப் படித்து முடித்த பிறகு, ''போதுமய்யா போதும். உமது வாழ்நாளுக்கு இந்த ஒரு புத்தகமே போதும்'' என்றுதான் நமக்குக் கூறத் தோன்றும்.

ஏழாவது நெருக்கடியைப் பற்றிச் சொன்ன பிறகு புத்தகத்துக்குத் தலைப்புக் கொடுத்த ஆறு நெருக்கடிகளுக்கு வருகிறார் நிக்ஸன். இவற்றில் முதலாவது ஹிஸ் வழக்கு.

ஹிஸ் என்பவர் அரசாங்கத்தில் உயர் அதிகாரியாகப் பதவி வகித்து வந்தார். இவர் ஒரு கம்யூனிஸ்டு. வேறு சில அமெரிக்கக் கம்யூனிஸ்டுகளுடன் இவர் தொடர்பு கொண்டிருந்தார். இவர்கள் ருஷ்ய ஒற்றர்களை அடிக்கடி சந்தித்து வந்தனர். இதனால் அமெரிக்க அரசாங்கத்தின் ரகசியங்கள் பல ருஷ்யாவுக்கு அம்பலமாகிக் கொண்டிருந்தன.

ஆரம்ப விசாரணையின்போது ஹிஸ் குற்றமற்றவர் என்று நிர்மானிக்கப்பட்டது. அன்று ட்ருமன் ஜனாதிபதி. குடியரசுக் கட்சியினர் அரசியல் நோக்கோடு இப்படி ஓர் அபவாதத்

படங்கள் : நிக்ஸனுடைய பிறந்த நாளன்று மகளுடைய அன்பளிப்பாக ஒரு கேக். ☐ தமிழக முதன் மந்திரி ராஜாஜியுடன். ☐ பாரதப் பிரதமருடன் அமெரிக்க உப ஜனதிபதி. ☐ கடற்படையில் பணியாற்றியபோது (வட்டத்தினுள் நிக்ஸன்). ☐ ஹிஸ் வழக்கில் துப்பறியும் நிபுணருடன்.



தைச் சுமத்துகின்றனர் என்று ட்ருமனே கூறினர்.

அமெரிக்க நலனுக்கு எதிராக இயங்குவோர் மீது நடவடிக்கை எடுக்க நாடாளு மன்ற அங்கத்தினர்கள் சிலர் அடங்கிய ஒரு குழு இருந்தது. இந்தக் குழு இந்த விவகாரத்தை இத்துடன் விட்டுவிடக் கூடாதென்றும் மேலும் ஆராய்ந்து உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்றும் நிக்ஸன் வாதாடினர். ஹிஸ் விவகாரத்தில் தீவிரமான புலன் விசாரணைகளும் துப்புத் துலக்கலும் நடைபெற வேண்டும் என்று ஆணித்தரமாகச் சொல்லியதோடு அதற்குண்டான காரியங்களிலும் நிக்ஸன் ஈடுபட்டபோது அவர் அன்றைய ஜனதிபதியின் விருப்பத்துக்கு எதிராக நடந்து கொண்டார். அத்துடன் பல பத்திரிகைகளின் அபிப்பிராயத்துக்கு மாருகவும் இயங்கினர்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நிக்ஸன் நாடாளு மன்றத்துக்கு அன்று 'புது முகம்'. அவருடைய எதிர்காலமே இந்த விவகாரத்தில் தொக்கி நின்றது. ஆனல் அவர் அஞ்சி ஒதுங்கிவிடவில்லை. அமெரிக்காவின் மத்திய துப்பறியும் இலாகாவான எப். பி. ஐ. இதில் ஈடுபடு மாறு முடுக்கி விட்டார். நிக்ஸனுடைய அயராத உழைப்பு, விடா முயற்சி காரணமாகப் பல உண்மைகள் வெளிவந்தன. ஹிஸ் இறுதியில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டுச் சிறைவாச தண்டனை அடைந்தார்.

நிக்ஸனுடைய வெற்றி ஹிஸ் தண்டனை பெற்றதில் இல்லை. அவரது வெற்றி இதைக் காட்டிலும் பெரியது. ஹிஸ் வழக்கு மூலமாக நிக்ஸன், அமெரிக்க அரசாங்கத்தில் எப்படி கம்யூனிஸ்டுகள் உயர் அதிகாரிகளாக மிக எளிதில் இடம் பெற்றுவிட முடிகிறது என்பதைச் சுட்டிக் காட்டினர். கம்யூனிஸ்டுகள் எத்தனை சுலபமாகத் தாங்கள் கம்யூனிஸ்டுகளே அல்ல என்று பிறரை நம்ப வைத்து விடுகின்றனர் என்பதைத் தெளிவாக்கினர். கம்யூனிஸ்டு நடவடிக்கைகள் தெரு முனையில் நின்று கருப்புக் கொடி காட்டி கோஷமிடுவதுடன் நின்றுவிடுவதில்லை; உறுதியாக நிற்பதுபோல் தோன்றும் வேலிக் கம்பிகளுள்ளே செல் அரித்துவிடுவதுபோல் அவர்கள் ஊடுருவுவார்கள் என்பதை அமெரிக்க மக்கள் உணரச் செய்தார். அமெரிக்க அரசாங்கத்தின் ரகசிய தஸ்தாவேஜுகள் கம்யூனிஸ்டுகள் வசம் எவ்வளவு எளிதில் சிக்கிவிட முடியும்; பாதுகாப்பு நடவடிக்கைகள் எப்படிப் பலப்படுத்தபடவேண்டும் என்பதிலெல்லாம் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இவை மட்டுமல்ல, ஹிஸ் போன்ற தேசத் துரோகிகள் உயர் பதவிகளை வகித்து அரசாங்கத்தின் கொள்





கைகளை உருவாக்குபவர்களாகவே ஆகிவிடுகிறார்கள்! இவை போன்ற பல எச்சரிக்கைகளை அமெரிக்க அரசாங்கமும் மக்களும் இந்த வழக்கு மூலம் பெற்றனர்.

ஃ ஃ ஃ

ஐஸன்ஹோவர் ஜனாதிபதி பதவிக்கும் நிக்ஸன் உப-ஜனாதிபதி பதவிக்கும் போட்டியிட்டுத் தீவிரத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டிருந்த சமயம். திடீரென்று ஒரு நாள் ''நிக்ஸன் ரகசிய நிதி'' பற்றிய விவரங்கள் பத்திரிகைகளில் அடிபடலாயின.

பல செல்வந்தர்களும் வர்த்தகர்களும் நிக்ஸனுக்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு ரகசிய நிதிக்கு அவ்வப்போது ஏராளமாகப் பணம் கொடுத்து வந்திருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு. இந்த விவகாரம் பெரிதாக வளர்ந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. நாடாளு மன்ற உறுப்பினரான நிக்ஸன் பல செல்வந்தர்களிடம் லஞ்சம் வாங்குகிறார் என்பதைச் சொல்லாமல் சொன்னார்கள் அவரது விரோதிகள். இது காரணமாக நிக்ஸன் தேர்தலில் தோற்பது மட்டுமல்ல, இதனால் ஐஸன்ஹோவரின் வெற்றியும் பாதிக்கப்படலாம் என்று குடியரசுக் கட்சியினர் பலர் நினைக்க ஆரம்பித்தனர். நிக்ஸனை விட்டுவிட்டு உபஜனாதிபதி பதவிக்கு போட்டியிட ஐஸன்ஹோவர் வேறு ஒருவரை நியமிக்க வேண்டும் என்று 'ஐக்'கைப் பலர் வற்புறுத்த ஆரம்பித்தனர்.

ஐஸன்ஹோவர் ஒரு தர்ம சங்கடமான நிலையில் அகப்பட்டுக் கொண்டார். நிக்ஸனுக்கு ஆதரவாளர்களும் ஏராளமாய் நாடெங்கிலும் இருந்தது அவருக்குத் தெரியும். ஆகவே நிக்ஸன் இருந்தாலும் சங்கடம் போனாலும் சங்கடம் என்ற நிலை. கடைசியில் ஐக் இதுபற்றி முடிவு செய்யும் உரிமையை நிக்ஸனுக்கே கொடுத்து விட்டார்.

நிக்ஸன் ஒரு நிதி இருப்பது உண்மைதான் என்பதை ஒப்புக்கொள்ளத் தயங்கவில்லை. ''ஆனால் இது பலர் நிரூபிக்க முயலுவது போல் லஞ்ச நிதியல்ல. இதில் சட்ட விரோதமான செயல் ஏதும் கிடையாது. ஒரு நாடாளு மன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் ஆற்றவேண்டிய கடமைகளுக்கு அரசாங்கம் எனக்குச் சம்பளம் தருகிறது. ஆனால் அதற்கு மேல் நான் அரசியல் ரீதியிலும் செயல்பட வேண்டி உள்ளது. இதற்கு ஆகும் செலவுகளுக்காக இந்த நிதி ஏற்படுத்தப்பட்டது. நிதியை நிர்வகிக்க தர்மகர்த்தாக்கள் உள்ளனர். எனது சொந்த உபயோகத்துக்கு ஒரு செண்ட் இதிலிருந்து எடுப்பதில்லை. இதில் ரகசியம் ஏதும் இல்லை. கணக்குகளை அவ்வப்போது 'ஆடிட்டர்'கள் சரி பார்க்கிறார்கள். இந்நிதிக்குத் தனி நபர் மட்டுமே பணம் அளிக்கலாம். அதற்கும் உச்ச வரம்பு உண்டு. பணம் தந்தவர் எவருக்கும் நான் எந்த விதத்திலும் சலுகை காட்டியதில்லை.

''வேறு பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணம் போதவில்லை என்பதற்காகத் தங்கள் மனைவியையோ அல்லது வேறு உறவினரையோ தமக்கு 'உதவியாளராக' வைத்துக் கொண்டு அரசாங்கச் சம்பளப் பட்டியலில் அவர்கள் பெயரைச் சேர்த்து விடுகிறார்கள். நான் அப்படிச் செய்ய விரும்பவில்லை. நாடாளு மன்ற உறுப்பினரான பிறகு நான் நடத்தி வந்த வழக்கறிஞர் தொழிலையும் விட்டுவிட்டேன். என்னுடைய தொகுதி மக்கள், அவர்கள் நலனைக் கவனிக்கும் என்னுடைய அரசியல் ரீதியான நியாயமான செலவுகளுக்காக இப்படி ஒரு நிதியை ஏற்படுத்தியிருப்பதில் தவறு ஒன்றும் இல்லை'' என வாதாடினார். என்றாலும் எதிர்ப்பு பலமாகத்தான் இருந்தது.

தாம் உபஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதால் ஐக் மீண்டும் ஜனாதிபதியாவது பாதிக்கப் படக்கூடாதே என்ற கவலை நிக்ஸனுக்கு. அதே சமயம் அநீதியான ஒரு குற்றச்சாட்டுக்குப் பயந்து பின்வாங்கவும் அவருக்கு மனமில்லை.

கடைசியில் டெலிவிஷன் காட்சியில் தோன்றி தமது சொத்துக்கள் கடன்கள் பற்றிய எல்லா விவரங்களையும் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்வது என்று தீர்மானித்தார் நிக்ஸன். டெலிவிஷன் நிகழ்ச்சியின் இறுதியில் மக்களைத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தி எழுதுமாறு கேட்டுக்கொள்ளவும் தீர்மானித்தார். ஆனால் அவருடைய கட்சியைச் சேர்ந்த வேறு பல பெரும் புள்ளிகள் அவர் இந்நிகழ்ச்சியின் இறுதியில் தமது ராஜிநாமாவைச் சமர்ப்பிப்பதாகச் சொல்ல வேண்டும் என்றே வற்புறுத்தினார்கள்.

கடைசியில் நிக்ஸன் டெலிவிஷன் நிகழ்ச்சியின்போது தான் தயாரித்து வைத்திருந்த குறிப்புக்களைக் கூட ஒதுக்கிவிட்டு மக்களிடம் மனம் விட்டுப் பேசினார். நிகழ்ச்சி முடிய வேண்டிய குறித்த நேரம் நெருங்குவதைக் கூட மறந்து பேசினார். இதனால் மக்கள் தங்கள் கடிதங்களை அனுப்ப வேண்டிய விலாசத்தைக் கூறுவதற்குக்கூட நேரமில்லாமல் போயிற்று.

நிகழ்ச்சியைத் தமது டெலிவிஷனில் பார்த்துக்கொண்டிருந்த ஐஸன்ஹோவர், ''ஏராளமான கோழைகளுடன் சேர்ந்திருந்து வெற்றி பெறுவதை விட இப்படிப்பட்ட ஒரு தைரியசாலிக்குத் துணை நின்று தோற்றுப் போவதையே நான் விரும்புவேன்'' என்றார்.

ஆனால் அவரும் தோற்கவில்லை; நிக்ஸனும் தோல்வியடையவில்லை. ஜனாதிபதி, உப ஜனாதிபதி பதவிகளுக்கு மக்கள் அவ்விருவரையும் தேர்ந்தெடுத்தார்கள்.

ஃ ஃ ஃ

ஜனாதிபதி ஐஸன்ஹோவருக்கு இருதய நோய் கண்டது. சிறிது காலத்துக்குப் பிறகு சிறு குடலில் ஒரு கோளாறு. இதன் பிறகு அவர் உடல்நிலை மேலும் சீர்கெட்டது. அவரது சிந்தனையும் பேச்சும் கூடப் பாதிக்கப்பட்டன.

இந்நாட்களில் — ஐஸன்ஹோவர் தமது கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாத காலத்தில் — உப ஜனாதிபதி நிக்ஸன் மிகத் திறம்படச் செயலாற்றி ஓர் இக்கட்டான நிலையைச் சமாளித்தார். இந்தத் தருணத்தில் தாம் நடந்து கொண்ட விதத்தை முட்டைகள் மீது ஒருவன் அவற்றை உடைக்

காமல் நடக்க முயலுவதற்கு ஒப்பிடுகிறார் நிக்ஸன். ஜனாதிபதியின் அதிகாரங்களை ஓர் அவசர ஆர்வத்துடன் கைப் பற்றிக் கொள்ள முயலுவது போல் தோன்றக் கூடாது. பேசாமல் இருந்தால் மற்ற உயர் அதிகாரிகளுக்கிடையில் பலப் பரீட்சை நடக்க அனுமதித்து விட்டதாகவும் ஆகிவிடும். உயர் அதிகாரிகளை ஒருங்கிணைத்து அவர்களுக்குத் தலைவனாகவும் இருந்து தலைவனாக இல்லாதது போலவும் காட்டிக் கொண்டு காரியங்களை நடத்திச் செல்ல வேண்டிய நிலை.

இது போன்ற ஒரு தர்ம சங்கடமான நிலை எதிர்காலத்தில் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று கருதுகிற நிக்ஸன், ஜனாதிபதியின் உடல் நலம் பாதிக்கப்பட்டால் என்ன செய்வது என்பது அமெரிக்க அரசியல் நிர்ணயச் சட்டத்தில் தெளிவாக்கப்படவில்லை என்றும், இதுபோன்ற நிலையில் உப ஜனாதிபதியின் அதிகாரங்களை வரையறுக்கும் விதத்தில் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் எண்ணுகிறார்.



''வெயிலும் இல்லை, மழையும் இல்லை ஏன் குடையைப் பிடிச்சிண்டு போறாங்க ?''

''சர்க்கஸ்லே கம்பிமேல் நடந்து பழக்கம் ஆயிட்டுது. சாதாரணமா நடக்கணும்னாலும் குடையில்லாமல் நடக்க முடியலே.''

ஃ ஃ ஃ

நிக்ஸன் உப ஜனாதிபதியாக விளங்கிய காலத்தில் தென் அமெரிக்க நாடுகள் பலவற்றுக்கு அவர் விஜயம் செய்ய வேண்டும் என்று ஏற்பாடாயிற்று. தென் அமெரிக்க நாடுகள் சில, சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டிச் சுதந்திரமடைந்திருந்தன. மக்களின் எழுச்சி காரணமாகப் பதவிக்கு வந்திருந்த புதிய அரசாங்கங்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்வது அமெரிக்காவின் கொள்கையாக இருந்தது. இதையொட்டியே நிக்ஸனின் தென் அமெரிக்க விஜயம்.

ஆனால் இதில் ஒரு சங்கடமும் இல்லாமல் போகவில்லை. சர்வாதிகாரத்துக்கு முடிவு கட்டிப் பதவிக்கு வந்தவர்கள் கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவையும் புரட்சியின்போது பெற்றிருந்தனர். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தாங்கள் பதவிக்கு வரத் துணை புரிந்த கம்யூனிஸ்டுகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அவர்களால் முடியவில்லை. நிக்ஸன் தங்கள் நாட்டுக்கு விஜயம் செய்வதை வரவேற்றாலும் அவருக்குக் கம்யூனிஸ்டுகள் காட்டிய எதிர்ப்பை ஒடுக்க அவர்களால் இயலவில்லை.

இந்த எதிர்ப்பும் இலேசானதாக இல்லை. கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஒருசிலரேதான் என்றாலும் அவர்கள் மாணவர்களையும் இளைஞர்களையும் சிறுவர்களையும் கூட ஒரு மயக்கத்தில் ஆழ்த்திப் பெருங் கூட்டமாகத் திரண்டு நின்று நிக்ஸனுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கச் செய்யும் திறன் படைத்திருந்தார்கள்.

பெருவில் ஸான் மார்க்கோஸ் சர்வ கலாசாலை முன் திரண்டிருந்தது பெருங் கூட்டம். ''நிக்ஸனே திரும்பிப் போ! நிக்ஸனுக்குச் சாவு!'' என்பது போன்ற கோஷங்கள். நிக்ஸனின் மெய்க்காப்பாளர்கள் அங்கு அவர் போகவே கூடாது என்று எச்சரித்தனர். போகாமலிருந்தால் தோல்வி நிக்ஸனுக்கல்ல; ஒரு சில கம்யூனிஸ்டுகளுக்காக அமெரிக்கா பயந்ததாகும் என உணர்ந்தார் நிக்ஸன். அங்கு சென்றதுடன் காரை விட்டு இறங்கிக் கூட்டத்தை அணுகினார். ''அமெரிக்கா பற்றி உங்களுக்கு உள்ள குறைகளைச் சொல்லுங்கள்; ஜனநாயக முறையில் விவாதிப்போம்'' என்றார். கூட்டத்தினர் அதிசயித்துப் போயினர். கம்யூனிஸ்ட் தலைவர்கள் தாங்கள் தோல்வி அடைவதைப் பார்த்துக் கல்லெறிவதில் ஈடுபட்டனர். கூட்டத்தினரையும் தூண்டினர். ஆனால் இறுதி வெற்றி நிக்ஸனுக்கே கிடைத்தது. காரில் ஏறி நின்றபடியே கிளம்பினார் அவர். தப்பித் தவறி ஏதாவது கல் தம்மீது பட்டாலும் தாம் சரிந்து விழாமல் இருக்கும் பொருட்டுத் தம் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுமாறு மெய்க்காப்பாளரிடம் சொன்னார்!

பெருவில் அவருக்குக் கிடைத்த வெற்றியை வெனிஸுலாவில் தோல்வியாக மாற்றி விடுவது என்று கம்யூனிஸ்டுகள் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். காரகாஸ்ஸில் பெரிய ஆர்ப்பாட்டம் நடக்கும் என்றும் முடிவில் அவரைக் கொலை செய்யவே சதி நடக்கிறதென்றும் ஒற்றர்கள் கூறினர்.

விமான நிலையத்தை யொட்டியே பெருங் கூட்டம் நின்றது. நிக்ஸனுடைய காரை நகரவொட்டாமல் சூழ்ந்து கொண்டது. நிக்ஸனைத் திட்டிக் கோஷங்கள் எழுந்தன. உறுதியான காரின் கண்ணாடிகள் உடையாவிட்டாலும் விரிசல் கண்டன. காரை அடித்து நசுக்கினார்கள். உலுக்கினார்கள். எச்சிலைக் கூட்டித் துப்பினார்கள். காரின் முன்புறம் மழை நீரை ஒதுக்கப் பயன்படும் துடைப்பானை உபயோகிக்க வேண்டிய அளவுக்கு எச்சில்! நிக்ஸனின் அருகிலேயே அமர்ந்திருந்த அத்தேசத்தின் அயல் நாட்டு மந்திரி, சமாதானம் சொல்வதுபோல் பேசினார்.

''கம்யூனிஸ்டுகளால் தூண்டப்பட்ட இவர்கள் அமெரிக்க தேசிய கீதத்தை மட்டுமல்ல; உங்கள் நாட்டு தேசிய கீதம்பாடப்பட்டபோது அதையும் அவமதித்தார்கள் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா?'' என்றார் நிக்ஸன்.

''ஆனால் இந்தக் கம்யூனிஸ்டுகள் தானே சர்வாதிகாரத்தை ஒழித்து நாங்கள் பதவிக்கு வர உதவினார்கள்'' என்று பரிதாபமாகச் சொன்னார் அயல் நாட்டு மந்திரி. அவர் இவ்வாறு கூறி முடித்த சில விநாடிகளுக்குள் ஒரு கம்யூனிஸ்ட் வீசி எறிந்த கல், கார் கண்ணாடியை உடைக்க, சிதறிய ஒரு சில் மந்திரியின் கண்ணையே பதம் பார்த்து விட்டது!

(அடுத்த இதழில் முடியும்)

அட்டைப்பட விளக்கம்

அருள்மொழிக்கு ஆயிரம்!

ஆகா, பொன்னியின் செல்வனை நாம் கல்கியில் மீண்டும் தொடங்கி யிருப்பது எவ்வளவு அற்புதமான சந்தர்ப்பமாக அமைந்து விட்டது! 'பொன்னியின் செல்வன்' என்ற செல்லப் பெயர் பெற்றவனும், இக்கதை நடந்த கால கட்டத்துக்குப் பிற்பாடு 'ராஜ ராஜன்' என்று கம்பீரமாகப் பெயரெடுக்கப் போகிறவனுமாகிய அருள்மொழி வர்மன் பிறந்து இந்த ஐப்பசிச் சதயத்துடன் ஆயிரம் ஆண்டுகள் நிறைகின்றன. அதையொட்டி, ராஜராஜன் தஞ்சையில் எடுப்பித்த பெருவுடையாராகிய பிருகதீசுவரர் ஆலயத்தில் பெருவிழா நடக்கவிருக்கிறது.

விழாவை எப்படி நடத்துவது என்பதற்கு அந்த ராஜராஜனே வழி காட்டியிருக்கிறான். தனது பிறந்த நாளன்று தனக்காக ஏதும் செய்துகொள்ள மாட்டான் அந்த மன்னுதி மன்னன். பிருகதீசுவரருக்கு மகத்தான அபிஷேகம் செய்து அந்த ஆனந்தத்தில் தானும் முக்குளிப்பான். நாற்பத்தெட்டு ஓதுவா மூர்த்திகளைக் கொண்டு திருமுறை விண்ணப்பம் செய்விப்பான். 'ராஜராஜன்' என்பதாக அரசர்களின் முடியில் அடிபட ஆதிக்கம் செலுத்துவதை விட, 'சிவபாத சேகர'னாக இருந்து பெருமானின் திருவடிகளைத் தன் முடியில் தாங்குவதையே பெரிதாக மதித்தவன் அன்றோ?

இவ்வாறே இம்மாதம் முப்பதாம் தேதி தஞ்சை பிருகதீசர் ஆலயத்தில் திருமுறை விண்ணப்பமும், முப்பத்தொன்றும் தேதி மாபெரும் அபிஷேகமும் நடக்கவிருக்கின்றன. முப்பதாம் தேதி தமிழக மடாதிபதிகள் பெரிய கோயிலுக்கு வந்து வழிபாடு செய்து அருளுரை வழங்குகின்றனர். மறுநாள் திருவாளர்கள் நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, சா. கணேசன், கருத்திருமன், கி.வா.ஜ., கி. ஆ. பெ. விசுவநாதன் ஆகியவர்கள் சொற்பொழிவு ஆற்றுகின்றனர். பட்டிமன்றமும் நடைபெறுகிறது.

இந்தப் பொன்னான சமயத்தில் பொன்னியின் செல்வனைப் பெருமிதத்துடன் நம் மேலட்டையில் வெளியிடுகிறோம். ஈழம் செல்லு முன் இளவலுக்கு வானதி ஆரத்தி சுற்றி வழி அனுப்பும் காட்சி இது. ''ஆயிரமாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் பெற வருக வருக'' என்று அவனை வரவேற்று ஆரத்தி சுற்றுவதாகவே இப்போது தோன்றுகிறது. இக்கதையில் அருள்மொழி வர்மன் ராஜ ராஜனாகவில்லை; ராஜ ராஜேசுவரம் என்ற பெரிய கோயிலை எழுப்பவும் இல்லை. ஆயினும் அவன் மனத்தில் அம்மாபெரும் கோயிலின் வித்து நம் கதை நடக்கும் காலத்திலேயே விழுந்து விடுகிறது.

ஈழத்தில் வெற்றி வீரனாகத் திகழ்ந்த அருள்மொழிவர்மன் அங்கு எழுப்பப்பட்ட மாபெரும் தகோபா என்னும் பௌத்த தாது கர்ப்பங்களைக் காண்கிறான். 'இது போன்ற மாபெரும் ஆலயங்களை அல்லவா நமது ஈசனுக்கும் எடுக்க வேண்டும்? மகா தேவன் என்றே பெயர் பெற்ற இறைவனுக்கு எவ்வளவு பெரிய இலிங்கமும் ஆலயமும் எடுத்து வழிபட வேண்டும்?' என்று எண்ணுகிறான். அந்த எண்ணம் முகிழ்த்தே பெருவுடையார் என்ற பிரம்மாண்ட லிங்கமும், தட்சிண மேரு எனப்படும் மகோந்நத விமானமும், பிருகதீச்சரம் எனும் மாபெரும் ஆலயமும் பிற்காலத்தில் எழுந்தன. பெருங்கோயில் பிறக்கக் காரணமான பௌத்த ஸ்தூபியையும் அட்டைப்படப் பின்னணியில் காண்கிறோம். அதுவே ராஜராஜனின் சமய சமரச உணர்வுக்குச் சின்னமாகவும் திகழுகிறது. நாகப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குப் பெரு நிவந்தங்கள் ஏற்படுத்தியவன் அல்லவா? இந்தச் சூடாமணி விஹாரம் பற்றிப் 'பொன்னியின் செல்வ'னில் பிற்பாடு படிப்போம்!

ஆகாச வெடி

இரண்டு கிலோ எடையுள்ள ஒரு தக்காளியை விளைவித்திருக்கிறார் விவசாயி.

அரைக் கிலோ தக்காளியை இரண்டு கிலோவாக நிறுத்துக் காட்டும் வியாபார நுணுக்கமும் அறிந்தவரா யிருப்பாரோ?

●

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் அபேட்சகர்கள் தேர்தல் பெட்டியைத் தாங்களே தயாரித்துக் கொண்டு வரவேண்டும் என உத்தரவு.

வோட்டுகளையும் தாங்களே தயாரித்துக் கொண்டு வருவதில் ஆட்சேபணை இல்லை என்று அவர்கள் சொல்லக்கூடும்.

'ஹிப்பி' சுற்றுலாப் பயணி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

'இங்கு வந்ததிலிருந்து எங்களை யெல்லாம் பைத்தியமாக அடித்துக் கொண்டிருக்கிறார் இவர்' என்று ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளிகள் புகார் செய்கிறார்களா?

●

ஒலிம்பிக் ஹாக்கியில் தோல்வியுற்ற இந்திய ஆட்டக்காரர்கள் நடுவர்மீது புகார் செய்தனர்.

விளையாட்டு தர்மத்தை அனுசரிப்பதிலும் தோல்வியுற்று இரட்டைத் தோல்வியாக்கி விட்டார்களே!

மணியம் நினைவு நிதி

ஓவியக் கலைஞர் மணியம் உடல் நலிவுற்றிருந்தபோது அவருக்குப் பொருளீட்டித் தருவதற்காக சென்ற ஆகஸ்டில் 'மணியம் நிதி' தொடங்கினோம். 'கல்கி' ஸ்தாபனம் ஐயாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கி நிதியை ஆரம்பித்து வைத்தது. ஒருசில வாரங்களிலேயே அக்கலைஞர் புகழுடம்பு எய்திவிட்டார். நலிவும் நோயும் பூத உடலுக்கே அன்றிப் புகழுடம்புக்குக் கிடையாது. அதற்கு அழியாத ஞாபகார்த்தத்தையும் அவரே தமது ஓவியங்களின் மூலம் நிறுவிக் கொண்டு விட்டார்.

ஆயினும் அவரது குடும்பத்தைக் காக்க வேண்டியது நம் கடமை. மணியத்தின் தாயாரும், மனைவியாளும், கலைப் பள்ளியில் பயின்று வரும் அவரது மகனும் பிரிவுத் துயரை மறப்பது இலேசானதல்ல. ஆனால் பிரிவுத்துயரோடு ஜீவனம் நடத்துகிற சிரமமும் அவர்களுக்கு ஏற்படலாகாது. இந்த உத்தேசத்துடன் 'மணியம் உதவி நிதி'யை 'மணியம் நினைவு நிதி'யாக்கிப் பொருள் திரட்டி அவரது குடும்பத்தினருக்கு வழங்கக் கருதியிருக்கிறோம்.


மணியத்தின் ஓவியத்தைப் பார்த்து மகிழ்ந்தவரும் மயங்கியவரும் அனந்தம். அவர்களது கலாரசனைக்கு அன்பினால் ஒரு ஸ்தூல உருவம் கொடுத்துக் கலைஞரின் குடும்பத்துக்கு உதவ இது ஒரு சந்தர்ப்பமாகும். மணியத்தின் அபிமானிகளுக்கு இந்த நட்புக் கடமையை நாம் அதிகம் வலியுறுத்திக் கூற வேண்டியதில்லை.

மணியம் நிதிக்கு உதவிய அன்பர்களின் பெயர்களை இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். பிரபல சைத்ரிகர் திரு கோபுலு அவர்களின் பெயர் முதலாவதாக விளங்குவதை ஒரு நல்ல அறிகுறியாகக் கருதுகிறோம். நன்கொடையாளர்களின் பட்டியல் நீண்டு நெடிது வளரும் என நம்புகிறோம்.



கோபுலு, சைத்ரிகர், சென்னை	400-00
டாக்டர் எம். வி. ஆச்சார், நாவல்பாக்கம்	101-00
ஆர். சூடாமணி, சென்னை	100-00
ஓர் அன்பர்	20-00
எஸ். ராமகிருஷ்ணன், பம்பாய்	20-00
ஸ்ரீமதி நிர்மலா, ஷிமோகா	20-00
எஸ்.வி. மணி ஐயரும் நண்பர்களும்	17-00
ரகுபதியும் நண்பர்களும், கோவில்வெண்ணி	14-00
ஜி. வி. ராமன், சென்னை	11-00
சாமிப்ரியா, பெங்களூர்-21	11-00
ஸ்ரீமதி எம்.பி.எம். ராஜம்மாள், மதுரை-1	10-00
ஏ. வேங்கடாசலம், பொள்ளாச்சி	10-00
கே. நாராயணன், சித்திரி	10-00
எம். ரேணுகாதேவி, சாத்தூர்	10-00
பி. ஆர். சுப்பிரமணியம், கும்பகோணம்	10-00
வி. கே. விஜயராகவன், சென்னை	10-00
வாதூலன், சென்னை	10-00
தம்பி சீனிவாசன், சென்னை	10-00
கே. வி. சுவாமி, மதுரை-1	10-00
எம். சுந்தரராமன், சித்தூர்	10-00
ரசிகர் - ஊட்டி	10-00
ஸ்ரீமதி லட்சுமி, புதுதில்லி	10-00
எஸ். டி. சுந்தரம், சென்னை-14	9-00
கணேஷ் ஹோட்டல் ஊழியர்கள், திருப்பதி	8-10
முருகுந்தராஜன் மூலம், சென்னை	6-00
எஸ். வேம்பு, அமுதசுரபி, சென்னை	5-00
கலைக்கண்ணன், திருமுகை	5-00
கே. கே. கமலா, சென்னை-1	5-00
ஜி. ராஜலக்ஷ்மி, திருவாரூர்	5-00
ஆர். வேங்கடரத்தினம், நெய்வேலி-1	5-00
ஹத்தரேகை ஹரால்வைாணன், திருச்செங்கோடு	5-00
ஆர். கிருஷ்ண அய்யர், சாக்கோட்டை	5-00
டி. தர்மசம்வர்த்தனி, பங்களூர்-21	5-00
ஏ. சங்கரன், திருவண்ணாமலை	5-00
கே. சின்னசாமி, வேலூர்	5-00
எம். வி. ஆர். தங்கபாண்டியன், மதுரை-6	5-00
தலைவர், இளைஞர் இலக்கியமன்றம், சென்னிமலை	5-00
கே. சுந்தரம், தெனாலி	5-00
எம். நடராஜன், கான்பூர்	5-00
ஏ. வி. நஞ்சுண்டசாமி, அவிநாசி	5-00
என். நாராயணசாமி, வெள்ளமடை	5-00
பி. கஸ்தூரி, வேலூர்	5-00
ஆர். ஸ்ரீநிவாசன், சென்னை-18	5-00
பாரத் காப்பி ஹவுஸ், ராஞ்சி-4	5-00
டி. எஸ். பழனிவேலு, நாமகிரிப்பேட்டை	5-00
துரோணன், கும்பகோணம்	5-00
ஏ. ஆர். எஸ். ரத்னம், பம்பாய்	5-00
சி. முனுசாமி, கிருஷ்ணகிரி	5-00
வி. ஆர். ராஜகோபாலன், சென்னை	5-00
ரா. பாலகிருஷ்ணன், சென்னை	5-00
நந்தகோபால், சென்னை	5-00
பி. தங்கவேலு, மைசூர்	5-00
மக்கள் மறுமலர்ச்சி மன்றம், விளாம்பாக்கம்	3-00
கே. ராஜகோபாலன், சென்னை-17	3-00
எம். மகாலிங்கம், அரூர்	2-00
வி. சீனிவாசன், பங்களூர்-3	2-00
என். ஜனார்த்தனம், சிவகிரி	2-00
என். ஆரா அமுதன், கொல்லம்	2-00
என். சுந்தரம், சென்னை-16	2-00
எம். எஸ். சூரியநாராயணன், கோவை	2-00
பி. கிருஷ்ணசாமி, மைசூர்	1-25
பொற்செல்வி, மானந்தகுடி	1-00
கே. ரங்கநாதன், திருமலவாடி	1-00
எஸ். பிரசன்ன வேங்கடேசன், சேலம்-7	1-00
கே. பவானி, தஞ்சாவூர்	1-00
ஆர். பாலாஜி, சென்னை-43	1-00
குமாரி ஆர். விஜயலட்சுமி, கடலூர்	1-00
ஆகமொத்தம்	1017-35





14

தெரியுமா ?

☐ மயில்ராவணன் கதை கேட்டிருக்கிறீர்களா? பாட்டியிடம் கேட்டுப் பாருங்கள். ரொம்பச் சுவாரசியமாக இருக்கும். அதில் வரும் மயில்ராவணன் தலைகளை வெட்ட வெட்ட முளைக்குமாம். அவன் சிந்தும் பொட்டு ரத்தத்திலிருந்து பல மயில்ராவணன்கள் உற்பத்தியாவார்களாம். 'கப்ஸா' என்று கண்ணைச் சிமிட்டுகிறாயா? இதோ கேள். கடல் வாழ் ஜந்துக்களிலே 'ஸ்டார் ஃபிஷ்' (Star Fish) என்று ஒரு வகை மீன். நட்சத்திரம் போல இருக்கும். இதன் காலை வெட்டுங்கள். அது கவலையேபடாது. பத்தே நாட்களில் அதற்குப் புதுக் கால் வளர்ந்துவிடும். இதைவிடப் பெரிய அதிசயம் இதைத் துண்டு துண்டாக்கிக் கடலில் வீசி எறியுங்கள். கொஞ்ச நாளில் ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு நட்சத்திர மீனாக மாறிவிடும். இது 'கப்ஸா' அல்ல; ஆராய்ச்சியாளர் கண்டறிந்த உண்மை!

☐ 'ராக்கூன்' என்றால் தெரியுமா உங்களுக்கு? ரகூனுக்குத் தம்பி இல்லை. இது ஒரு புதிய வார்த்தை. வானிலை ஆராய்ச்சியாளர்கள் சில வருஷங்களுக்குமுன் தங்கள் கண்டுபிடிப்பு ஒன்றுக்குக் கொடுத்த பெயர் தான் இந்த 'ராகூன்'. ராக்கூன் என்பது, ராக்கெட்டும் பலூனும்] இணைந்ததோர் அமைப்பு. வான மண்டலத்தை அளக்கும் கருவிகளைத் தாங்கிச் செல்லக்கூடியது. முதலில் இதில் உள்ள பலூன் பூமியிலிருந்து பதினைந்து மைல்கள் வரை ராக்கெட்டைச் சுமந்தபடி மேலே பறந்து—இல்லை மிதந்து செல்லும். பிறகு இத்துடன் இணைந்துள்ள ராக்கெட் தானாகவே தன்னைத்தானே இயக்கிக்கொண்டு மேலும் நாற்பத்தைந்து மைல்கள் உயரத்துக்குச் சீறிக் கொண்டு போகும். இந்த ராக்கெட்டோடு இணைக்கப்பட்டுள்ள தானியங்கி ரேடியோக் கருவிகள் பூமி மட்டத்திலிருந்து அறுபது மைல் உயரத்தில் இருந்து கொண்டு வான மண்டலத்து அறிக்கைகளை — உஷ்ண நிலை, காற்றழுத்தம், ஒலி அலைகளின் தன்மை — பூமிக்கு அனுப்பிக் கொண்டிருக்கும். இந்தத் தகவல்கள் கால நிலை பற்றி ஆராயும் வல்லுநர்களுக்குப் பேருதவியாக இருக்கின்றன. விண்வெளிப் பயணத்துக்கு ஏற்ற வாகனங்களை உருவாக்கவும் இவை பயன்படுகின்றன. இப்போது 'ராக்கூன்' என்றால் என்ன என்று புரிகிறதா ?


ஒன்றுக்குள் ஒன்று ... முடியுமா ?

ஒன்றுக்குள் ஒன்று போடும்படியாக ஐந்து அட்டைப் பெட்டிகளைத் தயார் செய்து கொள்ளுங்கள். இவைகளின் மூடிகளைப் பிய்த்துவிட வேண்டும். ஒரு படிக்குள் அரைப்படி, அதற்குள் கால் படி, அதற்குள் ஆழாக்கு என்று பலசரக்குக் கடை செட்டியார் படிகளை வைத்திருப்பதைப்போல இந்தப் பெட்டிகளை ஒன்றுக்குள் ஒன்றாகப் போட முடிய வேண்டும். இனி மூன்று பெரிய புத்தகங்களை மேஜை மீது வையுங்கள். அவற்றுக்கு முறையே A,B,C என்று நாமகரணமிடுங்கள். இனிமேல்தான் உங்கள் நிதானத்துக்குச் சோதனை ஆரம்பம். புத்தகம் 'A'யின் மீது மிகச் சிறிய பெட்டியைக் கவிழ்த்து வையுங்கள். அதன் மீது அடுத்தது அதற்கடுத்தது என்று ஐந்து பெட்டிகளையும் கவிழ்த்து விடுங்கள்.

'A'யின் மீதுள்ள பெட்டி அடுக்கு அப்படியே — அதேபோல் — 'C'க்கு மாற வேண்டும். அதற்கான நிபந்தனைகள்: 'C'க்குப் பெட்டிகளை மாற்றும் போது பெட்டிகளை ஒன்று காலியான புத்தகத்தின் மீதோ, அல்லது சிறிய பெட்டியின் மீதோதான் வைக்கலாம். பெரிய பெட்டியின் மீது சிறிய பெட்டியைத்தான் வைக்கக்கூடாது. பெட்டிகள் கவிழ்ந்த நிலையிலேயே இருக்க வேண்டும். ஒரு தடவைக்கு ஒரு பெட்டியைத்தான் நகர்த்தலாம். இந்த விதிகளின்படி 'A'யின் மேலுள்ள ஐந்து பெட்டிகளையும் 'C'க்கு அதே போல—உள்ளே மிகச் சிறிய பெட்டியும் மேலே மிகப் பெரிய பெட்டியுமாக — மாற்ற வேண்டும் - இவ்வளவுதானே என்று எளிதாக எண்ணிவிட வேண்டாம்.








தூக்க முடியாத விரல்

உங்கள் நண்பனைக் கூப்பிட்டுப் படம் 1ல் காட்டியுள்ளபடி அவன் விரல்களை மேஜை மீது ஊன்றிக் கொள்ளச் சொல்லுங்கள். பிறகு 'நான் சொல்லும் விரல்களை மட்டும் உயர்த்த வேண்டும்' என்று கூறிக் கட்டை விரல் என்று கூறுங்கள். டக்கென்று தூக்கிக் காட்டுவான். ஆள்காட்டி விரல்- அலட்சியமாகத் தூக்கி ஆட்டுவான். சுண்டு விரல்- சுலபமாகத் தன்னைத் தூக்கும். இப்போதுதான் வேடிக்கை. 'மோதிர விரல்' என்று கூறுங்கள். ஐயா, முக்குவார் முனகுவார்! மூச்சுக் கட்டுவார். அவரால் அந்த நிலையில் அந்த விரலை உயர்த்தவே முடியாது. முடியவே முடியாதய்யா. முடியாது!



ஒன்றுக்குள் ஒன்று

விடை: A யிலிருந்து C க்கு அதேபோல வரிசையாக A-B, C-B, A-C, B-A, B-C, A-C, A-B, C-B, C-A, B-A, C-B, A-C, A-B, C-B, A-C, B-A, B-C, A-C, B-A, C-B, C-A, B-A, B-C, A-C, A-B, C-B, A-C, B-A, B-C, A-C, ஆக 81 தடவை பெட்டிகளை நகர்த்த வேண்டும்.


உங்களைப் பற்றி

தூக்கம்

மனிதன் ஆரோக்கியமாக வாழத் தூக்கம் அவசியம். தூக்கம் வராவிட்டால் ஏக்கம் பிடித்துப் போவார்கள். தூங்க வேண்டிய வேளையில் தூங்காமல் கண் விழித்துக் கொண்டிருந்தால் உங்களால் எந்த வேலையையும் செய்ய முடியாது. தூங்காமல் இருந்தால் என்ன நடக்கும் என்று ஆராய்ச்சி நடத்தி இருக்கிறார்கள். இரண்டு நாள் தூங்கா விட்டால் அமைதி இழந்து விடுவார்கள். எதையும் சிந்தித்துச் செயல்பட முடியாது. ஏன் தெரியுமா? நம் மூளை ஒரு தொழிற்சாலையைப் போல. தொழிற்சாலை அன்றாடம் துப்புரவு செய்யாவிடில் குப்பை, கூளம், கழிவுப் பொருள்களெல்லாம் குவிந்து போகிறதல்லவா? அதேபோலத்தான் உடலுக்குள்ளும். இரவு நீங்கள் தூங்கும் போது மூளையின் வேலை செய்யும் வேகம் குறைகிறது. அவயவங்கள் இயங்குவதில்லை. அப்போது பகல் முழுவதும் வேலை செய்ததினால் அங்கங்கே குவிந்திருக்கும் அழுக்கு முதலிய கழிவுப் பொருள்களை அகற்றி உடலைத் துப்புரவாக்கும் பணி நடைபெற நாம் தூங்கும் நேரத்தையே பயன்படுத்திக் கொள்ளுகிறது. தானியங்கும் தசைநார்கள். நமக்கு வயதாக வயதாகத் தூங்கும் நேரம் குறையும். ஆனால் முதியவர்களுக்கும் உறக்கம் தேவை. மிருகங்களின் விஷயம் வேறு. எலி நாளில் பாதிப் பொழுது தூங்கும். யானைக்கு 2 அல்லது 3 மணி நேரம் தூங்கினால் போதும். சுறாமீன்கள் தூங்குவதே இல்லை. சில நிமிஷங்கள் கண்ணை அமட்டும் கரடிகள்.



விடை தெரியுமா?



★ பள்ளியிலிருந்து வந்த குழந்தைகள் பசியோடிருந்தார்கள். அம்மா கிணற்றடியில் துணிகளுக்குச் சோப்பு போட்டுக் கொண்டிருந்தாள். ஆகவே, "உஷா அடுப்படியில் வெள்ளித் தட்டில் தோசை வைத்து மூடியிருக்கிறேன். எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள். குழந்தைகள் தின்றுவிட்டுக் கையலம்ப வந்தபோது உஷா சொன்னாள்: "அம்மா தட்டிலிருந்த தோசைகளில் சரி பாதியையும் ஓர் அரைத் தோசையையும் எடுத்துக் கொண்டோம். மீதி ஒன்று இருக்கிறது!" என்றாள். பெண்ணின் சிலேடையைப் புரிந்து கொண்டு அம்மா சிரித்தபடியே "சரி விளையாடப் போங்கள்" என்றாள். தட்டில் முதலில் எத்தனை தோசைகள் இருந்தன?


விடை. மூன்று தோசைகள். மூன்றில் சரிபாதி ஒன்றரை. அதோடு அரை. ஆக இரண்டு தோசைகள். மீதி ஒன்று.



★ உன்னிடம் நான்கு வர்ண டின்கள் இருக்கின்றன. உன் அப்பா வீட்டில் உள்ள சில நாற்காலிகளுக்கு உன்னை வர்ணமடிக்கச் சொல்கிறார். ஒவ்வொரு நாற்காலிக்கும் இரு வர்ணங்கள் அடிக்க வேண்டுமென்கிறார். மாறுபட்ட எத்தனை வர்ண அமைப்புகளை உன்னிடம் உள்ள வர்ண டின்களிலிருந்து உன்னால் தர முடியும்?

விடை: நான்கு வர்ண டின்களைக் கொண்டு ஆறு இரு வர்ணச் சேர்க்கைகளைத் தரமுடியும்.


6398/74TAM
பான் வழங்குங்கள்!
நீங்கள் வழங்குவது நொடிப்பொழுதில்
தயாராகும் நல்ல மணமும் சுவையுமுள்ள காபி!
எல்லோருக்கும் பெரிய விருந்தளியுங்கள்: உங்கள் குடும்பத்தினர் பெரிதும் விரும்பக்கூடிய சூடான பான் வழங்குங்கள், பான் அருந்திய நண்பர்களும் அதனை மறக்கமாட்டார்கள்! அவ்விதம் வழங்குகையில் நீங்களும் ஒரு கோப்பை பான் அருந்துங்கள்!
Brooke Bond
BON
INSTANT COFFEE
இன்னொரு
பான்
வாங்குங்கள்
ஒரு நொடியில் நல்ல மணமும் சுவையுமுள்ள
காபி பெறுவதற்கு சுலபமான வழி இது!
ப்ருக் பாண்டினால்
அதிகக் கவனத்துடன் தயாரிக்கப்பட்டது.



இருபத்தொன்பதாம் அத்தியாயம்


"நம் விருந்தாளி"

புலவர்கள் சென்ற பிறகு அரண்மனை மருத்துவர் சக்கரவர்த்திக்கு மருந்து கலந்து கொண்டு வந்தார். மலையமான் மகளான பட்டத்தரசி அதைத் தன் திருக்கரத்தால் வாங்கிக் கணவருக்குக் கொடுத்தாள்.

அது வரை பொறுமையாய்க் காத்திருந்த சின்னப் பழுவேட்டரையர், வந்தியத்தேவனைப் பிடித்தபிடி விடாமல் இழுத்துக் கொண்டே சக்கரவர்த்தியின் அருகில் போய்ச் சேர்ந்தார்.

''பிரபு! புது மருந்தினால் ஏதாவது பலன் தெரிகிறதா?'' என்று கேட்டார்.

''பலன் தெரிகிறதாக மருத்துவர் சொல்லுகிறார்; தேவியும் சொல்கிறாள். ஆனால் எனக்கென்னவோ, நம்பிக்கை உண்டாகவில்லை. உண்மையைச் சொன்னால், தளபதி! இதெல்லாம் வீண் முயற்சி என்றே தோன்றுகிறது. என் விதி என்னை அழைக்கிறது. யமன் என்னைத் தேடிக் கொண்டு பழையாறைக்குப் போயிருக்கிறான்



செல்வன்

அமரர் கல்கி

என்றே நினைக்கிறேன். அங்கே நான் இல்லை யென்று அறிந்ததும், இவ்விடம் என்னைத் தேடிக் கொண்டு வந்து சேருவான்!...''

''பிரபு! தாங்கள் இப்படி மனமுடைந்து பேசக் கூடாது. எங்களை யெல்லாம் இப்படி மனங் கலங்கச் செய்யக் கூடாது. தங்கள் குல முன்னோர்கள்....''

''ஆ! என் குல முன்னோர்கள் யானைக் கண்டு அஞ்சியதில்லை என்று சொல்லுகிறீர்! எனக்கும் என் குல முன்னோர்கள் பலரைப் போல் போர்க்களத்தில் முன்னணியில் நின்று போர் செய்து உயிர் விடும் பாக்கியம் கிடைக்குமானால், அத்தகைய மரணத்துக்குச் சிறிதும் அஞ்சமாட்டேன். சோர்வும் கொள்ள மாட்டேன். உற்சாகத்துடன் வரவேற்பேன். என்னுடைய பெரிய தகப்பனார் இராஜாதித்தியர் தக்கோலத்தில் யானை மேலிருந்து போர் புரிந்தபடியே உயிர் நீத்தார். சோழ குலத்தின் வீரப் புகழைத் தக்கோலம் போர்க்களத்தில் என்றென்றும் நிலை நாட்டினார். 'யானைமேல் துஞ்சிய தேவர்' என்று புகழ் பெற்றார். நான் என்ன புகழைப் பெறு



வேன்? 'நோய்ப் படுக்கையில் துஞ்சிய சுந்தர சோழன்' என்றுதானே பெயர் பெறுவேன்? என்னுடைய இன்னொரு பெரிய தகப்பனார், கண்டராதித்த தேவர் சிவபக்தியில் ஈடுபட்டு மரண பயத்தை விட்டிருந்தார். ஸ்தல யாத்திரை செய்வதற்கு மேற்குக் கடற்கரை நாடுகளுக்குப் போனார். அங்கேயே காலமானார். 'மேற்கெழுந்தருளிய தேவர்' என்று அவரும் பெயர் பெற்றார். அவரைப் போன்ற சிவபக்தனும் அல்ல நான்; ஸ்தல யாத்திரை செய்யவும் இயலாதவனாகி விட்டேன். இப்படியே எத்தனை நாள் படுத்திருப்பேன் ? என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாருக்கும் பாரமாக!.... ஆனால் என் மனத்துக்குள் ஏதோசொல்கிறது, அதிக காலம் நான் இந்தப் பூவுலகில் இருக்க மாட்டேன் என்று....''

''சக்கரவர்த்தி ! அரண்மனை வைத்தியர் தங்களுக்கு அபாயம் ஏதும் இல்லை என்று கூறுகிறார். ஜோதிடர்களும் அபாயம் இல்லை என்றே சொல்கிறார்கள். ஆனால் இந்தச் சிறு பிள்ளை தங்களிடம் ஏதோ அபாயத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்....''

''ஆ ! இவன் காஞ்சி நகரிலிருந்து வந்த பிள்ளைதானே ? ஆமாம்; ஏதோ அபாயம் என்று சொன்னான். எதைப் பற்றிச் சொன்னாய், தம்பி? என்னுடைய நிலையைப் பற்றியா ?''

வல்லவரையனுடைய மூளை மின்னல் வேகத்தில் வேலை செய்தது. 'அபாய'த்தைப் பற்றித் தான் எச்சரித்ததாக ஒப்புக் கொண்டால் சந்தேகங்கள் ஏற்பட்டுத் தனக்கு அபாயம் நேருவது நிச்சயம். அந்த இக்கட்டிலிருந்து தப்ப வேண்டும். நல்லது ; ஓர் உபாயம் செய்து பார்க்கலாம். இலக்கணத்தைத் துணையாகக் கொண்டு நெடிலைக் குறில் ஆக்கலாம்!

''சக்கரவர்த்திப் பெருமானே! அபாயத்தைப் பற்றிச் சொல்வதற்கு நான் யார்? நம் வீர தளபதி சின்னப் பழுவேட்டரையரும், அரண்மனை வைத்தியரும், சாவித்திரி அம்மனையொத்த மகாராணியும் இருக்கும் போது என்ன அபாயம் வந்துவிடும்? 'அபயம்' 'அபயம்' என்று தங்களிடம் நான் முறையிட்டுக் கொண்டேன். பழைய வாணர் குலத்துக்கு நான் ஒரு அறியாச் சிறுவன்தான் இப்போது பிரதிநிதியாக மிஞ்சியிருக்கிறேன். தங்கள் திருப்புதல்வர் மனம் மகிழும்படி சோழப் பேரரசுக்குத் தொண்டு புரிந்து வருகிறேன். எங்கள் பழைய பூர்வீக ராஜ்யத்தில் ஒரு சிறு பகுதியையாவது அடியேனுக்குத் திருப்பிக் கொடுக்க அருள் புரிய வேண்டும். அரசர்க்கரசே! அபயம்! அபயம்! இந்த அறியாச் சிறுவன் தங்கள் அபயம்!'' என்று வல்லவரையன் மூச்சு விடாமல் படபடவென்று பேசி நிறுத்தினான்.

இதைக் கேட்ட பழுவேட்டரையரின் முகம் கருங்கியது. சுந்தர சோழரின் முகம் மீண்டும் மலர்ந்தது. மகாராணியின் முகத்தில் கருணை ததும்பியது.

''இந்தப் பிள்ளை பிறந்தவுடனே சரஸ்வதி தேவி இவனுடைய நாவில் எழுதி விட்டாள் போலும் ! இவனுடைய வாக்குவன்மை அதிசயமாயிருக்கிறது!'' என்றாள் தேவி.

இதுதான் சமயம் என்று வந்தியத்தேவன், ''தாயே ! தாங்கள் எனக்காகப் பரிந்து ஒரு வார்த்தை சொல்ல வேணும். நான் தாய் தந்தையற்ற அநாதை. வேறு ஆதரவு அற்றவன். என்னுடைய வேண்டுகோளை நானே தான் வெளியிட்டாக வேண்டும். பக்தனுக்குப் பரிந்து பார்வதி தேவி பரமசிவனாரிடமும், லக்ஷ்மிதேவி மகா விஷ்ணுவிடமும் பேசுவது போல் தாங்கள் எனக்காகப் பேச வேண்டும். எங்கள் பூர்வீக அரசில் ஒரு பத்துக் கிராமத்தைத் திரும்பக் கொடுத்தாலும் போதும். நான் மிகவும் திருப்தி அடைவேன் !'' என்றான்.

இதை யெல்லாம் கேட்கக் கேட்கச் சுந்தர சோழருக்கு ஒரே வியப்பும் மகிழ்ச்சியுமாயிருந்தது. அவர் சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்து, ''தளபதி! இந்த இளைஞனை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. தேவியின் முகத்தைப் பார்த்தால், இவனை மூன்றுவது பிள்ளையாகச் சுவீகாரம் எடுத்துக் கொண்டு விடலாமா என்றே யோசிப்பதாகத் தெரிகிறது. இவனுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கலாம் அல்லவா? அதில் ஒன்றும் கஷ்டம் இராதே ? உமது அபிப்பிராயம் என்ன?'' என்றார்.

''இதில் அடியேனுடைய அபிப்பிராயத்துக்கு இடம் என்ன இருக்கிறது? இளவரசர் கரிகாலரின் கருத்தையல்லவோ அறிய வேண்டும்?'' என்றார் தஞ்சைக் கோட்டைத் தளபதி.

'' சக்கரவர்த்தி ! இளவரசரைக் கேட்டால், பழுவூர்த் தேவரைக் கேட்க வேண்டும் என்று சொல்லுகிறார். பழுவூர்த் தேவரோ, இளவரசரைக் கேட்க வேண்டும் என்கிறார். இரண்டு பேருக்கும் நடுவில் என் கோரிக்கை....''

'' பிள்ளாய் ! நீ கவலைப்படாதே ! இரண்டு பேரையும் சேர்த்து வைத்துக்

கொண்டே கேட்டுவிடலாம்!'' என்றார் சக்கரவர்த்தி.

பிறகு சின்னப் பழுவேட்டரையரைப்பார்த்து, ''தளபதி! இளவரசனிடமிருந்து இந்தப் பிள்ளை ஓலை கொண்டு வந்தான். பழையபடி, காஞ்சிக்கு நான் வரவேண்டும் என்றுதான் ஆதித்தன் ஓலையில் எழுதியிருக்கிறான். அங்கே புதிதாய்ப் பொன் மாளிகை கட்டியிருக்கிறானாம். அதில் நான் சில நாளாவது தங்க வேண்டுமாம்!'' என்றார்.

'' தங்கள் சித்தம் எப்படியோ, அப்படியே செய்கிறது !'' என்றார் கோட்டைத் தளபதி.

'' ஆ ! என்னுடைய சித்தம் எப்படியோ அப்படி நீர் நடத்துவீர். ஆனால் என் கால்கள் மறுக்கின்றன. காஞ்சிக்குப் பிரயாணம் செய்வது இயலாத காரியம். அரண்மனைப் பெண்டுகளைப் போல் பல்லக்கில் ஏறித் திரைபோட்டுக் கொண்டு யாத்திரை செய்வதென்பதை நினைத்தாலே எனக்கு அருவருப்பாயிருக்கிறது. ஆதித்த கரிகாலனை இங்கே வந்து விட்டுப் போகும்படிதான் மறு ஓலை எழுதிக் கொடுக்க வேண்டும்....''

''இளவரசர் இச்சமயம் காஞ்சியை விட்டு இங்கு வரலாமா? வட திசையில் நம் பகைவர்கள் இன்னும் பலசாலிகளாக இருக்கிறார்களே!''

''பார்த்திபேந்திரனும் மலையமானும் அங்கிருந்து பார்த்துக் கொள்வார்கள். இளவரசன் இச்சமயம் இங்கே என் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று என் உள்ளத்தில் ஏதோ சொல்கிறது. அது மட்டுமல்ல ; ஈழநாட்டுக்குச் சென்றிருக்கும் இளங்கோவையும் உடனே இங்கு வந்து சேரும்படி அழைப்பு அனுப்ப வேண்டும். இரண்டு பேரையும் வைத்துக் கொண்டு ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்ய விரும்புகிறேன். அருள்மொழி இங்கு வரும்போது, ஈழப் படைக்கு உணவு அனுப்புவது பற்றி உங்கள் ஆட்சேபத்தையும் அவனிடம் தெரிவிக்கலாம்...''

'' சக்கரவர்த்தி ! மன்னிக்க வேண்டும். ஈழத்துக்கு உணவு அனுப்புவதை நான் ஆட்சேபிக்கவில்லை. தனதான்யாதிகாரியும் ஆட்சேபிக்கவில்லை. சோழநாட்டுக் குடிமக்கள் ஆட்சேபிக்கிறார்கள். சென்ற அறுவடையில் சோழ நாட்டில் விளைவு குறைந்து விட்டது. நம்முடைய மக்களுக்கே போதாமலிருக்கும் போது, இலங்கைக்குக் கப்பல் கப்பலாக அரிசி அனுப்புவதை மக்கள் ஆட்சேபிக்கிறார்கள் ! தற்போது வாய்க்குள் முணு முணுக்கிறார்கள். கொஞ்ச நாள் போனால், மக்களின் கூச்சல் பலமாகும். தங்கள் உடல் நிலையைப் பாதிக்கும்படி இந்த அரண்மனைக்குள்ளேயும் அவர்களுடைய கூச்சல் வந்து கேட்கும் !....''

''குடிமக்கள் ஆட்சேபிக்கிற காரியத்தைச் செய்ய அருள்மொழி ஒரு நாளும் விரும்பமாட்டான். எல்லாவற்றுக்கும், அவன் ஒரு தடவை வந்து விட்டுப் போகட்டும். பெரிய பழுவேட்டரையர் வந்ததும் இலங்கைக்கு ஆள் அனுப்புவது பற்றி முடிவு செய்யலாம். அவர் எப்போது திரும்புகிறார்?''

''இன்று இரவு கட்டாயம் வந்து விடுவார் !''

''காஞ்சிக்கும் நாளைய தினம் ஓலை எழுதி அனுப்பலாம். இந்தப் பிள்ளையி



னிடமே அந்த ஓலையையும் கொடுத்தனுப்பலாம் அல்லவா ?''

''இந்தச் சிறுவன் காஞ்சியிலிருந்து ஒரே மூச்சில் வந்திருக்கிறான். சில நாள் இவன் இங்கேயே தங்கி இளைப்பாறி விட்டுப் போகட்டும். வேறு ஆளிடம் ஓலையைக் கொடுத்து அனுப்பலாம்.''

'' அப்படியே செய்க. இளவரசன் வருகிற வரையில்கூட இவன் இங்கேயே இருக்கலாம்!''

இச் சமயம் மலையமான் மகள் எழுந்து நிற்கவே, சின்னப் பழுவேட்டரையர், ''இன்று அதிக நேரம் தங்களுக்குப் பேசும் சிரமம் கொடுத்து விட்டேன். மன்னிக்க வேணும். தேவி எச்சரிக்கை செய்யும் வரையில் நீண்டு விட்டது!'' என்று சொன்னார்.

"தளபதி! இந்தப் பிள்ளை நம் விருந்தாளி. இவனுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுங்கள். சக்கரவர்த்திக்கு மட்டும் உடம்பு சரியாயிருந்தால், இவனை நமது அரண்மனையிலேயே இருக்கச் சொல்லியிருக்கலாம்!" என்றாள் மலையமான் மகள்.

"நான் கவனித்துக் கொள்கிறேன், தாயே! தங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். நன்றாய்க் கவனித்துக் கொள்கிறேன்!" என்றார் சின்னப் பழுவேட்டரையர். அப்போது அவரையறியாமலே அவருடைய ஒரு கை மீசையைத் தொட்டு முறுக்கிற்று.

முப்பதாம் அத்தியாயம்

சித்திர மண்டபம்

சின்னப் பழுவேட்டரையர் வந்தியத்தேவனைத் தம்முடன் அஸ்தான மண்டபத்துக்கு அழைத்துப் போனார். சக்கரவர்த்தியிடம் அவன் கூறியது என்ன என்பதைப் பற்றி அவன் சொன்ன சமாதானம் அவருக்கு அவ்வளவாகப் பூரண திருப்தி அளிக்கவில்லை. சக்கரவர்த்தியைத் தனியாகப் போய்ப் பார்க்கும்படி அவனுக்கு அநுமதி அளித்தது ஒரு வேளை தவறோ என்றும் தோன்றியது. ஆதித்தகரிகாலனிடமிருந்து வந்தவனாதலால், அவனைப் பற்றிச் சந்தேகிக்க வேண்டியது முறை. ஆனால் தலைமையானார் முத்திரை மோதிரத்துடன் அனுப்பியுள்ளபடியால் சந்தேகிக்க இடமில்லை. ஆகா! இம்மாதிரி காரியங்களில் பெரியவருக்கு வேறொருவர் ஜாக்கிரதை சொல்லித் தர வேண்டுமா, என்ன? ஆனாலும், தாம் திடீரென்று தரிசன மண்டபத்துக்குள் சென்ற பொழுது அவ்வாலிபன் தயங்கி நின்று பயந்தவன் போல் விழித்தது அவர் கண் முன்னால் தோன்றியது. "அபாயம்! அபாயம்!" என்று அவன் கூவியது நன்றாகக் காதில் விழுந்ததாக ஞாபகம் வந்தது. "அபயம்" என்று சொல்லியிருந்தால், அது தம் காதில், "அபாயம்" என்று விழுந்திருக்கக் கூடியது சாத்தியமா? — எல்லாவற்றுக்கும் இவனை உடனே திருப்பி அனுப்பாமலிருப்பது நல்லது. தலைமையானார் வந்த பிறகு இவனைப் பற்றி நன்றாய்த் தெரிந்து கொண்டு பிறகு உசிதமானதைச் செய்யலாம். இம்மாதிரி திறனாகிய வாலிபனை நாம் நம்முடைய அந்தரங்கக் காவற்படையில் சேர்த்துக் கொள்ளப் பார்க்க வேண்டும். சமயத்தில் உபயோகமாயிருப்பான். ஏன்? இவனுக்கு இவனுடைய முன்னோர்களின் பழைய அரசில் ஒரு பகுதியை வாங்கிக் கொடுத்தாலும் கொடுக்கலாம். இம்மாதிரி பிள்ளைகளுக்கு ஒரு முறை உதவி செய்து விட்டால், அப்புறம் என்றைக்கும் நமக்குக் கட்டுப்பட்டு நன்றியுடனிருப்பார்கள். ஒரு வேளை, இவன் உறுதியான விரோதி என்று ஏற்பட்டு விட்டால், அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எதற்கும் தலைமையானார் வந்து சேரட்டும்; பார்க்கலாம்.

அஸ்தான மண்டபம் சென்றதும் வந்தியத்தேவன் அப்புறமும் இப்புறமும் ஆவலுடன் பார்க்கத் தொடங்கினான். தளபதியிடம் தான் ஓலையை எடுத்துக் கொடுத்த இடத்தில் உற்று உற்று நன்றாகப் பார்த்தான். தப்பித் தவறி இன்னொரு ஓலை, — அந்த முக்கியமான ஓலை கிடக்கிறதா என்றுதான். அதை மட்டும் கண்டு பிடிக்க முடியாவிட்டால், தன்னைப் போன்ற மூடன் வேறு யாரும் இருக்க முடியாது! உலகமே புகழும் சோழ குலத்து அரசிளங்குமரியைத் தான் பார்க்க முடியாமலே போய்விடும். ஆதித்த கரிகாலர் தன்னிடம் ஒப்புவித்த பணியில் சரி பாதியைச் செய்ய முடியாமலே போய்விடும்.

சின்னப் பழுவேட்டரையர் அங்கிருந்த ஏவலாளர்களில் ஒருவனைப் பார்த்து, "இந்தப் பிள்ளையை நமது அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போ! விருந்தாளி விடுதியில் வைத்து வேண்டிய வசதிகள் செய்து கொடுத்துப் பார்த்துக் கொள்! நான் வரும் வரையில் அங்கேயே இரு!" என்றார்.

வந்தியத் தேவனும் ஏவலாளனும் வெளியே சென்ற உடன், இன்னொருவன் தளபதியிடம் பயபக்தியுடன் நெருங்கி ஓர் ஓலைச் சுருளை நீட்டினான். "இங்கிருந்து தரிசன மண்டபத்துக்குப் போகும் வழியில் இது கிடந்தது. இப்போது சென்ற பையனுடைய மடியிலிருந்து விழுந்திருக்கக் கூடும்!" என்று சொன்னான்.

தளபதி அதை ஆர்வத்துடன் வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அவருடைய புருவங்கள் நெற்றியின் சரி பாதி வரையில் உயர்ந்து நெரிந்தன. அவருடைய முகத்தில் கொடூரமான மாறுதல் ஒன்று உண்டாயிற்று.

"ஆஹா! இளைய பிராட்டிக்கு ஆதித்த கரிகாலர் எழுதிய ஓலை. 'அந்தரங்கமான காரியங்களுக்கு உண்மையான வீரன் ஒருவன் — நினைத்த காரியத்தை முடிக்கக் கூடிய திறன்,— வேண்டும் என்று கேட்டிருந்தாயல்லவா? அதற்காக இவனை அனுப்பியிருக்கிறேன். இவனைப் பூரணமாக நம்பி எந்த முக்கியமான காரியத்தையும் ஒப்புவிக்கலாம்' என்று இளவரசர் தம் கைப்பட எழுதியிருக்கிறார். ஆ! இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. இந்த ஓலையைப் பற்றிப் பெரியவருக்குத் தெரியுமோ, என்னவோ? இவன் விஷயத்தில் இன்னும் அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்!" என்று கோட்டைத் தளபதி தமக்குள்ளே சொல்லிக் கொண்டார். ஓலையைப் பொறுக்கிக் கொண்டு வந்தவனை அழைத்துக் காதோடு சில விஷயங்களைக் கூறினர். அவனும் உடனே புறப்பட்டுச் சென்றான்.

ஃ ஃ ஃ

சின்னப் பழுவேட்டரையரின் மாளிகையில் வந்தியத் தேவனுக்கு ஆசார உபசாரங்கள் பலமாக நடந்தன. அவனைக் குளிக்கச் செய்து, புதிய உடைகள் அணிந்து கொள்ளக் கொடுத்தார்கள். நல்ல உடைகள் அணிந்து கொள்வதில் பிரியமுள்ள வந்தியத் தேவனும் குதூகலத்தில் ஆழ்ந்தான். காணமல் போன ஓலையைப் பற்றிய கவலையைக்கூட மறந்துவிட்டான். புது உடை உடுத்திய பின்னர் இராஜபோகமான அறுசுவைச் சிற்றுண்டிகளை அளித்தார்கள். பசித்திருந்த வந்தியத்தேவன் அவற்றை ஒரு கை பார்த்தான். பின்னர், அவனைச் சின்னப் பழுவேட்டரையர் மாளிகையின் சித்திர மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். "தளபதி வருகிற வரையில் இந்த மண்டபத்திலுள்ள அபூர்வ சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்!" என்றார்கள். இவ்விதம் சொல்லிவிட்டு, காவலர்கள் மூன்று பேர் மண்டபத்தின் வெளியில் உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டே சொக்கட்டான் ஆடத் தொடங்கினார்கள்.

சோழ குலத்தின் புதிய தலைநகரமான தஞ்சைபுரி அந்த நாளில் சிற்ப சித்திரங்களுக்குப் பெயர் போனதாயிருந்தது. திருவையாற்றில் இசைக் கலையும் நடனக் கலையும் வளர்ந்தது போல் தஞ்சையில் சிற்ப சித்திரக் கலைகள் வளர்ந்து வந்தன.

முக்கியமாக, சின்னப் பழுவேட்டரையர் மாளிகையில் இருந்த சித்திர மண்டபம் மிகப் பிரசித்தி அடைந்திருந்தது. அந்த மண்டபத்துக்குள் இப்போது வந்தியத்தேவன் பிரவேசித்தான். சுவர்களில் பல அழகிய வர்ணங்களில் தீட்டியிருந்த அற்புதமான சித்திரங்களைப் பார்த்துப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தான். அந்த ஆனந்தத்தில் தன்னை மறந்தான்: தான் வந்த முக்கியமான காரியத்தையுங்கூட மறந்தான்.

சோழ வம்சத்தின் பூர்விக அரசர்களையும் அவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களையும் சித்திரிக்கும் காட்சிகள் அவனுடைய கவனத்தைக் கவர்ந்து பரவச மடையச் செய்தன. முக்கியமாக, சென்ற நூறு வருஷத்துச் சோழர்களின் சரித்திரம் அந்தச் சித்திர மண்டபத்தில் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. வந்தியத்தேவனுக்கு அதிகமான ஆர்வத்தை உண்டாக்கிய சித்திரங்களும் அவைதான்.

இந்தக் கட்டத்தில், சென்ற நூறு வருஷமாகப் பழையாறையிலும் தஞ்சையிலும் இருந்து அரசு புரிந்த சோழ மன்னர்களின் வம்ச பரம்பரையை வாசகர்களுக்குச் சுருக்கமாக ஞாபகப்படுத்த விரும்புகிறோம். இனி இந்தக் கதையில், மேலே வரும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதற்கு அதைத் தெரிந்து கொள்வது மிக்க உபயோகமாயிருக்கும்.

தொண்ணூற்றாறு போர்க் காயங்களைத் தன் திருமேனியில் ஆபரணங்களாகப் பூண்ட **விஜயாலய சோழனைப்** பற்றி முன்னமே கூறியிருக்கிறோம்.

சோழ மன்னர்கள் **பரகேசரி, இராஜகேசரி** என்னும் பட்டங்களை மாறி மாறிப் புனைந்து கொள்ளுவது வழக்கம். பரகேசரி விஜயாலயனுக்குப் பிறகு அவனுடைய புதல்வன் **இராஜ கேசரி ஆதித்த சோழன்** பட்டத்துக்குவந்தான். அவன் தந்தைக்குத் தகுந்த தனயனாக விளங்கினான். முதலில் அவன் பல்லவர் கட்சியில் நின்று பாண்டியனைத் தோற்கடித்துச் சோழ ராஜ்யத்தை நிலைப்படுத்திக் கொண்டான். பிறகு, பல்லவன் அபராஜிதவர்மனோடு போர் தொடுத்தான். யானை மீது அம்பாரியில் இருந்து போர் புரிந்த அபராஜிதவர்மன் மீது ஆதித்த சோழன் தாவிப் பாய்ந்து அவனைக் கொன்று தொண்டை மண்டலத்தை வசப்படுத்தினான். பிறகு கொங்கு மண்டலமும் இவன் ஆட்சிக்குள் வந்தது. ஆதித்

தன் சிறந்த சிவபக்தன். காவிரி ஆறு உற்பத்தியாகும் ஸஹ்யமலையிலிருந்து அப் புண்ணிய நதி கடலில் கலக்கும் இடம் வரையில் ஆதித்த சோழன் பல சிவாலயங்களை எடுப்பித்தான்.

இராஜகேசரி ஆதித்த சோழனுக்குப் பிறகு **பரகேசரி பராந்தகன்** பட்டத்துக்கு வந்தான். நாற்பத்தாறு ஆண்டு காலம் அரசு புரிந்தான். இமயத்தில் புலிச் சின்னம் பொறித்த கரிகால் பெருவளத்தானுக்குப் பின்னர் சோழ வம்சத்தில் மாபெரும் மன்னன் பராந்தகன்தான். வீர நாராயணன், பண்டித வத்சலன், குஞ்சா மல்லன், சூர சிகாமணி என்பன போன்ற பல பட்டப் பெயர்கள் அவனுக்கு உண்டு. ''மதுரையும் ஈழமும் கொண்டவன்'' என்ற பட்டமும் உண்டு. இந்த முதற்பராந்தகன் காலத்திலேயே சோழ சாம்ராஜ்யம் கன்யா குமரியிலிருந்து கிருஷ்ணா நதி வரையில் பரவியது. ஈழ நாட்டிலும் சிறிது காலம் புலிக்கொடி பறந்தது. தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொன் கூரை வேய்ந்து புகழ்பெற்ற பராந்தகனும் இவனேதான். இவனுடைய ஆட்சியின் இறுதி நாட்களில் சோழ சாம்ராஜ்யத்துக்குச் சில பேரபாயங்கள் வந்தன. அந்த நாளில் வடக்கே பெருவலி படைத்திருந்த இராஷ்டிர கூடர்கள் சோழர்களுடைய பெருகி வந்த பலத்தை ஒடுக்க முனைந்தார்கள். சோழ சாம்ராஜ்யத்தின் மீது படை எடுத்து வந்து ஓரளவு வெற்றியும் அடைந்தார்கள்.

பராந்தகச் சக்கரவர்த்திக்கு மூன்று புதல்வர்கள் உண்டு. இவர்களில் வீராதி வீரனாக விளங்கியவன் மூத்த புதல்வனாகிய **இராஜாதித்தன்** என்பவன். வடநாட்டுப் படையெடுப்பை எதிர்பார்த்து இராஜாதித்யன் திருமுனைப் பாடி நாட்டில் பெரும் சைன்யத்துடன் பல காலம் தங்கியிருந்தான். தன் தந்தையின் பெயர் விளங்கும்படி வீரநாராயண ஏரி எடுத்தான்.

அரக்கோணத்துக்கு அருகில் **தக்கோலம்** என்னுமிடத்தில் சோழ சைன்யத்துக்கும் இராஷ்டிரகூடப் படைகளுக்கும் பயங்கரமான பெரும் போர் நடந்தது. இந்தப் போரில் எதிரிப் படைகளை அதா றதம் செய்து தன் வீரப் புகழை நிலைநாட்டிய பிறகு, இராஜாதித்யன் போர்க்களத்தில் உயிர் துறந்து வீர சொர்க்கம் அடைந்தான். இவனும் பல்லவ அபராஜித வர்மனைப் போல் யானை மீதிருந்து போர் புரிந்து யானை மேலிருந்தபடியே இறந்தபடியால், இவனை ''ஆனைமேல் துஞ்சிய தேவன்'' என்று கல்வெட்டுச் சாஸனங்கள் போற்றிப் புகழ்கின்றன.

இராஜாதித்யன் மட்டும் இறந்திரா விட்டால், அவனே பராந்தக சக்கரவர்த்திக்குப் பிறகு சோழ சிம்மாதனம் ஏறியிருக்க வேண்டும். இவனுடைய சந்ததிகளே இவனுக்குப் பின்னர் முறையாகப் பட்டத்துக்கு வந்திருக்க வேண்டும்.

ஆனால் இளவரசன் இராஜாதித்யன் பட்டத்துக்கு வராமலும் சந்ததியில்லாமலும் இறந்து விடவே, இவனுடைய இளைய சகோதரர் **கண்டராதித்த தேவர்** தந்தையின் விருப்பத்தின்படி இராஜகேசரி பட்டத்துடன் சிங்காதனம் ஏறினார்.

இவர் தமது தந்தையையும் பாட்டனையும் போலவே சிவபக்தி மிகுந்தவர். அத்துடன் தமிழன்பு மிக்கவர். உண்மையில் இவருக்கு இராஜ்யம் ஆளுவதில் அவ்வளவு சிரத்தையே இருக்கவில்லை. ஆலய வழிபாட்டிலும் தமிழ் இன்பத்திலும் அதிகமாக ஈடுபட்டிருந்தார். மகான்களாகிய நாயன்மார்களைப் பின்பற்றிச் சிவபெருமான் மீது துதிப் பாடல்கள் பாடினார். 'திருவிசைப்பா' என்று வழங்கும் இப் பாடல்களில் கடைசிப் பாட்டில் இவர் தம்மைப் பற்றியே பின்வருமாறு சொல்லிக் கொண்டிருக்கிறார் :

''சீரான்மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழி வேந்தன்
தஞ்சையர்கோன் கலந்த
ஆராவின் சொற் கண்டராதித்தன்
அருந்தமிழ் மாலை வல்லார்
பேரா உலகிற் பெருமை யோடும்
பேரின்ப மெய்துவரே!''

விஜயாலயனுக்குப் பிற்பட்ட சோழ மன்னர்கள் பழையாறையிலும் தஞ்சையிலும் வசித்த போதிலும் பூர்வீகச் சோழத் தலைநகர் உறையூர் என்னும் பாத்தியதையை விட்டு விடவில்லை. உறையூருக்கு இன்னொரு பெயர் கோழி என்பதாகும். ஆகையால் சோழ மன்னர்கள் தங்களைக் **''கோழி வேந்தர்''** என்று சொல்லிக் கொண்டார்கள்.

கண்டராதித்த தேவர் சிம்மாசனத்திலிருந்து பெயரளவில் அரசு புரிந்த போதிலும், உண்மையில் அவருடைய இளைய சகோதரனாகிய **அரிஞ்சயன்**தான் இராஜ்ய விவகாரங்களைக் கவனித்து

வந்தான். இராஜாதித்யனுக்குத் துணையாக அரிஞ்சயன் திருநாவலூர் முதலிய இடங்களில் சைன்யங்களுடன் தங்கியிருந்தான். இராஷ்டிரகூடர்களுடன் வீரப் போர் நடத்தினான். தக்கோலத்தில் சோழ சைன்யத்துக்கு நேர்ந்த பெருந் தோல்வியை விரைவிலேயே வெற்றியாக மாற்றிக் கொண்டான். இராஷ்டிரகூடர் படையெடுப்பைத் தென்பெண்ணைக்கு அப்பாலேயே தடுத்து நிறுத்தினான்.

எனவே, இராஜகேசரி கண்டராதித்த சோழர், தம் தம்பி அரிஞ்சயனுக்கு யுவராஜ பட்டம் சூட்டி அவனே தமக்குப்பின் சோழ சிங்காதனத்துக்கு உரியவன் என்றும் நாடறியத் தெரிவித்து விட்டார்.

இவ்விதம் கண்டராதித்தர் முடிவு செய்வதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருந்தது. இவருடைய மூத்த மனைவி இவர் பட்டத்துக்கு வருவதற்கு முன்பே காலமாகி விட்டாள். பிறகு வெகு காலம் கண்டராதித்தர் மணம் புரிந்து கொள்ளவில்லை.

ஆனால் இவருடைய தம்பி அரிஞ்சயனுக்கோ அழகிலும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த புதல்வன் இருந்தான். பாட்டனாரின் பராந்தகன் என்னும் பெயரையும், மக்கள் அளித்த சுந்தர சோழன் என்னும் காரணப் பெயரையும் சூட்டிக் கொண்டிருந்தான்.

எனவே, தமக்குப் பிறகு தமது சகோதரன் அரிஞ்சயனும் அரிஞ்சயனுக்குப் பிறகு அவனுடைய புதல்வன் சுந்தரசோழனும் பட்டத்துக்கு வர வேண்டும் என்று கண்டராதித்தர் திருவுளங் கொண்டார். இந்த ஏற்பாட்டிற்குச் சாமந்த கணத்தினர், தண்டநாயகர்கள், பொதுஜனப் பிரதிநிதிகள் எல்லாருடைய சம்மதத்தையும் ஒருமனதாகப் பெற்றுப் பகிரங்கமாக உலகறியத் தெரிவித்தும் விட்டார்.

இந்த ஏற்பாடுகள் எல்லாம் நடந்து முடிந்த பிறகு கண்டராதித்தரின் வாழ்க்கையில் ஓர் அதிசயச் சம்பவம் நிகழ்ந்தது. மழவரையன் என்னும் சிற்றரசன் திருமகளை அவர் சந்திக்கும்படி நேர்ந்தது. அந்த மங்கையர் திலகத்தின் அழகும் அடக்கமும் சீலமும் சிவ பக்தியும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. முதிர்ந்த பிராயத்தில் அந்தப் பெண்மணியை மணந்து கொண்டார். இந்தத் திருமணத்தின் விளைவாக உரிய காலத்தில் ஒரு குழந்தையும் உதித்தது. அதற்கு மதுராந்தகன் என்று பெயரிட்டுப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தார்கள். ஆனால் அரசர் அரசி இருவருமே இராஜ்யம் சம்பந்தமாக முன்னம் செய்திருந்த ஏற்பாட்டை மாற்ற விரும்பவில்லை. தம்பதிகள் இருவரும் சிவபக்தியிலும், விரக்தி மார்க்கத்திலும் ஈடுபட்டவர்களாதலால் தங்கள் அருமைப் புதல்வனையும் அந்த மார்க்கத்திலேயே வளர்க்க விரும்பினார்கள். கேவலம் இந்த உலக சாம்ராஜ்யத்தைக் காட்டிலும் சிவலோக சாம்ராஜ்யம் எவ்வளவோ மேலானது என்று நம்பியவர்களாதலால், அந்தச் சிவலோக சாம்ராஜ்யத்துக்கு உரியவனாக மதுராந்தகனை வளர்க்க ஆசைப்பட்டார்கள். ஆகையால் கண்டராதித்தர் தமக்குப் பிறகு தம் சகோதரன் அரிஞ்சயனும் அவனுடைய சந்ததிகளுமே சோழ சாம்ராஜ்யத்துக்கு உரியவர்கள் என்ற தமது விருப்பத்தைப் பகிரங்கப்படுத்தி நிலைநாட்டினார்.

எனவே, இராஜாதித்தன், கண்டராதித்தர் என்னும் இரு உரிமையாளர் வம்சத்தைத் தாண்டி அரிஞ்சயன் வம்சத்தாருக்குச் சோழ சிங்காதனம் உரிமையாயிற்று.

கண்டராதித்தருக்குப் பிறகு அதிக காலம் **பரகேசரி அரிஞ்சயன்** ஜீவிய வந்தனாக இருக்கவில்லை. ஒரு வருஷத்திலேயே தமையனாரைப் பின் தொடர்ந்து தம்பியும் கைலாச பதவிக்குச் சென்று விட்டான்.

பின்னர், இளவரசர் சுந்தரசோழருக்கு நாட்டாரும் சிற்றரசர்களும் பிற அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்து முடி சூட்டி மகிழ்ந்தார்கள். **இராஜ கேசரி சுந்தர சோழரும்** அதிர்ஷ்டவசத்தினால் தமக்குக் கிடைத்த மகத்தான பதவியைத் திறம்படச் சிறப்பாக வகித்தார். ஆட்சியின் ஆரம்ப காலத்தில் பல வீரப் போர்கள் புரிந்து பாண்டிய நாட்டையும் தொண்டை மண்டலத்தையும் மீண்டும் வென்றார். இராஷ்டிரகூடப் படைகளைத் தென்பண்ணைக் கரையிலிருந்து விரட்டி அடித்தார்.

சுந்தரசோழ சக்கரவர்த்தியின் புதல்வர்களான ஆதித்த கரிகாலரும் அருள்மொழி வர்மரும் தந்தையை மிஞ்சக் கூடிய இணையற்ற வீரர்களாயிருந்தார்கள். அவர்கள் இருவரும் தந்தைக்குப் பரிபூரண உதவி செய்தார்கள். அவர்கள் மிகச் சிறு பிராயத்திலேயே போருக்குச் சென்று முன்னணியில் நின்று போர் புரிந்தார்கள் ; அவர்கள் சென்ற போர்முனைகளி லெல்லாம் விஜயலக்ஷ்மி சோழர்களின் பக்கமே நிலை நின்று வந்தாள்.

முப்பத்தோராம் அத்தியாயம்

"திருடர்! திருடர்!"

விஜயாலய சோழர் முதல் இரண்டாம் பராந்தகராகிய சுந்தர சோழர் வரையில் சோழ மன்னர்களின் உயிர்ச் சித்திரங்களை நம் வீரன் வந்தியத்தேவன் பார்த்து மகிழ்ந்தான். ஆஹா! இவர்களில் ஒவ்வொருவரும் எப்பேர்ப்பட்டவர்கள்? எத்தகைய மகா வீரர்கள்! உயிரைத் திருணமாக மதித்து எவ்வளவு அரும்பெரும் செயல்களை இயற்றியிருக்கிறார்கள்! கதைகளிலும் காவியங்களிலும் கூட இப்படிக் கேட்டதில்லையே? இத்தகைய மன்னர் பரம்பரையைப் பெற்ற சோழ நாடு பாக்கியம் செய்த நாடு; இன்று அவர்களுடைய ஆட்சியின் கீழ் உள்ள நாடுகள் எல்லாம் பாக்கியம் செய்த நாடுகள்தான்.

மேற்கூறிய சோழ மன்னர்களின் சரித்திரங்களைச் சித்திரித்த காட்சிகளில் இன்னொரு முக்கியமான அம்சத்தை வந்தியத்தேவன் கவனித்தான். ஒவ்வொரு சோழ அரசருக்கும் பழுவூர்ச் சிற்றரசர் வம்சத்தினர் தலைசிறந்த உதவிகள் செய்திருக்கிறார்கள்; வீரத் தொண்டுகள் பல புரிந்து வந்திருக்கிறார்கள்.

முத்தரையர் வசத்திலிருந்த தஞ்சைக் கோட்டையை முற்றுகையிட்டு முதலில் அந்நகரில் பிரவேசித்தவர் ஒரு பழுவேட்டரையர். இரு காலும் இழந்த விஜயாலய சோழன் திருப்புறம் பயம் போர்க்களத்தில் புகுந்து அதிபராக்கிரமச் செயல்களைப் புரிந்த போது அவனுக்குத் தோள் கொடுத்துத் தூக்கிச் சென்றவர் ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் தலையில் கிரீடத்தை வைத்துப் பட்டாபிஷேகம் செய்வித்தவர் ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் யானை மீது பாய்ந்து பல்லவ அபராஜித வர்மனைக் கொன்ற போது ஆதித்தன் பாய்வதற்கு வசதியாக முதுகும் தோளும் கொடுத்தவர் ஒரு பழுவேட்டரையர். பராந்தக சக்கரவர்த்தி நடத்திய பல போர்களில் முன்னணியில் புலிக் கொடியை எடுத்துச் சென்றவர்கள் பழுவேட்டரையர்கள். இராஜாதித்யன் போர்க்களத்தில் காயம் பட்டு விழும் போது அவனை ஒரு பழுவேட்டரையர் தம் மடியின் மீது போட்டுக் கொண்டு, "இராஷ்டிரகூடப் படைகள் தோற்று ஓடுகின்றன!" என்ற செய்தியைத் தெரிவித்தார். அவ்விதமே அரிஞ்சயருக்கும் சுந்தரசோழருக்கும் வீரத் தொண்டுகள் புரிந்து உதவியவர்கள் பழுவேட்டரையர்கள்தான்.

இதையெல்லாம் சித்திரக் காட்சிகளில் பிரத்தியட்சமாகப் பார்த்த வல்லவரையன் சொல்ல முடியாத வியப்பில் ஆழ்ந்தான். அண்ணன் தம்பிகளான பழுவேட்டரையர்கள் இன்று சோழ நாட்டில் இவ்வளவு அதிக்கம் வகிப்பதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. சுந்தர சோழர் எது விஷயத்திலும் அவர்களுடைய யோசனையைக் கேட்டு நடப்பதிலும் வியப்பில்லை.

ஆனால், தான் இப்போது பெரிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பது என்னவோ நிச்சயம். சின்னப் பழுவேட்டரையருக்குத் தன் பேரில் ஏதோ சந்தேகம் ஊர்ஜிதமாகி விடும். முத்திரை மோதிரத்தின் குட்டு வெளியாகி விடும். பிறகு தன்னுடைய கதி அதோகதிதான்! சின்னப் பழுவேட்டரையரின் நிர்வாகத்தில் உள்ள தஞ்சாவூர்ப் பாதாளச் சிறையைப் பற்றி வல்லவரையன் கேள்விப்பட்டிருந்தான். அதில் ஒரு வேளை தன்னை அடைத்து விடக் கூடும். பாதாளச் சிறையில் ஒருவனை ஒரு தடவை அடைத்து விட்டால், பிறகு திரும்பி வெளியேறுவது அநேகமாக நடவாத காரியம். அப்படி வெளியேறினாலும் எலும்பும் தோலுமாய், அறிவை அடியோடு இழந்து, வெறும் பித்துக்குளியாகத்தான் வெளியேற முடியும்!

ஆகா! இத்தகைய பேராபத்திலிருந்து தப்புவது எப்படி? ஏதாவது யுக்தி செய்து பெரியவர் வருவதற்குள் கோட்டையை விட்டு வெளியேறி விட வேண்டும். பழுவூர் இளைய ராணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை கூட நம் வீரனுக்கு இப்போது போய் விட்டது. உயிர் பிழைத்து, பாதாளச் சிறைக்குத் தப்பி வெளியேறி விட்டால் போதும். ஓலை இல்லாவிட்டாலும், குந்தவைப் பிராட்டியை நேரில் பார்த்துச் செய்தியைச் சொல்லி விடலாம். நம்பினால் நம்பட்டும், நம்பாவிட்டால் போகட்டும்; ஆனால் தஞ்சைக் கோட்டையை விட்டு வெளியேறுவதற்கு என்ன வழி?

தான் உடுத்தியிருந்த பழைய ஆடைகள் என்ன ஆயின என்ற சந்தேகம் திடீரென்று வந்தியத் தேவன் மனத்தில் உதயமாயிற்று. தன்னுடைய

உடைகளைப் பரிசீலனை செய்து பார்ப்பதற்காகவே தனக்கு இவ்வளவு உபசாரம் செய்து புது ஆடைகளும் கொடுத்திருக்கிறார்கள்! குந்தவை தேவியின் ஓலை தளபதியிடம் அகப்பட்டிருக்க வேண்டும். சந்தேகமில்லை. தான் புலவர்களுடன் திரும்பிப் போய் விடா வண்ணம் தன் கையை இரும்புப் பிடியாக அவர் பிடித்ததன் காரணமும் இப்போது தெரிந்தது. ஒரு ஆளுக்கு மூன்று ஆளாய்த் தன்னுடன் அனுப்பிய காரணமும் தெரிந்தது. ஆகா! ஒரு யுக்தி! உடனே ஒரு யுக்தி கண்டு பிடிக்க வேணும்! பழுவேட்டரையர் திரும்புவதற்குள்ளே கண்டு பிடிக்க வேணும்! — இதோ தோன்றிவிட்டது ஒரு யுக்தி! பார்க்க வேண்டியதுதான் ஒரு கை! வீர வேல்! வெற்றி வேல்!

வந்தியத் தேவன் சித்திர மண்டபத்தின் பலகணி வழியாக வெளியே பார்த்தான். சின்னப் பழுவேட்டரையர் பரிவாரங்கள் புடைசூழக் குதிரை மேல் வந்து கொண்டிருந்தார். ஆகா! இதுதான் சமயம்! இனி ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது!

வாசற்படிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சொக்கட்டான் ஆடிய ஏவலாளர்கள் மூவரும் ஆட்டத்தை நிறுத்திவிட்டு எழுந்தார்கள். மாளிகை வாசலில் சின்னப் பழுவேட்டரையர் வரும் சத்தம் அவர்கள் காதிலும் விழுந்தது.

வந்தியத் தேவன் அவர்கள் அருகில் நெருங்கி, ''அண்ணன்மார்களே! நான் தரித்திருந்த உடைகள் எங்கே?'' என்று கேட்டான்.

''அந்த அழுக்குத் துணிகள் இப்போது என்னத்துக்கு? எஜமான் உத்தரவுப்படி புதிய பட்டுப் பீதாம்பரங்கள் உனக்குக் கொடுத்திருக்கிறோமே!'' என்றான் ஒருவன்.

''எனக்குப் புதிய உடைகள் தேவையில்லை. என்னுடைய பழைய துணிகளே போதும். அவற்றைச் சீக்கிரம் கொண்டு வாருங்கள்!''

''அவை சலவைக்குப் போயிருக்கின்றன. வந்தவுடனே தருகிறோம்.''


''அதெல்லாம் முடியாது. நீங்கள் திருடர்கள். என்னுடைய பழைய உடையில் பணம் வைத்திருந்தேன். அதைத் திருடிக் கொள்வதற்காக எடுத்திருக்கிறீர்கள். உடனே கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால்...!''

''இல்லா விட்டால் என்ன செய்து விடுவாய் தம்பி! எங்கள் தலையை வெட்டித் தஞ்சாவூருக்கு அனுப்பி விடுவாயோ? ஆனால் இதுதான் தஞ்சாவூர்; ஞாபகம் இருக்கட்டும்!''

''அடே! என் துணிகளை உடனே கொண்டு வருகிறாயா இல்லையா?''

''இருந்தால்தானே தம்பி, கொண்டு வருவேன்! அந்த அழுக்குத் துணிகளை வெட்டாற்று முதலைக்குப் போட்டு விட்டோம்! முதலை வயிற்றில் போனது திரும்பி வருமா?''

''திருட்டுப் பயல்களா! என்னுடன் விளையாடுகிறீர்களா? இதோ உங்கள்



எஜமானனிடம் சென்று சொல்கிறேன், பாருங்கள்!'' என்று வந்தியத்தேவன் வாசற்படியைத் தாண்டத் தொடங்கினான். மூவரில் ஒருவன் அவனைத் தடுப்பதற்காக நெருங்கினான். வந்தியத்தேவன் பலமாக ஒரு குத்து விட்டான். அவ்வளவுதான்; அந்த ஆள் மல்லாந்து கீழே விழுந்தான். அவன் மூக்கிலிருந்து இரத்தம் சொட்டத் தொடங்கியது.

இன்னொருவன் வந்தியத் தேவனுடன் மல் யுத்தம் செய்ய வருபவனைப் போல் இரண்டு கைகளையும் முன்னால் நீட்டிக் கொண்டு வந்தான். நீட்டிய கைகளை வந்தியத்தேவன் பற்றிக் கொண்டு தன் கால்களில் ஒன்றை எதிராளியின் கால்களின் மத்தியில் விட்டு ஒரு முறுக்கு முறுக்கினான்; அவ்வளவுதான்! அந்த மனிதன் 'அம்மாடி' என்று அலறிக் கொண்டு கீழே உட்கார்ந்து விட்டான். இதற்குள் மூன்றாவது ஆளும் நெருங்கி வரவே, வந்தியத் தேவன் தன் கால்களை எடுத்துக் கொண்டு ஒரு காலால் எதிரியின் முழங்கால் மூட்டைப் பார்த்து ஒரு உதை விட்டான். அவனும் அலறிக் கொண்டே கீழே விழுந்தான்.

மூன்று பேரும் சட் புட்டென்று எழுந்து மறுபடியும் வந்தியத்தேவனைத் தாக்குவதற்கு வளைத்துக் கொண்டு வந்தார்கள். வெகு ஜாக்கிரதையாகவே வந்தார்கள்.

இதற்குள் மாளிகை வாசலில் குதிரை வந்து நின்ற சப்தம் கேட்டது.

வந்தியத்தேவன் தன் குரலின் சக்தியையெல்லாம் உபயோகித்து ''திருடர்கள்! திருடர்கள்!'' என்று சத்தமிட்டுக் கொண்டே அவர்கள் மீது பாய்ந்தான். மூன்று பேரும் அவனைப் பிடித்து நிறுத்தப் பார்த்தார்கள். மறுபடியும் ''திருட்டுப் பயல்கள்!'', ''திருட்டுப் பயல்கள்!'' என்று பெருங்குரலில் கூச்சலிட்டான் வந்தியத் தேவன்.

அச்சமயம் சின்னப்பழுவேட்டரையர் ''இங்கே என்ன ரகளை?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார். **(தொடரும்)**



நகராசுரனும் நரகாசுரனும்

-கதிர்-

சில தினங்களுக்கு முன், அடையாறு பாலம் அருகே, மாலை மங்கும் நேரத்தில் நகராசுரன் காற்றாட நடந்து கொண்டிருந்தான்.

எதிரில் வேறொரு அசுரன் வருவதைப் பார்த்து விட்டு, ''ஏய்! ஓய்! யார் அது? நில்!'' என்று இரைந்தான் நகராசுரன். அதைக் கேட்டுச் சிறிதும் பயமில்லாமல் நின்ற அந்த அசுரன், ''என்னைத் தெரியாதா? நரகாசுரன்தான் நான்!'' என்றான்.

''அப்படியா அப்படியா? பார்த்து ரொம்ப காலமாயிற்று. எங்கேயிந்தப் பக்கம் இப்படி.....?''

''தீபாவளி சமயமில்லையா? நான் பூமியில் சுற்றாத இடமில்லை; இங்கேயும் வந்தேன்... நல்லது நீர் இங்கே எப்படி வந்தீர்?''

''என் பெயரே நகராசுரனாயிற்றே. சென்னை என் நகரங்களில் ஒன்று. ஆகையால் இதைப் பார்த்து விட்டுப் போக நினைத்து வந்தேன். தீபாவளி சமயம் என்பது இப்போது உம்மைப் பார்த்துத் தான் தெரிந்தது. ரொம்ப நல்லதாகப் போயிற்று. நரகமெல்லாம் எப்படி இருக்கிறது?'' இவ்வாறு நகராசுரன் ஒரு கேள்வியைப் போட்டு வைக்கவே, ''ஏதோ இருக்கிறது... காலந் தள்ளிக்கொண்டு போகிறோம்!'' என்று சொல்லி விட்டு, நரகாசுரன் விறுவிறுவென்று அங்கிருந்து சென்று விட்டான்.

சற்று நேரம் அங்கேயே சிந்தனையில் ஆழ்ந்த நகராசுரன், இங்கும் அங்கும் சுற்றி விட்டு, நகரின் ஒரு பகுதிக்கு வரும்போது, ''ச்சே! 'நரகம்' என்கிறார்களே அது எவ்வளவோ மேல். இங்கே ரொம்ப மோசம்! கடி, கடி என்று கடிக்கிறது கொசு; குழாயில் தண்ணீர் கிடையாது; சாக்கடைத் திட்டம் இன்னும்தான் வருகிறது...! தெருவிலே விளக்கு சரியாக எரிவது கிடையாது; பள்ளம் மேடு, குண்டு குழி, பெருச்சாளி வளை...! தெருவிலே இருக்கிற குப்பையையெல்லாம் திரட்டிக் கொண்டு போய் நகரின் இன்னொரு பகுதியில் பரப்பி விடுகிறார்கள். சிவ சிவா வென்று எல்லோரும் நரகத்திற்கே போய்விடலாம்!'' இப்படிச் சிலர் நரகமே மேல் என்று எண்ணி அதைப் புகழ்வதைக் கேட்டதும் நகராசுரனுக்குக் கோபம் பொங்கி விடுகிறது. நேரே நரகத்திற்குப் போய்ப் பார்க்கிறான். அங்குள்ளவர்கள், ''சென்னை மாநகரில், சில பகுதிகள் நரகத்தை விட மோசமாயிருக்கிறதாம். அவர்களெல்லோரும் இங்கே வந்து நம் இடத்தைப் பிடித்துக் கொண்டு விடுவார்களோ என்று பயமாயிருக்கிறது. என்ன இருந்தாலும், நம் நரகத்திற்கு இணை நரகம் தான்!'' என்று பேசிக் கொண்டார்கள்.


சென்னையில் ஒரே அமர்க்களம், ''வாழ்க! வீழ்க!'' என்ற குரல்கள் காது செவிடுபட ஒலிக்க, அப்போது தான் தேர்தல் முடிந்திருந்தது. எங்கும் பரபரப்பு!

திடீரென்று ஒரு காட்சி! படுக்கையில் படுத்திருந்த ஒருவரை ஏராளமான கொசுக்கள் ஒன்று சேர்ந்து நரகத்திற்குக் கொத்திக் கொண்டு சென்றன. நகராசுரன் அதைத் தடுத்துப் படுக்கையைக் கீழே இறக்கினான். திடுக்கிட்டு விழித்துப் பார்த்த மனிதர், கண்களைக் கசக்கிக் கொண்டு கேட்டார்:

''டேய், நகராசுரா? பொழுது விடிஞ்சு போச்சாடா? எட்டு மணியா? இரவெல்லாம் கொசுப் போராட்டம், தேர்தல் சொப்பனம் வேறு! தேர்தல் முடிவுகள் வந்து விட்டதா பேப்பர்லே! ஜெயித்தது, யார்? நகராசுரனா? நரகாசுரனா?''

''என்ன உளறல் இது?'' என்றாள் அவர் மனைவி.

''எங்கே காப்பி தயாரா? நகராசுரனும் நரகாசுரனும் கனவில் வந்துவிட்டுப் போனார்கள். இனி எழுந்து பல்(மா)லாசுரனைப் பிடிக்க ஓட வேண்டும்!'' என்று கூறியபடியே எழுந்தார் அவர்.



மகாபாரதம்


ராஜாஜி

63. கீதையின் தோற்றம்

யுத்தம் தொடங்குவதற்கு முன் இருபட்சத்து வீரர்களும் கூடி அந்தக் காலத்துப் பண்பாட்டுக்குப் பொருந்திய பிரதிக்ஞைகளைச் செய்தார்கள். யுத்த முறைகள் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டே வருகின்றன. அந்தக் காலத்து யுத்த முறைகளை நினைவில் வைத்துக் கொண்டு படித்தால்தான் பாரதம் விளங்கும். இல்லாவிட்டால் சிற்சில இடங்களில் நிகழ்ச்சிகள் அசம்பாவிதமாகத் தோன்றும்.

பாரத யுத்த விதிகள்: ஒவ்வொரு நாளும் போர் முடிந்த பிறகு இரு தரப்பினரும் பிரீதியுடன் கலக்க வேண்டும். யுத்தத்தில் யாவரும் தத்தம் சமானஸ்தர்களையே தாக்க வேண்டும். அதர்ம முறையில் யார் பேரிலும் யுத்தம் நடத்தக் கூடாது. சேனையின் மத்தியிலிருந்து விலகிப் போகிறவர்களை ஒருபொழுதும் கொல்லக் கூடாது. தேர் ஏறினவன் தேர் ஏறினவனையும் யானை வீரன், யானை வீரனையும், குதிரை ஏறியிருப்பவன், குதிரை ஏறியிருப்பவனையும், காலாள், காலாளோடும் எதிர்த்துச் சண்டை செய்ய வேண்டும். எதிரியை நம்பிப் போரை நிறுத்தினவன் மீதும், பயந்து வணங்கினவன் மீதும் ஆயுதம் பிரயோகிக்கக்கூடாது. வேறு ஒருவனோடு போர் செய்து கொண்டிருக்கும் ஒருவனைப் போரில் கலந்து கொள்ளாமல் மற்றொருவன் ஆயுதப் பிரயோகம் செய்து கொல்லக் கூடாது. ஆயுதம் இழந்தவனையாவது, கவனம் செலுத்தாமல் புறங்காட்டி ஓடுபவனையாவது, கவசம் இழந்தவனையாவது கொல்லக் கூடாது. ஆயுதங்களை எடுத்துக் கொடுக்கும் பணியாட்கள், பேரிகை அடிப்பவர்கள், சங்கம் ஊதுகிறவர்கள் இவர்கள் மேல் ஆயுதங்கள் பிரயோகம் செய்யலாகாது. இவ்வாறான யுத்த முறையைக் கௌரவ பாண்டவர்கள் இருவரும் பிரதிக்ஞை செய்து கொண்டார்கள்.

காலப் போக்கில் நியாய அநியாயக் கோட்பாடுகள் மாறுதல் அடையும். இக்காலத்தில் போர் என்றால் போரில் உபயோகிக்கப்படும் எல்லா சாதனங்களும் குதிரைகள் முதலிய ஊமைப் பிராணிகளும் சிகிச்சைக்கு



வேண்டிய மருந்தும் கூட அழிக்கப்படலாம். எவ்வித வரம்பும் கிடையாது. முற்காலத்தில் இவ்வாறல்ல.

அக்காலத்தில் பின்பற்றி வந்த நியமங்களும் அக்காலத்திலேயே சில சமயங்களில் பல காரணங்களால் புறக்கணிக்கப்பட்டதாகப் பாரதக் கதையில் காணப்படுகிறது. விசேஷ சந்தர்ப்பங்களும் காரணங்களும் கூடி அவற்றால் நியதிகள் சில சமயம் புறக்கணிக்கப்பட்டு வரவர நியதியே அழிந்து போய்ப் புது நியதி உண்டாகும். பாரத யுத்தத்தில் வரம்பு கடந்த செயல்களும் சிற்சில சமயங்களில் நடைபெற்றன. ஆனபோதிலும் பொதுவாக மேற்கூறிய நியதிகளை எல்லோரும் ஒப்புக் கொண்டு அவற்றின்படியே நடந்தார்கள். விதிகள் புறக்கணிக்கப்பட்ட போது எல்லோரும் நிந்தித்தார்கள். விதிகளைப் புறக்கணித்தவர்கள் வெட்கமடைந்தார்கள்.

ஃ ஃ ஃ

"வீரர்களே! இதோ உங்களுக்கு எதிரில் ஸ்வர்க்க வாயில் திறந்து நிற்கிறது. இந்திரனுடனும் பிரம்மனுடனும் சேர்ந்து வாழும் பாக்கியம் உங்களுக்குக் கிட்டியிருக்கிறது. உங்கள் பெற்றோரும் மூதாதையரும் அவர்களைப் பெற்ற முன்னோர்களும் சென்ற வழியில் நீங்களும் செல்லுங்கள். வெற்றி அல்லது சுவர்க்கம் உங்கள் முன் நிற்கிறது. இதுவே உங்களுடைய குலங்களின் சனாதன தர்மம். மனக் கவலையின்றி மகிழ்ச்சியுடன் போர் புரிந்து புகழும் மேன்மையும் அடையுங்கள். வீட்டில் வியாதியுடன் மரணமடைதல் க்ஷத்திரியனுக்குத் தகாது. ஆயுதத்துக்கு இரையாவதே க்ஷத்திரியனுடைய தருமம்.''


இவ்வாறு சேனாபதி பீஷ்மரால் தூண்டப்பட்ட அரசர்கள் பேரிகைகள் முழக்கம் செய்து கொண்டு கௌரவர்களுக்கு வெற்றியும் புகழும் உண்டாக்கித் தருவோம் என்று யுத்தம் தொடங்கினார்கள்.

பீஷ்மருடைய கொடியில் பனை மரமும் ஐந்து நட்சத்திரங்களும் பிரகாசித்தன. சிம்மத்தின் வால் எழுதிய அசுவத்தாமன் கொடி காற்றில் ஆடிற்று. துரோணருடைய பொன்னிறத் துவஜத்தில் கமண்டலமும் வில்லும் பிரகாசித்தன. துரியோதனனுடைய புகழ்பெற்ற கொடியில் பாம்புப் படம் ஆடிற்று. கிருபருடைய கொடியில் காளை மாடும், ஜயத்ரதனுடைய கொடியில் பன்றியும் இவ்வாறு இன்னும் பல வீரர்கள் தேரில் பலவிதக் கொடிகளும் பறந்தன.

அணிவகுக்கப்பட்ட கௌரவ சேனையைப் பார்த்து யுதிஷ்டிரன் அருச்சுனனுக்குக் கட்டளையிட்டான்.

''பகைவர்களுடைய படை மிகப் பெரிதாக இருக்கிறது. குறைவாக இருக்கிற நம்முடைய படையை விஸ்தாரப்படுத்தாமல் குவித்துப் போர் புரிய வேண்டும். அகலமாக விரிந்தால் நம்முடைய சேனைக்குப் பலக் குறைவு ஏற்படும். வஜ்ரமுக வியூகமாக நம்முடைய படையை அணிவகுப்பாயாக'' என்று தனஞ்சயனுக்கு உத்தரவிட்டான்.

இவ்வாறு இரு பக்கத்திலும் சேனைகள் அணிவகுக்கப்பட்டு நின்றதும், அருச்சுனனுக்கு உண்டான மனக் கலக்கமும், அதைத் தீர்க்கக் கிருஷ்ணன் உபதேசித்த கரும யோகமும் உலகப் பிரசித்தம். அப்போது கண்ணனுடைய வாக்கில் தோன்றிய பகவத்கீதை என்கிற உபதேச மொழிகள் உலகத்தில் எந்தத் தொழிலில் ஈடுபட்டு எந்த நிலைமையில் இருப்பவர்களுக்கும், எந்தக் குண விசேஷங்களுடன் பிறந்தவர்களுக்கும் உய்யும் வழிகாட்டி உதவும்



படியான சாஸ்திரமாகப் பெரியோர்களால் கருதப்பட்டு வருகிறது. பகவத்கீதை பாரதத்தில் ஒரு பாகம். எந்த எந்தச் சமயத்தில் எந்த எந்தக் கடமை விதிப்படி ஏற்படுகிறதோ, அதைச் சரிவரச் செய்ய வேண்டும். செய்து முடித்து விட்டு, அதன் பயனை ஆண்டவனுக்குச் சமர்ப்பித்து விட வேண்டும். இதுவே கண்ணன் உபதேசித்தது.

64. ஆசி பெறுதல்

யுத்தம் ஆரம்பித்து விட்டது என்று எல்லோரும் எண்ணியிருந்த தருணத்தில் வீரனும் தீரனுமான யுதிஷ்டிரன் திடீரென்று தன் கவசத்தைக் கழற்றி விட்டு, எல்லா ஆயுதங்களையும் தேரில் வைத்துவிட்டுக் கீழே இறங்கிக் கை குவித்துக் கொண்டு பாதசாரியாகக் கௌரவ சேனாதிபதி இருக்கும் இடம் நோக்கிச் சென்றான். அவ்வாறு ஒன்றும் சொல்லாமல் யுதிஷ்டிரன் சென்றதைப் பார்த்து எல்லோரும் திகைப்பு அடைந்தார்கள். தனஞ்சயன் விரைவாகத் தேரிலிருந்து குதித்து யுதிஷ்டிரனைப் பின் தொடர்ந்து வேகமாகச் சென்றான். அவன் கூட மற்ற சகோதரர்களும் கிருஷ்ணனும் சென்றார்கள். யுதிஷ்டிரன் ஒருவேளை தன் இயற்கை தருமத்தை அநுசரித்துக் கருணையால் தூண்டப்பட்டு திடீரென்று யுத்தம் வேண்டாம் என்பதாகத் தீர்மானித்து விட்டானோ என்று சந்தேகமும் கவலையும் பட்டார்கள்.

''ராஜாவே! எங்களை விட்டு விட்டு ஒன்றும் பேசாமல், நிராயுதபாணியாகப் பகைவர்களை நோக்கிச் செல்வது என்ன காரணம்? சத்துருக்கள் கவசம் பூண்டு ஆயுதங்களை எடுத்து நிற்க, கவசத்தையும் ஆயுதங்களையும் வைத்து விட்டு நீர் யுத்த ஆரம்ப சமயத்தில் தனியாக எங்கே போகிறீர்?'' என்று அருச்சுனன் கேட்டான்.

ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்து சென்று கொண்டிருந்த யுதிஷ்டிரன் ஒன்றும் பேசாமல் நடந்தான். அச்சமயம் வாசுதேவன் ''இவருடைய கருத்து எனக்கு விளங்கிற்று. யுத்தம் தொடங்குவதற்கு முன் பெரியோர்களிடம் அநுமதி பெறச் செல்கிறார். பெரியோர்களிடம் அனுமதி பெறாமல் யுத்தம் செய்தால் அது நிந்தனைக்கு இடமாகும். பீஷ்ம, துரோணரிடம் அனுமதி கேட்கவே தரும புத்திரர் நிராயுதபாணியாகச் செல்கிறார். அது தருமத்துக்கு இயைந்ததும் வெற்றி உண்டாக்கத் தக்கதுமான முறை'' என்றான்.

துரியோதனனுடைய சேனையில் இருந்தவர்கள் யுதிஷ்டிரன் கைகூப்பிக் கொண்டு பீஷ்மரிடம் வருவதைக் கண்டு, ''அதோ பார், நம்முடைய சேனையைக் கண்டு பயந்து போய்ச் சமாதானம் பெற யுதிஷ்டிரன் வணங்கி வருகிறான். இந்தக் கோழை மனிதன் க்ஷத்திரிய ஜாதிக்கு அவமானம் தருவதற்காகப் பிறந்தவன்'' என்று ஒருவரோடொருவர் சந்தோஷமாகப் பேசிக் கொண்டு தரும புத்திரனை நிந்தித்தார்கள்.

பகைவர் படையில் ஆயுதபாணிகளாக நின்ற வீரர்களிடையே யுதிஷ்டிரன் நுழைந்து பீஷ்மர் இருந்த இடம் சென்று அவருடைய இரு பாதங்களையும் இரண்டு கைகளால் தொட்டு வணங்கி, ''எவராலும் ஜெயிக்க முடியாத வீரரே! உம்முடன் போர் புரியத் துணிந்த எங்களுக்கு யுத்தம் தொடங்க அனுமதி தரவேண்டுகிறேன். எங்களை ஆசீர்வதிக்கவும் கோருகிறேன்'' என்றான்.

பிதாமகரான பீஷ்மர், ''குழந்தாய்! பரத குலத்தில் பிறந்த நீ, குலத்தினுடைய தருமத்தின்படி நடந்து கொள்ளுகிறாய். நான் மகிழ்ச்சியடைந்தேன். யுத்தம் செய். ஜயம் பெறுவாய். எனக்குச் சுதந்திரம் இல்லை. பராதீனமாக இருக்கிறேன். நான் கௌரவர்கள் பக்கம் யுத்தம் புரியக் கட்டுப்பட்டவனாக இருக்கிறேன். ஆனாலும் உனக்குத் தோல்வி இல்லை'' என்றார்.

இவ்வாறு அனுமதியும் ஆசியும் பெற்ற யுதிஷ்டிரன், ஆசாரியரான துரோணரிடம் சென்று, அவரையும் வலம் செய்து பணிந்தான். துரோணரும் தரும புத்திரனை ஆசீர்வதித்தார்.

''பொருளானது எவனுக்கும் அடிமைப்படாது. மனிதனே பொருளுக்கு அடிமைப்பட்டவன் ஆகிறான். நான் கௌரவர்களுக்குக் கட்டுப்பட்டுப் போனேன். அவர்கள் பக்கம் யுத்தம் செய்வேன். ஆயினும் உனக்கு ஜயம் நிச்சயம்'' என்றார்.

இவ்வாறே கிருபரிடமும் மாமன் சல்லியனிடமும் போய்த் தரும புத்திரன் ஆசி பெற்றுத் திரும்பினான்.

போர் தொடங்கிற்று. முதலில் வீரர்களுக்குள் துவந்த யுத்தங்கள் நடந்தன. அதாவது சமமான ஆயுதங்களுடன் ஒருவரையொருவர் தேடி எதிர்த்துச் சண்டை செய்தார்கள். பார்த்தனைப் பீஷ்மர் எதிர்த்தார். சாத்யகி கிருதவர்மாவை எதிர்த்தான். அபிமன்யு பிருகத்பலனை எதிர்த்தான். துரியோதனனைப் பீமன் எதிர்த்தான். யுதிஷ்

டிரன் சல்லியனை எதிர்த்தான். திருஷ்டத்யும்னன் துரோணரை எதிர்த்து இருவருக்கும் பெரும் போர் நடந்தது. இவ்வாறே அநேக வீரர்கள் யுத்த தருமப்படி துவந்த யுத்தம் நடத்தினார்கள்.

இவ்வாறு சம வீரர்களுக்குள் நடந்த ஆயிரக் கணக்கான துவந்த யுத்தங்களைத் தவிர 'சங்குல யுத்தமும்' நடைபெற்றது. யார் யாருடன் என்பதில்லாமல் ஒரே குழப்பமாகப் போர் நடப்பதற்கு ''சங்குல யுத்தம்'' என்று பெயர். மிகவும் கோரமாக நடக்கும் அந்தச் சங்குல யுத்தங்களில் இரு தரப்பிலும் எண்ணற்ற வீரர்கள் பைத்தியம் பிடித்தவர்களைப் போல் போர் புரிந்து இறந்தார்கள். ரத்தமும் சதையும் மண்ணும் கலந்த சேற்றில் படையாட்களும் சாரதிகளும் யானைகளும் குதிரைகளும் கொன்று வீழ்த்தப்பட்டுத் தேர்களைச் செலுத்த இட நெருக்கடி உண்டாயிற்று. தற்கால யுத்தங்களில் துவந்த யுத்தம் என்பது நின்றுபோய் எல்லாம் சங்குல மாகவே நடைபெறுகிறது.

பீஷ்மர் தலைமையில் கௌரவ வீரர்கள் பத்து நாட்கள் யுத்தம் நடத்தினார்கள். பீஷ்மர் வீழ்ந்த பின் துரோணர் தலைமை வகித்தார். துரோணரும் இறந்த பின் கர்ணன் கௌரவர் சேனைக்குத் தலைவனானான். பதினேழாம் நாள் யுத்தத்தில் கர்ணன் இறந்தான். அதன் பின் சல்லியன் தலைமை வகித்துக் கௌரவ சேனையை நடத்தினான்.

பாரத யுத்தம் பதினெட்டு நாள் நடந்தது. யுத்தத்தின் பிற்பகுதியில், அநேக கோரமான அதரும முறைகள் கையாளப்பட்டன. தருமம் ஒரே நாளில் திடீரென்று கெடுவதில்லை. அவ்வப்போது சங்கடமான நிலைமைகள் நேரிட்டுத் தருமத்துக்குச் சோதனை உண்டாகிறது. பெரியோர்களும் தவறுகள் இழைத்து விடுகிறார்கள். பிறகு அதைப் பார்த்த மற்றவர்களும் அதருமத்தில் இறங்கிவிடுகிறார்கள். இவ்வாறே அறம் ஒழிந்து மறம் ஓங்கும் காலம் உலகத்தை ஆட்கொள்ளுகிறது.

65. முதல் நாள் யுத்தம்

கௌரவர்களுடைய பட்சத்தில் துச்சாதனன் சேனை முன்னணியில் சென்றான். அவ்வாறே பாண்டவர்கள் பட்சத்தில் பீமன் முன்னால் சென்றான். சிம்ம நாதங்களும், சங்க கோஷங்களும் கொம்பு வாத்தியங்களும் பேரிகைகளின் கொட்டு முழக்கும், குதிரைகளின் கனைப்பும், யானைகளின் பிளிறலும் சேர்ந்து வானளாவிய முழக்கம் உண்டாயிற்று. அம்புகள் விசையுடன் செல்லும்போது கொள்ளி நட்சத்திரங்கள் போல் ஜொலித்தன.

முதல் நாள் முற்பகலில் பாண்டவ சேனை பீஷ்மருடைய தாக்குதலினால் நடுக்கமுற்றது. அவருடைய ரதம் சென்ற வழியெல்லாம் காலனுடைய தாண்டவமாக இருந்தது. அருச்சுனன் மகன் அபிமன்யு இதைக் கண்டு பொறுக்காமல் பிதாமகரை எதிர்த்தான். இரு பக்கத்துப் படை வீரர்களுக்குள் வயதில் சிறியவனான அபிமன்யு அனைவரிலும் மூத்தவரான பிதாமகரை எதிர்த்துத் தடுத்ததை தேவர்களும் நின்று பார்த்தார்கள். அபிமன்யுவின் தேர்க் கொடியில் கர்ணிகார மரம் பொன்னால் சித்திரிக்கப்பட்டு விளங்கிற்று. கிருதவர்மனை ஒரு பாணத்தாலும், சல்லியனை ஐந்து பாணங்களாலும், பீஷ்மரை ஒன்பது பாணங்களாலும் அடித்தான். ஒரு அம்பினால் துர்முகியின் சாரதியின் தலை அறுபட்டுக் கீழே விழுந்தது. மற்றொரு பாணம் கிருபருடைய வில்லை ஒடித்தது. அபிமன்யுவின் யுத்த லாகவத்தைக் கண்டு தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள். பீஷ்மரும் அவரைப் பின்பற்றிய வீரர்களும் தனஞ்சயனுக்குத் தகுந்த மகன் இவன் என்று பாராட்டினார்கள்.

பிறகு பல கௌரவ வீரர்கள் அவனைச் சுற்றிக்கொண்டு தாக்கினார்கள். அபிமன்யு அசையவில்லை. பீஷ்மர் வில்லினின்று விடுபட்டுப் பாய வந்த அம்புகளையெல்லாம் அவன் தன்னுடைய அம்புகளால் துண்டித்தான். லட்சியம் தவறாமல் அவன் எய்த பாணங்களில் ஒன்று பீஷ்மருடைய பனைமரக் கொடியை அறுத்து பூமியில் வீழ்த்திற்று. பீஷ்மருடைய கொடி அறுபட்டு வீழ்ந்ததைக் கண்டு பீமன் பெரு மகிழ்ச்சி அடைந்து உரத்த சிம்ம நாதம் செய்தான். பெரியப்பனுடைய சிம்மநாதத்தைக் கேட்டு அபிமன்யு மேலும் உற்சாகமடைந்தான்.

பாலனுடைய அற்புதப் போரைக் கண்டு பீஷ்மர் மனம் பூரித்தார். தம் முழு பலத்தையும் அவன்மேல் பிரயோகிக்க வேண்டியதாயிருக்கிறதே என்று வருந்தினார். அபிமன்யுவின்மேல் பிதாமகருடைய வில் சரமாரி பொழிந்தது. விராடனும், அவன் மகன் உத்தரனும், துருபத குமாரனாகிய திருஷ்டத்யும்னனும், பீமனும், எல்லோரும் அபிமன்யுவைக் காப்பாற்ற ஓடிவந்து பிதாமகரைத் தாக்கினார்கள். பீஷ்மர் அபிமன்யுவை விட்டு விட்டு அவர்களை எதிர்க்க ஆரம்பித்தார். **(தொடரும்)**



"சிறந்த கதாசிரியராகவும், நாவலாசிரியராகவும், கட்டுரையாளராகவும் விளங்கும் திரு 'சோமு' அவர்கள் சிறந்த கவிஞராகவும் திகழ்கின்றார்" என்று இந்த 'இளவேனில்' கவிதைத் தொகுப்பின் பதிப்புரை கூறுகிறது. ஆனால், கவிதைத்தொகுப்பைப் படித்த நமக்கு, அவர் சிறந்த கவிஞராக இருப்பதனால்தான் சிறந்த கதாசிரியராகவும், நாவலாசிரியராகவும், கட்டுரையாளராகவும் விளங்குகிறார் என்றே சொல்லத் தோன்றுகிறது. வாசகர்களுடன் நேருக்கு நேர் பேசுவது போல் அமைந்திருக்கும் இத்தொகுப்பிலுள்ள பல கவிதைகள் மூலம் அவர் கதைகள் சொல்கிறார், காவியங்கள் புனைகிறார், நாடகங்களும் இயக்குகிறார்.

'சோமு' அவர்கள் பதினாறு வயது மாணவப் பருவத்திலிருந்த போதே ஆனந்த விகடன் தீபாவளி மலரில் அவர் எழுதிய ஒரு கவிதையை வெளியிட்டார் பேராசிரியர் கல்கி. 'தீபாவளிப் பாட்டு' என்ற அப்பாடலே சோமுவின் முதல் பாட்டு. 'விளையும் பயிர் முளையிலே' என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அந்தப் பாடலில் எத்தனை ரசங்கள்! இயற்கை வர்ணனை, தேச பக்தி, ஹாஸ்யம், அனைத்துக்கும் மேலாக, - பட்டாசை

"மெத்தைச் சுவரருகே போடாதேடா - ஜிம்மி
மேனியிலிருந்து மிக நடுங்குதடா"

என்ற வரிகளில் ததும்பும் காருண்யம் எல்லாமே அந்தக் கவியில் வெளிப்படுகின்றன.

கவி என்றால் அவன் பாடாத பொருள் இருக்க முடியாது. எதையும் எப்படியும் பாட அவனுக்கு முடியும், அவனுக்கு அதற்கு உரிமையும் உண்டு. காற்றடித்தால் கரும் பஞ்சு போல் பறக்கக்கூடிய கார்முகிலைச் சிற்பியின் உளிக்கே அசையக்கூடிய கல்லாகவும், அந்தக் காற்றையே சிற்பியாகவும் உருவகப்படுத்த அவனால்தான் முடியும். 'முகிற் சிற்பம்' என்ற பாட்டில்,

"சிற்பம் ஆக்குவன் சிதைவு செய்குவன்
ஆக்குவன் மீண்டும் நோக்குவன் அழிப்பனால்"

என்று காற்றெனும் சிற்பியின் செயலைத் தம் கவிதையில் வடிக்கிறார் 'சோமு'.

பொருள் தேடச் சென்ற காதலனின் வரவுக்காக ஏங்கும் எத்தனையோ காதலிகளைப் பார்த்திருக்கிறோம். சோமுவின் கவி உள்ளம் இப்படி காதலியைச் சித்திரிக்கிறது:

"கண்ணால் சொரிந்த முத்தைக்
காதலால் மாலை கட்டும்
புண்ணியர் வருவாரெனப் - பாவி
பொழுதெலாம் காத்திருந்தேன்"

'எத்தனை எத்தனையோ!', 'ஏனோ?' என்ற கவிகளில் 'லிரிக்' அழகு பூரணமாகப் பிரகாசிப்பதைக் காணலாம். நித்தம் மலர்ந்து, நித்தம் உலர்ந்து போகும் மலர்களையும், நித்தம் சிரித்து நித்தம் மரித்துப் போகும் பூவையரையும் கவி காட்டுகிறார். பிறகு "மலரே, ஏன் நீ உதிர்கின்றாய்?" "நானே எங்கே ஓடுகின்றாய்?" என்றெல்லாம் கேட்கிறார். அந்தக் கேள்விகளிலேயே உலகம் என்ற புதிரின் விடையும் அடங்கி விடுகிறது.

'கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றால'ச் சாரலின் குளிர் அழகை,

"வானை அளந்து நின்ற மலைகளுண்டு - நல்ல
வாசமொடு தென்றல் உலாவருவதுண்டு
தேனைச் சொரிந்திடும் பூஞ்சோலைகளுண்டு -
வாகாய்த்
தெள்ளியநீர் துள்ளிவரும் ஓடைகளுண்டு,
....
உள்ளம் துளிர்க்க வரும் முகில்களுண்டு - பன்னீர்
தெள்ளித் தெளித்துவரும் பாங்குமங்குண்டு"

என்று இயம்புகிறார் 'சோமு'. திருக்குற்றாலத்தில் தேனருவியும், ஐந்தருவியும் மட்டுமில்லை. இலக்கியங்கள் பயிலப் பண்டிதர்கள் வந்து கூடுவதுண்டு என்கிறார். குற்றால நினைவு, கூடவே ரசிகமணி டி. கே. சி. அவர்கள் அங்கிருப்பதை நினைவூட்டுகிறது.

"கன்னித் தமிழுமுண்டு,
கம்பனுமுண்டே - இன்பக்
கனி மீது வாழ்கின்றுமோர்
காவியமன்றோ!"

என்று முடிக்கிறார் கவிஞர்.

குடும்பப் பிரச்னைகள் பலவற்றைக் 'குத்து விளக்கு' என்ற கவியரங்கக் கவிதை ஒன்றில் ஹாஸ்யரசத்துடன் ஆராய்கிறார் 'சோமு'.

"ஊரைக் கூட்டியே பறைசாற்றி
உற்றதை எல்லாம் ஒலிபரப்பி
மானம் வாங்கும் மாமிக்கு
வாய்ந்த பக்க வாத்தியமாம்...."

நாத்தியர்களைக் கூறிக் குடும்பத் தலைவன் தலைவியினுடைய பிரச்னைகளை நகைச்சுவையுடன் எடுத்துக் காட்டுகிறார் சோமு.

'சோமு' பழமையில் ஊறித் திளைத்த புதுமைக் கவிஞர். சங்கநூலின் தொன்மையையும், கம்ப ராமாயணத்தின் மென்மையையும், சைவ சமய சித்தாந்தங்களின் தன்மையையும், தம் கவிகளில்



அமைத்துப்பாட வல்லவர். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறியுள்ளபடி இக் கவிதைகளை இசையோடும், பொருளுணர்ச்சியோடும் பாடும்போது அவை நிச்சயமாக ஊனையும் உயிரையும் உருக்கவே செய்யும். 'புதுமைப் பித்தன்' அவர் புனைபெயர் குறிப்பிடுவதைப் போலப் புதுமைகளைத் தேடி அநுபவிப்பவர். ''இந்தப் பாட்டுகள் கவிதையிலே ஒரு புதிய துறையை இயற்றுகின்றன. இந்தப் பாட்டுகள் எல்லாவற்றிலும் அமைந்த ஏக்கமும் அழகும் ஒரு விசித்திரமான கலவை. தமிழுக்குப் புதிது.'' — கடும் விமரிசகரான 'புதுமைப் பித்த' வசிஷ்டரே தம் வாயால் இப்படிப் பாராட்டி விட்டாரென்றால் வேறு சொல்ல என்ன இருக்கிறது ?

நாற்பத்தி ஏழு வயது நிரம்பிய மீ. ப. சோமசுந்தரம் (சோமு) திருநெல்வேலி மீனாட்சிபுரத்தில் பிறந்தவர். விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசும், பாரதி தங்கப் பதக்கமும் பெற்றவர். இவருடைய 'இளவேனில்' கவிதைத் தொகுப்புக்குச் சென்னை அரசினர் பரிசும், 'கல்லறை மோகினி' (சிறுகதைகள்)க்கு அரசினர் பாராட்டுப் பத்திரமும், 'கேளாத கான'த் (சிறுகதைகள்)திற்குச் சென்னை அரசினர் பரிசும், 'அக்கரைச் சீமையில்' என்ற பிரயாண நூலுக்கு சாகித்திய அக்காதெமியின் பரிசும் கிடைத்துள்ளன.

அகில இந்திய ரேடியோவின் திருச்சி, சென்னை நிலையங்களில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்துள்ள இவர், இப்போது தென் பிராந்திய நிலையங்களின் தலைமைத் தயாரிப்பாளராக இருக்கிறார். 1954-56ல் கல்கிக்கு ஆசிரியராகவும், சில காலம் 'நண்பன்' என்ற இலக்கிய மாதப் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். 1960ல் இந்திய சர்க்காரால் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள பிரபல பி. பி. ஸி.யில் நிகழ்ச்சித் தயாரிப்புப் பற்றிப் பயிற்சி பெற்றவர். பயிற்சிக்குப் பிறகு ஐரோப்பாவில் பல தேசங்களுக்கும் சென்று சுற்றிப் பார்த்திருக்கிறார்.

வடமொழியிலும், இந்தியிலும் புலமையுள்ள இவர், சித்தர்கள் இலக்கியம் பற்றியும், சிற்ப சித்திர சாஸ்திரங்கள் பற்றியும் விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இந்திய சர்க்காரின் நேஷனல் அகாடெமி ஆப் லெட்டர்ஸ், ஆகிய பல இலக்கிய ஸ்தாபனங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் 'சோமு'.

பத்து சிறுகதைத் தொகுப்புக்களையும், இரண்டு கவிதைத் தொகுதிகளையும், நான்கு கட்டுரை நூல்களையும், ஏழு நாவல்களையும் வெளியிட்டுள்ள இவர், இரண்டு தொகுப்பு நூல்களுக்கு ஆசிரியராக இருந்திருக்கிறார். ராஜாஜி அவர்களுடன் கூட்டாக 'திருமந்திர'த்துக்கும், 'முதலாயிர'த்துக்கும் விரிவுரை எழுதியிருக்கிறார். பட்டப் பரீட்சைகளுக்கு 'சோமு'வின் நூல்கள் பாட புத்தகங்களாக வைக்கப்பட்டுள்ளன. 1959ல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் தலைவராக இருந்த இவர், இப்போது தமிழக அரசின் திரைப்படப் பரிசு ஆய்வுக் குழுவின் தலைவர்.

''கவி உள்ளத்தை உணர்கிற கலையில் எனக்குப் பயிற்சியளித்தவர் காலஞ்சென்ற டி. கே. சி. அவர்கள். அவருடைய தொடர்புதான் என்னை இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்தது. அவர் மூலம்தான் கல்கியவர்களின் நெருக்கமும், ராஜாஜி அவர்களின் பழக்கமும் எனக்கு ஏற்பட்டன. எனவே, என்னுடைய முயற்சிகளுக்கெல்லாம் இந்த மூவருடைய ஆதரவையும், ஊக்கத்தையுமே மிகவும் பெரிதாக மதிக்கிறேன்'' என்றார் 'சோமு' பேட்டியின் தொடக்கத்தில்.

''உங்களுடைய இந்தக் கவிதை நூலை, ரசிகமணி டி. கே. சி. அவர்கள் 'தமிழ் மகளுக்கு ஒரு சீதனம்' என்று பாராட்டியுள்ளார்கள். அதே சமயத்தில், அவரோடு இலக்கியக் கொள்கைகளில் முற்றிலும் முரண்பட்ட நாவலர் சோமசுந்தரபாரதியார் 'எளிய இனிய நடையில் ஒழுகும் இனிய பண் நலமும், உவகை வளர்க்கும் கவிவளமும் கொண்டு அமைந்து, சுவை நிறைந்து என் உணர்வைக் கவர்ந்து இனிப்பூட்டின' என்று பாராட்டுகிறார். இவ்விதம் இவ்விரு துருவங்களும் உங்கள் கவிதையைப் பாராட்டியது எப்படி ?'' என்று கேட்டேன்.

''சோமசுந்தர பாரதியாரைப் பற்றி ஓர் உண்மையை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அவர் மகாகவி பாரதியாரோடு நெருங்கிப் பழகிய நண்பர். புதுமைக் கவிகளில் அவருக்கு மட்டற்ற ஈடுபாடுண்டு. ஆங்கில 'லிரிக்' முறையில் புதுமையான வடிவங்களில் நான் முயற்சிகள் செய்திருப்பதை தெரிந்தும் அவர் பல முறை பாராட்டியதுண்டு'' என்றார் கவிஞர் 'சோமு'.

''இந்த 'இளவேனில்' கவிதைகள் பற்றித் தங்கள் நினைவில் நிலைத்த சம்பவம் இருந்தால் சொல்லுங்கள்.''

''இதிலுள்ள இரண்டு பாடல்களைப் பற்றி இரண்டு நிகழ்ச்சிகள். என்னுடைய முதலாவது பாடலான 'தீபாவளிப் பாட்டு' ஆனந்த விகடன் தீபாவளிமலரில்வெளியாகிந்தபாலில் அந்த மலர் வந்து சேர்ந்த நேரத்தில் நான் திருநெல்வேலியில் டி. கே. சி.யின் வீட்டிற்குப் போயிருந்தேன். அப்போது டி. கே. சி.யுடன் வெள்ளகால் முதுபெரும் புலவர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மலரைக் கையில் வைத்துக் கொண்டு, 'ஒரு நல்ல கவிதை கேட்கிறீர்களா ?' என்று வெள்ளகால் முதலியார் அவர்களிடம் டி. கே. சி. அவர்கள், தமக்கே உரிய பாணியில் பாட்டைப் பாடிக் காட்டினார்கள்! இந்தப் பாராட்டு நிகழ்ச்சி அந்தச் சிறு வயதில் எனக்கு எத்தனை பெரிய ஊக்கம் அளித்திருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். இது போலவே, 'திருக்குற்றாலம்' என்ற கவிதையைக் குற்றாலம் சித்திர சபையில், டி. கே. சி. அவர்கள் ஒரு பெரிய இலக்கியக் கூட்டத்தில் அரங்கேற்றி வைத்தார்கள். டி. கே. சி. அவர்களுக்கு நான் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன் என்பதற்கு இந்த இரண்டு நிகழ்ச்சிகளுமே சான்று'' என்றார் கவிஞர் 'சோமு'. **—மகரம்**

வெளியிட்டவர்கள் : பாரி நிலையம், மதராஸ் — 1; விலை: ரூ. 2—50.

நிகோ

கிருமி நாசினி சோப்பு

பார்க்-டேவிஸ் தயாரிப்பு

பருக்கள், கரும்புள்ளிகள், வேர்க்குரு மற்றும் இதர சரும நோய்களினின்று உங்கள் சருமத்தைப் பாதுகாத்து அதை சுத்தமாகவும், ஆரோக்கியத்துடனும் வைத்திருக்கிறது. ஷாம்புவாக உபயோகிக்கும் போது கிருமிகளைக் கொல்லும் சக்தி வாய்ந்த அதன் நுரை பொடுகளிலிருந்து உங்களைக் காக்கிறது. ஒப்பற்ற கிருமி நாசினி சோப்பான நிகோ மூன்று விதங்களில் இணையற்றது—சுத்தம் செய்து, கிருமிகளை அழித்து, பராமரிக்கிற்து. உங்கள் சருமத்திற்குத் தேவையான தினசரி பாதுகாப்பை அளியுங்கள்




தினந்தோறும் உபயோகிப்பதற்கான ஒரிஜினல் கிருமி நாசினி சோப்பு.

JAISONS




007
பாலு
அண்ணா, நான் துப்பறியும் நாவல்களை அதிகம் படிப்பதாக அப்பா குற்றம் சாட்டுகிறார். நீயே சொல்லு, நான் துப்பறியும் நாவல்கள் மட்டும் தானா படிக்கிறேன்?
பாடப் புத்தகத்தைத் தவிர பாக்கி எல்லாம் படிப்பான்!



தொடரும்....


SHILPI SOM 8/68 TAM
White
det
whitens while it washes clean
டெட் சலவையின் மேன்மை,
வெண்மையுடன் தூய்மை
டெட் பவுடரினால் மட்டும்தான் உங்கள்
வெள்ளைத் துணிகளை பளிச்சிடும் வெண்மையுடனும்
வண்ணத் துணிகளை துப்புரவாகவும்
சலவை செய்ய முடியும்-
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்.,
பம்பாய்



அம்மன் தாலி (நாடகம்)

ஸ்ரீ எம். எஸ். பெருமாள் எழுதிக் 'கல்கி'யில் வெளிவந்த உள்ளமுருக்கும் நெடுங்கதைதான் அம்மன் தாலி. கிராமத்துச் சூழ்நிலையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த நாடகம், நகரத்துச் சூழ்நிலையையே நாடகமாகப் பார்த்துப் பார்த்துச் சலித்த ரசிகர்களுக்கு ஓர் ஆறுதலை அளிக்கும். அதோடு, உருக்கமான வசனங்களும், பாத்திரங்களுக்கேற்ற நடிப்பும் உள்ளத்தை நெகிழச் செய்யும். கிராமத்துச் சூழ்நிலையைச் சித்திரிப்பதற்காகக் கொடுக்கப்படும் பின்னணி இசை மட்டும் அளவுக்கு அதிகமாகப் போய்விட்டது.

நாடக உத்தியை எண்ணி ஒரு சில மாற்றங்கள் கதையில் கொடுத்திருக்கிறார்கள். அதைக் காட்டிலும் மூலக் கதையையே நாடக உத்தியோடு அமைத்திருந்தால், அதுவே இன்னும் பரிமளித்திருக்கும்.

தந்தைக்குத் தன் தனயனைப் படிக்க வைத்துப் பெரும் புகழுமாய்ப் பார்க்க வேண்டும் என்று ஆசை ஏற்படுவது இயல்புதான். அதற்காக அன்னை மரணத் தறுவாயில் இருக்கும்பொழுது, பரீட்சை எழுதாமல் இருந்தால் தனயனின் ஒரு வருடப் படிப்பு வீணாகி விடுமே என்று அஞ்சி, அவனை வரவழைக்காமல் இருப்பதை எந்த மனமும் ஏற்காது. அதுவும் கிராம சமுதாயம் கட்டோடு ஏற்காது.

மூலக் கதையில் உள்ளது போலவே பொய்த்தாலி-நிஜத்தாலி நிகழ்ச்சிகள் இருக்கலாம். இந்த மாற்றத்தினால் நாடகத்துக்கு எவ்விதச் சிறப்பும் கிட்டவில்லை. கதைக்குத் தொடர்பில்லாத இரண்டொரு நகைச்சுவைக் காட்சிகள் - தேவையில்லாத காட்சிகள்.

இப்படிக் குறை கண்டுபிடிக்க முயலும்பொழுது, குறைகளை மறைத்து நிறைவாக்கிக் காட்டும் பணியை இந்த நாடகத்து நடிகர்கள் அனைவருமே ஏற்றிருக்கிறார்கள். சுவை மிகுந்த, பாராட்டுக்குரிய நடிப்பு.

இக்கதைக்கு முக்கிய கதாபாத்திரமாகவிளங்குவது ஒரு பண்ணையார் குடும்பம். தாத்தா, தகப்பன், தனயன் - இம்மூன்று பாத்திரங்களையும் முறையே ஏற்றிருப்பவர்கள் ஸ்ரீ நடராஜன், சூர்யகுமார், சிவகுமார். இம்மூவரும் கதாபாத்திரங்களுக்கேற்ப நடித்துக் கதைக்கு உயிரூட்டியுள்ளனர்.

தபால்காரக் கண்ணனாக வரும் ஸ்ரீ அகோரம், நகைச்சுவையை அகோரமாக்காமல் அடக்கமாக்கிக் காட்டிச் சபாஷ் பெறுகிறார். அவர் வரும் ஒரு 'சிகரெட்' காட்சி மட்டும் நீக்கப்பட வேண்டும்.

காவேரியாக வரும் ஸ்ரீமதி சூர்யப்பிரபாவின் நடிப்பு சிறந்த குடும்பப் பண்பைக் காட்டுகிறது. கமலமாக வரும் சரளாதேவியின் கை முறுக்கலும், நிற்கும் தோரணையும், நடிப்பில் இன்னும் அநுபவம் பெற வேண்டும் என்பதைக் காட்டுகின்றன.

மதராஸ் ஆர்ட் தியேட்டர்ஸார் அளிக்கும் இந்த நாடகத்தைக் கச்சிதமாக டைரக்ட் செய்திருக்கும் பொறுப்பு திரு லாரென்ஸைச் சேர்ந்தது. கதை ஒரு சில இடங்களில் மனித இயல்பை மீறிப் போவது மாற்றப்பட்டால், **அம்மன் தாலி** சிறந்த நாடகம் எனப் பெயர் பெறும்.

வசந்தமே வா! ★

மயிலை ஜெயாலய மன்றத்தினர், ''வசந்தமே வா'' என்ற தலைப்பில் புது மாதிரியான நிகழ்ச்சி ஒன்றை மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்பில் நடத்தினர்.

அவர்கள் அறிவித்தாற் போல் சங்கீதம், கதாகாலட்சேபம், நாடகம், ஹாஸ்யம் எல்லாம் கலந்த புது மாதிரியான கலவையாக இருந்ததால், சபையோருக்கு ஒரு திகைப்பு: 'பிடித்திருக்கிறது என்று சொல்வதா? பிடிக்கவில்லை என்று சொல்வதா?'

வாய் விட்டுச் சிரித்து அனுபவித்ததை நினைத்தால், ''பிடித்திருக்கிறது'' என்று சொல்லத் தோன்றியது. அப்படிச் சொல்லிவிட்டால், தம்மைப் பற்றி 'மட்ட ரஸம்' என்று யாராகிலும் நினைத்து விடுவார்களோ என்ற அச்சம். அதே நேரத்தில் ''பிடிக்கவில்லை'' என்று துணிந்து சொல்லவும் மனச்சாட்சி இடம் தரவில்லை.

இப்படி ஒரு தர்மசங்கடமான நிலையை உண்டாக்கி விட்டார், ரேடியோ நாடக அமைப்பாளர் திரு டி. என். சுகி சுப்பிரமணியம். அவர்தான் இதற்குக் கதை யம்சம், பாட்டு, வசனம் எல்லாம் வழங்கியிருக்கிறார்.

தந்தையே தனயனைப் பார்த்து, ''காதலித்து ஒரு பெண்ணை அழைத்து வா!'' என்று சொல்வது புதுமையாக இல்லையா? இப்படிப் பல கட்டங்கள், இன்றையச் சமுதாயத்தை நன்றாக நையாண்டி செய்ய.

திரு ஹரி ஹர சுப்பிரமணியம் நன்றாகப் பாடி ''சபாஷ்!'' பட்டம் பெற்றுவிட்டார். குமாரி எஸ். ஆர். சிவகாமியும் தமக்களித்த பாகத்தை நன்றாக நடித்தார்.

காலட்சேபமாகப் பாடிப் பேசியவர்களும் நன்றாகச் செய்தார்கள்.

'இப்படி யொரு புது மாதிரியான நிகழ்ச்சி எடுபடுமோ, எடுபடாதோ' என்ற கூச்சத்துடனே அரங்கேற்றப்பட்டிருக்கிறது. அப்படி ஒன்றும் கூச்சப்பட வேண்டியதில்லை என்றே நிகழ்ச்சியைப் பார்த்த பின் தோன்றியது.



அத்தியாயம் மூன்று

ஒரு 'மனிதன்' பிறக்கிறான்!

சுந்தரி வீட்டில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட முத்துசிவன், தான் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டபோது வலம்புரி அவனை முரட்டுத் தனமாகக் கன்னத்தில் அறைந்த காரணத்தை அவனிடம் கேட்டறிய வேண்டுமென்ற துடிப்புடன் கூடத்து அறையை நோக்கிச் சென்றான்.

''அக்கா! அண்ணாவைச் சாப்பிட அழைச்சிக்கிட்டுப் போ. அவர் ரொம்பவும் பசியாயிருக்கிறார்'' என்றான் தில்லைநாதன் தணிந்த குரலில்.

''ஆமாண்ணா! முதல்லே சாப்பிட வாங்க; பேச வேண்டியதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்'' என்றாள் ஜானகியும் பரிவுடன்.

சட்டென்று நின்றான் முத்துசிவன். 'அந்த விஷயத்தை இவர்கள் முன்னிலையில் அவனிடம் கேட்க வேண்டாம்; பிறகு தனியே விசாரித்துக் கொள்வோம்' என்று எண்ணியவனாய், தன் கோபத்தை அடக்கிக் கொண்டு சட்டையைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டி விட்டுக் குழாயடிக்கு நடந்தான். ''நீங்களெல்லாம் சாப்பிட்டாச்சா ஜானகி?''

''அம்மாவும் சின்னத் தம்பியும் தவிர நாங்களெல்லாம் சாப்பிட்டோம்.''

''அவனுக்கு என்ன வந்ததாம்? வேண்டாம்னு சொல்லிட்டானா?''



கிளிஞ்சல் கோபுரம்

"இல்லை; நீங்க வந்தப்புறம் உங்களோடு சாப்பிடறேன்னு உட்கார்ந்திருக்கிறான்."

இதைக் கேட்டதும் முத்துசிவனின் கோபம் எங்கோ பறந்து போயிற்று. "சரி; அவளையும் கூப்பிடு!" என்றபடி இலைக் கெதிரில் வந்து உட்கார்ந்தான்.

சற்றைக்குப்பின் வலம்புரி வந்து உட்கார, ஜானகி உணவு பரிமாறினாள்.

முத்துசிவன் சாப்பிட்டுக் கொண்டே கேட்டான்: "ஆமாம்; நீயும் தில்லைநாதனும் இன்றைக்கே பயணமாகணுமா?"

"என்ன அண்ணா, இப்படிக் கேட்கிறீங்க? கல்யாணம் முடிஞ்ச அன்றைக்கே என்னை 'அவர்' புறப்படச் சொன்னார். மூணாம் நாள் பெண்ணை மாப்பிள்ளை வீட்டாரோடு கூட்டி அனுப்பி வைக்கிற வரையில் இருந்துட்டு வரேன்னு சொல்லி அவரை மட்டும் போகச் சொன்னேன். நாளைக்கு என்னை



ஜெயகாந்தன்

எதிர்பார்த்து அவர் ஸ்டேஷனில் வந்து காத்திருப்பார்.''

''அப்படியானால் சரி'' என்று தலையாட்டிக் கொண்ட முத்துசிவன் சிறிது நேரங் கழித்து, ''ஏண்டா, தில்லை! நீயும் இன்றைக்கே கிளம்பறயா?'' என்று கேட்டான்.

''ஆமாண்ணா!'' என்றபடி பக்கத்து அறையிலிருந்து ஓடி வந்தான் தில்லைநாதன். ''நாளையோடு எனக்கு லீவ் முடியறது. நாளன்னிக்கு டியூட்டிலே ஜாய்னுகணும். இல்லேன்னு எங்க ஏஜண்ட் ரொம்பக் கெடுபிடி பண்ணிப்பிடுவார்.''

''அப்ப, பம்பாய்க்குப் போய்ச் சேர்ந்த அன்றைக்கே ஆபீசுக்கும் அட்டண்ட் பண்ணியாகணும்னு சொல்லு?''

''வேற வழியில்லே.''

''நீ போற அதே ரயிலில்தானே ஜானகியும் வர்றாள்?''

''ஆமாண்ணா! எங்களுடனேயே பம்பாய் மெயிலில் வந்துடறேன்னு அக்கா சொல்லுது. நாளைக் காலம்பற எட்டரை மணிவாக்கில் வண்டி குண்டக்கல்லே அடையும். அங்கே வாசு அத்தான் வந்திருந்து அக்காவை அழைச்சுக்கிட்டுப் போவாராம்.''

''எதற்கும் அவருக்கு ஒரு தந்தி கொடுத்து விடேன், ஜானகி இன்றைக்குப் புறப்பட்டு வராள்னு?''

''அது வேண்டாம்னு அக்கா சொல்லுது. அத்தான் ஸ்டேஷனுக்கு வரத் தவறினாலும் ஒரு வண்டி வச்சிக்கிட்டு அக்கா போயிடுமாம்.''

''அப்ப சரி; பயமில்லே.''

இலையை மடித்துவிட்டு எழுந்தான் முத்துசிவன். அவனுக்கு முன்னால் வலம்புரி சாப்பிட்டு முடித்து எழுந்தும் போய் விட்டிருந்தான்.

கை, வாய் கழுவித் துடைத்துக் கொண்டே கூடத்து அறையில் வந்து சோபாவில் சாய்ந்தான் முத்துசிவன். இந்தச் சந்தர்ப்பத்துக்காக இந்நேரம் காத்திருந்தவள் போல் தயங்கித் தயங்கி அவனருகில் வந்த ஜானகி, ''அண்ணா!'' எனச் செல்லமான குரலில் அழைத்தாள்.

'என்ன' என்பது போல் அவளை ஏறிட்டுப் பார்த்தான் முத்துசிவன்.

''போன வருஷம் வந்த போதே கேட்டேன்: அடுத்த முறை வரும்போது வாங்கித் தரேன்னு சொன்னீங்க, ஞாபகம் இருக்குதா அண்ணா?''


''டேபின் ஃபேன்தானே? நல்லா நினைவிருக்கிறது.''

''அப்பஃன்னு இந்தத் தடவையும் இடையாதுன்னு சொல்றீங்களா?''

மெல்லச் சிரித்த முத்துசிவன் நிதானமாகக் கூறினான்: ''அதோ, ஸ்டாண்டில் தொங்கற என் சட்டைப் பையில் ஒரு சின்ன நோட்டு இருக்கு, அதை எடுத்துப் பிரித்துப் பார், ஜானகி! அதிலே, நம்ம தங்கை மைதிலியின் கல்யாணத்துக்கு இன்று காலை வரையில் ஆகியிருக்கிற செலவு விவரம் பூராவையும் குறிச்சு வைச்சிருக்கிறேன். எவ்வளவு பணம் கரைஞ்சிருக்குதுன்னு நீயே கூட்டிப் பார்! அந்தப் பெருந் தொகையில் பாதிதான் என் கையிருப்பில் இருந்தது: மறு பாதி இரண்டு மூன்று இடங்களிலே வட்டிக்குக் கடனாக வாங்கினது. அப்படி எங்கெங்கே, யாராரிடம், எத்தனை விகித வட்டிக்கு வாங்கினேன் என்கிற விவரமும் அந்த நோட்டிலேயே இன்னொரு பக்கத்தில் எழுதி வைச்சிருக்கிறேன்; அதையும் படிச்சுப் பார்!.... இந்த நிலைமையிலே இப்ப உனக்கு ஒரு டேபின் ஃபேன் வாங்கித் தரணும்னு என்ன பண்ணுவேன்? வாங்கினாலும் நல்லதாக வாங்கணும். அதற்குக் குறைஞ்ச பட்சம் இருநூற்றைம்பது ரூபாயாவது வைக்கணும். அவ்வளவுக்கு எங்கே போவேன்?'' — தன் அருமைத் தங்கை ஆசையோடும் உரிமையோடும் கேட்பதைத் தன்னால் இப்போதைக்கு வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்ற வருத்தமும், அப்படிச் சொல்ல நேர்ந்ததால் ஏற்பட்ட வெட்கமும் அவன் குரலில் இழைந்தன.

ஆனால் ஜானகி இதையெல்லாம் காதில் வாங்கிக் கொண்டதாகவோ, கவனித்ததாகவோ தெரியவில்லை. முகத்தைச் சுளித்து முந்தியை முறுக்கியபடி சுவரோரமாகப் போய் நின்று கொண்டு, ''தெரியுமே, நான் கேட்டால் இந்த மாதிரி பதில்தான் வரும்னு எனக்குத் தெரியும்!'' என்றாள் ஆத்திரமும் அழுகையும் அடைத்த குரலில். ''நான் எது கேட்டாலும் அண்ணா இப்படித்தான் எதையாச்சும் சொல்லித் தட்டிக் கழிச்சுடுறார். எனக்குச் செய்யணும்னு அவருக்கு எப்பவுமே மனசு வருகிறதில்லே. மத்தவர்கள் கேட்கிறதற்கு முன்னாடியே — வேண்டி வேண்டி — வலிய வாங்கிக் கொடுத்துடுவார்.'' — யாரோ மூன்றும் மனிதரிடம் புகார் செய்வது போல் அவரை வெறித்துப் பார்த்துக்கொண்டு பேசினாள் அவள்.

''அப்படியெல்லாம் பேசாதே, ஜானகி! நான் யாரையும் ஒரவஞ்



சனை செய்வதில்லை; யாரிடமும் பாரபட்சம் காட்டுவதுமில்லை. எனக்கு நீங்கள் நாலு பேருமே ஒன்றுதான். நாலு பேரையும் ஒரே சமமாகப் பாவித்து என்னால் முடிஞ்சவரை, என் சக்தியளவுக்குச் செய்யறேன், கவனிக்கிறேன். இதை நீயோ உன் தங்கை, தம்பிகளோ ஒப்புக் கொள்ளவில்லையானால் — அதைவிடத் துரதிர்ஷ்டம் எனக்கு வேறொண்ணு இருக்க முடியாது.''

''நான் யார் மீதும் குற்றம் சொல்லவில்லை! என்னோட தலைவிதியை—எதிலும் கொடுத்து வைக்காத பாவியாயிருக்கிற என்னையே—நொந்துக்கிறேன்! அவ்வளவுதான்!'' என்று பொங்கி வந்த அழுகையை அடக்க மாட்டாமல் விம்மிப் பொருமிக் கொண்டே டபக்கென்று உட்கார்ந்து விட்டாள் ஜானகி.

முத்துசிவன் அவளைக் கனிவுடன் திரும்பிப் பார்த்தான். அவள் அழுவதைக் காணச் சகியாதவன்போல் அசட்டுப் புன்னகையும் பூத்துக்கொண்டான்.

சற்றைக்குப்பின் திடுமென்று எழுந்த ஜானகி தன் தமையனைப் பார்க்காமலே ''அண்ணா, நீங்க என்ன செய்வீங்களோ, எனக்குத் தெரியாது! டேபிள் ஃபேன் இல்லாம நான் வண்டியேற மாட்டேன். அதை வாங்கிக் கொடுக்கிறவரை இந்த வீட்டை விட்டுப் போகவும் மாட்டேன்'' என்று சபதம் செய்வது போல் கையை ஆட்டிச் சொல்லிக் கொண்டே விர்ரெனப் பக்கத்து அறைக்குப் போய்விட்டாள்.

சற்று முன்வரை மகிழ்ச்சிக் கலகலப்புடன் விளங்கிய அவ்வீட்டில் இப்போது அமைதிப் புழுக்கம் சூழ்ந்தது.

தில்லைநாதனும், லதாவும் தங்கள் பெட்டி படுக்கைகளைக் கட்டி ஒழுங்கு படுத்துவதில் மும்முரமாயிருந்தனர். அன்னபூரணியம்மாள் கூடத்து அறையின் வாசல் அருகில் உட்கார்ந்து சிமிண்ட்டுத் தரையில் போடப்பட்டிருந்த கட்டக் கோட்டைக் கீறிக் கொண்டிருந்தாள். வராந்தாவின் கட்டைச் சுவர் மீது அமர்ந்து சாய்ந்தவாறு உண்ட மயக்கத்தில் ஆனந்தமாய்க் கண்மூடியிருந்தான் வலம்புரி. அவன் தூங்குகிறானா, விழித்துக் கொண்டிருக்கிறானா என்பதே தெரியவில்லை.

கவலை தேங்கிய முகத்துடன் சோபாவில் ஒருக்களித்து, அண்ணாந்த நிலையில் அமர்ந்திருந்த முத்துசிவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போன்று மெல்லப் பெருமூச்சு விட்டபடி எழுந்தான். யாரிடமோ எதையோ சொல்ல வாயெடுத்த அவன் 'வேண்டாம்' என்பது போல் தலையசைத்தவாறு போய்ச் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு விசிறி மடிப்பு அங்கவஸ்திரத்தையும் தோளில் போட்டுக் கொண்டு மௌனமாக வீட்டை விட்டு வெளியேறி நடந்தான்.

ஸ்கூட்டரையும் எடுக்காமல், கால்நடையாக, வெயிலின் தீட்சண்யம் தணியாத அந்தப் பிற்பகல் நேரத்தில் தன் மைந்தன் தெருவில் இறங்கிச் செல்வதைப் பார்த்துக் கொண்டு வாசல் நிலையோரம் ஒடுங்கி உட்கார்ந்திருந்த அன்னபூரணியம்மாளின் வயிறெல்லாம் பற்றி எரிந்தது. நெஞ்சம் பதை பதைத்தது. ஜானகி புகுந்து கொண்டிருந்த அறையை ஆத்திரமும் கோபமுமாக வெறித்துப் பார்த்த அவள், 'எல்லாரும் சேர்ந்துகொண்டு என் பிள்ளையை இப்படி கசக்கிப் பிழிந்து, வறுத்துக் கொட்டிக் கொள்ளுகிறார்களே! அவனைக் கொஞ்சம் கூட நிம்மதியாக இருக்க விடாமல் ஆளுக்கு ஆள் பிய்த்துப் பிடுங்கிச் சுரண்டிக் கொண்டு ஓட்டாண்டியாக்குகிறார்களே' என்றெல்லாம் இரைந்துகூவ வாயெடுத்தாள். பிறகு தன்னையே நொந்துகொள்கிறவள் போல் உதட்டைக் கடித்துக் கொண்டாள். 'ஜானகியும் என் வயிற்றில் பிறந்த பெண்தானே? அவள் தனக்கு வேண்டியதைத் தன் அண்ணனிடம் கேட்காமல் வேறு யாரிடம் கேட்பாள்? அவனைத் தவிர அவளுக்குச் செய்யக் கடமைப்பட்டவர்கள் யார் இருக்கிறார்கள்?'

அன்னபூரணியம்மாள் கண்கலங்கிப் பெருமூச்செறிந்தாள். தெருக் கோடியில் சென்று கொண்டிருந்த தன் மைந்தனை உட்கார்ந்தபடியே தலை நிமிர்ந்து பார்த்த அவள் முகத்தில் எவ்வளவுக் கெவ்வளவு துயரச் சாயை கப்பியிருந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு பெருமிதப் பூரிப்பும் ஒளி பூசியது.

இருக்காதா பின்னே? 'இப்படி ஒரு பிள்ளையைப் பெற இவள் எத்தனை யுகங்கள் தவம் இருந்தாளோ?' என்று அவளுடைய காது படவே இன்று ஊர், உலகம் அதிசயித்துப் புகழ்ந்து பேசுகின்றனவே! ஆனால் அப்படி அதிசயித்தும், புகழ்ந்தும் பேசுவதற்கான நிலையை அடைவதற்கு அவளின் அந்த அருமைப் புதல்வன் பட்ட பாடுகளும், செய்துள்ள தியாகங்களும் — அவை அவள் ஒருத்திக்குத்தான் தெரியும்.

❀ ❀ ❀

ஆமாம்; முத்துசிவனுக்கு அப்போது இருபத்தொன்றே வயதுதான். கல்லூரியில் பி.ஏ., இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தான்.

அவனது தாயின் குடும்பம் சாதாரணமானதுதான் என்றாலும் தந்தையின் குடும்பம் செல்வ வளத்தோடு சீரும் சிறப்புமாக இருந்தது என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான்; புத்தியறிந்து பார்த்ததென்னவோ வறுமை நிலையை! ஆனால் தன் தந்தையின் குடும்ப வளம் பற்றித் தான் கேள்விப்பட்டதெல்லாம் கற்பனையல்ல என்பதில் மட்டும் அவனுக்கு முழு நம்பிக்கை இருந்தது. அவ்வாறு நம்பிக்கை கொள்ளச் சாட்சிகளாய் நின்றன இப்போது சென்னை, எழும்பூர்ப் பகுதியில் அவன் குடியிருக்கும் இந்த சுமார் மூன்று கிரௌண்ட் சுற்றளவுள்ள, உறுதியாக அமைந்த, மதில் சுவர்களுடன் கூடிய மொட்டை மாடி வீடும்; அதன் ஒரு பகுதியாகப் பூட்டிக் கிடக்கும் கார் ஷெட்டும், அதற்குப் பக்கவாட்டில் சற்றுத் தள்ளி இடிந்து தகர்ந்து சிதிலமாகவுள்ள மாட்டுக் கொட்டகையும்!



''என்ன சார் கேட்டீங்க? மிக்சர்தானே?''

''ஆமாம்! இரண்டு பிளேட் மூந்திரி பருப்பு வறுவலில் ஒரு பிளேட் போங்கலே 'மிக்ஸ்' பண்ணிக் கொண்டா!''

தன் தந்தைதான் அவரது பூர்விக சொத்து சுகங்களெல்லாம் அழிந்துபடக் காரணமாக இருந்தவர் என்பதை அவன் அறிவான். ஆனால் அதற்காக அவரை அவனோ, அவனுடைய தாயாரோ பிறரோ நொந்து கசந்து அவமதித்து எண்ணிவிடவும் பேசிவிடவும் முடியாது என்பதையும் பெருமையே பட்டுக் கொள்ளலாம் என்பதையும் அவன் நன்கு அறிந்திருந்தான்.

ஆம்; அவனுடைய தந்தை தேச விடுதலை இயக்கத்தில் தீவிரப் பங்கேற்றுப் பாடுபட்டவர். நல்ல வருவாய் தந்து கொண்டிருந்த தம் சொந்த டைப் — பவுண்டரியைச் சரிவரக் கவனிக்காமல் போராட்டங்களில் ஈடுபட்டுப் பன்முறை சிறை சென்றதாலும், தம்மைப் போல் தேச விடுதலைக்காகப் பாடுபட்ட ஏழை எளிய தேச பக்தர்களின் குடும்பங்களுக்குப் பணத்தைப் பணம் என்று பாராமல் வாரி வழங்கியதாலும், தீவிர தேசியப் புரட்சி வீரர்களுக்குப் புகலிடம் அளித்ததன் மூலம் அந்நிய அரசாங்கத்தின் கோபத்துக்கு ஆளாகிப் பல கெடுபிடிகளுக்கும் சொத்துப் பறிமுதல் நடவடிக்கைகளுக்கும் உள்ளானதாலும், தேசம் விடுதலையடைந்தபோது கிட்டத்தட்ட ஒட்டாண்டி நிலைக்கு அவர் வந்துவிட்டிருந்தார்.

இப்படிப் போராட்டம் நடத்திப் பெற்ற விடுதலைக்குப் பின் தேசத்தில் மற்றொரு போராட்டமும் ஆரம்பமாகியது. விடுதலை வேள்விக்காக அர்ப்பணித்த விலைமதிப்பற்ற தியாகங்களை வெகு சரல சகாய விலைக்குப் பேசி பதவிகளையும் பவிசுகளையும் பெறுவதற்காக ஏற்பட்ட 'போராட்டமே' அது. அந்தப் போராட்டத்தில் அவருடைய சகாக்கள் பலரும் முண்டியடித்துக் கொண்டு முன்னேறி வெற்றிக்குமேல் வெற்றியாக வாரிக் குவிக்க, இந்த அப்பாவி மனிதர் அதிலே 'கோழை'யாகிப் பின்தங்கி நின்றுவிட்டதால் அவருடைய 'ஒட்டாண்டி' நிலைமையும் அவருடனேயே ஒன்றி நின்று விட்டது! அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அடிமையாய்க் கிடந்தபோது, செல்வச் செழிப்புடன் 'ஓகோ' என்று வாழ்ந்த அவர், சுதந்திரத் தாயகத்தில் சுதந்திரப் பிரஜையாய் ஆன பின் வறுமை அரக்கனின் இரும்புப் பிடிக்குள் சிக்கித் தலை நிமிர்ந்து நடக்கவும் திராணியற்றவராய்க் கூனிக் குறுகி, நடைப் பிணம் போல் நடமாடலானார். அந்த நிலைமையை அவரால் அதிக காலம் தாக்குப் பிடிக்க முடியாமற் போகவே திடீரென்று ஒரு நாள் மண்டையையும் போட்டுவிட்டார். அவர் தம் குடும்பத்துக்கென விட்டுச் சென்ற ஒரே சொத்து, கடன் என்னும் வெள்ளத்தில் பாதியளவுக்கு மேல் மூழ்கி நின்ற இந்த மொட்டை மாடி வீடு ஒன்றுதான்!

துள்ளித் திரியும் காளைப் பருவத்திலிருந்த முத்துசிவனுக்கு அதுவரை அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடந்த தன் குடும்ப நிலவரம் பற்றி ஏதும் தெரியாது. கொள்ளிக் கடன் தீர்த்து விட்டு இடுகாட்டிலிருந்து திரும்பி வந்தபோதுதான் தன் தந்தை தமக்கு அடுத்து நடத்த வேண்டிய ஈமக் கிரியைகளுக்குக் கூட வக்கு ஒன்றும் வைக்காமல் தாம் போக வேண்டிய கடைசி இடத்துக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார் என்ற விவரத்தை அவன் அறிந்தும் புரிந்தும் கொண்டான்.

அவனுக்கு ஒரே திகைப்பு, பிரமிப்பு, பயம்! ஏன்? அவன் தலைப்பிள்ளை.

ஆமாம்; அவனுக்குப் பின்னால் ஒன்றல்ல, இரண்டல்ல, நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். ஒன்றுக்கொன்று மூன்று நான்கு வயது வித்தியாசம்.

அவனுடைய தாயார் அன்னபூரணியம்மாள் ஒரு மாபெரும் தேச பக்தரின் —விடுதலை வீரரின் — மனைவி என்ற பெருமைக்கு மட்டும் உரியவளாயிருந்தாளே தவிர அவளுக்கென்று தனி வர்ண வித்தாரம் எதுவும் பெறாத 'அந்தக் காலத்துக் கோஹினூர்' — போல்ட் டைப்பாக இருந்தாள்! (அவளை அவள் கணவர் அப்படித்தான் செல்லமாகவும் கேலியாகவும் விளிப்பது வழக்கம்.) மற்றபடி அவளுக்குச் சுவையாகச் சமைக்கத் தெரியும்; திருப்பாவையும் திருவெம்பாவையும் தலைகீழாக மனப்பாடம்; காந்தியைப் பற்றி அதிகம் தெரியாது போனாலும், கஸ்தூரிபா பற்றிக் கொஞ்சம் பேசுவாள்; சிக்கனம் பற்றி ஒரு பெரிய புத்தகம் எழுதுமளவுக்கு அவளிடம் அநுபவ விவரங்களைச் சேகரிக்கலாம்; நன்றாக ஒப்பாரி வைத்து அழுவாள்; நாளெல்லாம் அலுப்புச் சலிப்பின்றிக் கவலைப்படுவாள்.

இப்படிப்பட்டவள் இப்போது என்ன செய்வாள்? என்ன செய்வாளோ, அதைத்தான் செய்தாள் — அதாவது, பூஜை அறையில் உட்கார்ந்து தன் அழுகையைத் தானே ரசித்து அழுதாள்.

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற் போல் ஒன்றுமே தெரியாமல் — ஒன்றுமே புரியாமல் — தன் தாயின் பக்கத்தில் அமர்ந்து முத்துசிவனும் அழுது கொண்டிருந்தான். மூலைக்கொருவராய் முடங்கிக் கிடந்த அந்த நான்கு பிள்ளைகளும் அவ்விருவர் முகத்தைப் பார்த்துப் புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

முத்துசிவனுக்கு அடுத்தவள் ஜானகி; அப்போது அவளுக்கு வயது பதினெட்டு. அடுத்தவன் தில்லைநாதன்; பதினாறு வயது இளைஞன். அவனுக்கு நேர் இளையவன் வலம்புரி; பன்னிரண்டு வயதுச் சிறுவன். கடைக்குட்டிப் பெண் மைதிலி; கவுன் போட்ட ஒன்பது வயதுச் சிறுமி அவள்.

தானும் அழுது கொண்டு தன்னைப் பார்த்துத் தேம்பி அழும் தன் தம்பிகள் தங்கைகளையும் பார்த்துக் கொண்டே தனது கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்ட முத்துசிவனின் கையில் அவனுடைய மேலுதட்டின் இரு புறங்களிலும் மொசு மொசுவென்று அரும்பு கட்டியிருந்த இளம் மீசை தட்டுப்பட்டது. அதை மேலும் இரண்டொரு முறை ஸ்பரிசித்துப் பார்த்த மறு கணம் அவனுக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை; திடுமென்று எழுந்து நின்றான். குளமாகியிருந்த அவன் கண்கள் வறண்டு ஒரு கம்பீர ஒளி பெற்றன. உடம்பில் புதுத் தெம்பு; உள்ளத்தில் அச்சமற்ற ஒரு மதமதர்ப்பின் ஆங்கார உத்வேகம்!

தன் கல்லூரிப் பாடப் புத்தகங்களையெல்லாம் ஒரே கட்டாகக் கட்டி அலமாரியின் மேல் தட்டில் தூக்கிப்போட்டு விட்டு எங்கோ வெளியே போனான்; யார் யாரையோ பார்த்தான்; ஏழெட்டுத் தினங்கள் பசி தாகம் நடை சோர்வு முதலான எந்தப் பிரக்ஞையுமின்றிச் சுற்றியலைந்தான். ஒன்பதாம் நாள், ''அம்மா! கால்நடைத் தீவன உற்பத்திக் கம்பெனி ஒன்றின் விநியோகக் காரியாலயத்தில் நான் கிளார்க்காக வேலைக்கு அமர்ந்து விட்டேன். மாசம் நூத்தைம்பது ரூபாய் சம்பளம்'' என்றான் பெருமை வழியும் குரலில்.


இருண்டு கிடந்த பூஜை அறையில் விளக்கேற்றி வைத்துவிட்டுப் புன்னகையுடன் வெளியே வந்த அன்னபூரணியம்மாள் தன் அன்பு மகனை அணைத்து உச்சி மோந்தாள். அந்த வீட்டில் பல காலத்துக்குப் பின் முதன் முறையாகச் சிரிப்பொலிகள் கேட்டன.

முத்துசிவன் தன் தாயிடம் அன்று சொன்ன தகவல் அது. அன்றைய தினம் அவன் வாய் விட்டுச் சொல்லாத அவனுள்ளேயே அழுந்திப் போன மற்றொரு விஷயமும் இருந்தது.

தன் தாயையும், தன்னைச் சுற்றி நின்ற தம்பிகள், தங்கைகளையும் ஒரு முறை நன்றாகப் பார்த்து விட்டுப் பின் கூடத்து அறைச் சுவரில் மாட்டப் பட்டிருந்த தந்தையின் பெரிய புகைப் படம் ஒன்றை ஏறிட்டு நோக்கியவாறு தனது மனத்துக்குள்ளாகவே இவ்வாறு சொல்லிக் கொண்டான்:

'அநாதரவான நிலையில் விடப்பட்டுள்ள இந்த என் அன்புத் தம்பிகளையும் தங்கைகளையும் என்னால் இயன்ற வரை கஷ்டம் தெரியாமல் வளர்த்துப் படிக்க வைத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரோரு நல்ல இடத்தில் பெண்ணும் மாப்பிள்ளையும் தேடிச் செய்து குடியும் குடித்தனமுமாக வைக்கும் வரையில் நான் எனது சொந்த வாழ்க்கையில் எந்த ஒரு சுகத்துக்கும் ஆசைப்பட மாட்டேன்; எனக்கென்று ஒரு தனித் துணையோ, தனி வாழ்க்கையோ அமைத்துக் கொள்ள மாட்டேன்.'

இப்படி ஓர் இலட்சியத்தைச் சபதமாக்கி அதை ஒரு வைராக்கிய வெறியோடு தன் நெஞ்சிலே புதைத்துக் கொண்ட முத்துசிவன் அன்று முதல் அந்த இலட்சியத்தின் ஒரு புற வடிவமாகவே தன்னை ஆக்கிக் கொண்டு இயங்க ஆரம்பித்தான். **(தொடரும்)**



புதுடயரா அல்லது டிவிஎஸ் ரீடிரெட் செய்ததா?

சொந்தக்காரருக்கு மட்டுமே தெரியும்!

மதிநுட்பமுள்ள கார் சொந்தக்காரர்கள் என்ற முறையில் உங்கள் டயர்கள் ரீடிரெட் செய்யப்படுவதன்மூலம் அதிக நாளைக்கு பயன்படுவதையே நீங்கள் விரும்புவீர்கள். எனினும் வெளிப்படையாக ரீடிரெட் செய்யப்பட்டதாக தோன்றும் ஒரு டயரை உபயோகிக்க நீங்கள் விரும்பமாட்டீர்கள். டிவிஎஸ் ரீடிரெட் செய்தவை புதியனபோலவே தோற்றமளிக்கின்றன, புதியன போலவே உழைக்கின்றன. அவை ரீடிரெட் செய்யப்பட்டவை என்று உங்களுக்குமட்டுமே தெரியும். மேலும் எவ்வளவோ செலவு மிச்சம்! புதிய டயர் ஒன்றின் விலைக்கு நீங்கள் மூன்று டயர்களை ரீடிரெட் செய்துகொள்ளமுடியும்!

TVS

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்


இந்தியாவிலேயே மிகப்பெரிய ரீடிரெடிங் ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் (இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

பங்களூர்-கோயமுத்தூர்-சென்னை-புதுக்கோட்டை - செகந்திராபாத்-திருநெல்வேலி-விஜயவாடா

(I-474)

ஆபீஸிலே ஒரு துக்ளக்!



உயர உயர வளர்ந்த ஓர் ஆங்கிலேய தம்பதிகள், தரைத்தரை உடையணிந்த ஒரு வட இந்தியர். இவர்களைத் தவிர முதல் வகுப்பிலிருந்து யாருமே இறங்கக் காணோம்.

பிளாட்பாரத்தில் கூடியிருந்த கும்பலில் சிலர் விழித்தார்கள். பலர் கிராப் தலை கலையாதவாறு சொறிந்து கொண்டார்கள். இன்னும் சிலர் தவித்தார்கள். ''வரவில்லையா?''

''அதுதானே! வரவில்லை போலிருக்கிறதே!'' என்றவாறு கையிலிருந்த ரோஜா மாலையைப் பிய்த்து வாயில் போடப் போன கண்ணனின் கை வெடுக்கென்று பறிக்கப்பட்டது. திரும்பிப் பார்த்தால்...

வதவதவென்ற உருவம்... செவசெவ என்ற நிறம்...குறுகுறுவென்ற கண்கள் (கண்ணாடி போட்டது) ... தொள தொளவென்ற கன்னம்... ''நீங்கள் தமிழ் நாடு கன்சர்ன்ஸ் லிமிடெட் காரங்கதானே?''... என்ற கேள்வி.

''ஆமாம்...'' என்று கோரஸ் கிளம்பவே வெடுக்கென்று மாலையைப் பிடுங்கித் தன் கழுத்தில் மாட்டிக் கொண்டதல்லாமல் கைதட்டலையும் ஆரம்பித்து வைத்தார் அவர். ''நான்தான் மிருத்யூ பூதம். உங்கள் புது மானேஜர்.''

படபடவென்று கைதட்டல் கிளம்பியது.

''நாங்கள் உங்களை முதல் வகுப்பில் தேடிக் கொண்டிருந்தோம் ஸார்.''


''மூன்றும் வகுப்பில் வந்தேன்.''

''அதென்ன அது?'' — கண்ணன் கேட்டான் படபடப்புடன்: ''முதல் வகுப்பு ரிசர்வ் செய்திருக்கிறதாகத் தந்தி கூட வந்ததே.''

''அதுவா?'' அவர் சொன்னார் அலட்சியமாக. ''மூன்றும் வகுப்பு டிக்கட் வாங்கி முதல் வகுப்பில் பிரயாணம் செய்தால் அனுமதிக்க மாட்டார்களில்லையா? அவர்களைப் பழிவாங்கவே முதல் வகுப்பு வாங்கி மூன்றும் வகுப்பில் வந்தேன். எப்படியும் மாறித்தான் வந்தேன். இப்போதென்ன பண்ணுவார்களாம்?'' என்று மற்றவர்களை அயரவைத்தவர் சிணுங்கினார். ''நல்ல மாலை வாங்கி வரக் கூடாதா? அரளிப் பூ வைத்துக் கட்டி இருக்கான்கள்'' என்று முணு முணுத்தவாறு நடக்கலானார்.

குளிர் சாதன அறையில் குளிர்பானத்தை உறிஞ்சிக் குடித்த மிருத்யூபூதம் ஸ்ட்ராவை ஒடித்துப் போட்டார்.

ராஜேந்திரகுமார்



''ஆபீசைச் சுற்றிப் பார்க்கலாம் வா'' என்று உதவி மானேஜருடன் ஒவ்வொரு டிபார்ட்மெண்டாகச் சுற்றிச் சுற்றி வந்தார். அவரது சிறுங்கிய முகம் சிறுங்கியே இருந்தது. ''அந்த டேபிளே இங்கே மாற்று... அந்த நாற்காலியை எடுத்து அப்படிப் போடு.. பீரோவை நகர்த்து. குப்பைக் கூடையைத் தூக்கி மாற்று...'' என்றெல்லாம் மாற்றியும் திருப்தியில்லாமல் போகவே, கடைசியில், ஆபீஸையே மாற்று. புதுக் கட்டிடம் பாரு'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.



ஆற்றங்கரை ஓரமாக ஒரு புதுக் கட்டிடத்துக்கு மாற்றுவது என்று ஏற்பாடாயிற்று. ''வாடகை கொஞ்சம் அதிகமானாலும் கூடப் பரவாயில்லே. அழகா யிருக்கிறதே'' என்று அனுமதித்து அட்வான்ஸ் கொடுத்துப் பாதிக்கும் மேல் மேஜை நாற்காலிகளும் கூடக் கொண்டு போயாயிற்று.

தனது குளிர் சாதன அறையில் அமர்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த மிருத்யு பூதம் எதையோ நினைத்துக் கொண்டு எழுந்து வெளியே வந்து பார்த்தார். எல்லார் முகங்களிலும் குதூகலம் தெரிந்தது. ஒன்றிரண்டு பேரைத் தவிர மீதிப் பேரெல்லாம் வாலிபர்கள். வளர்ந்து, உடையுடுத்தி, 'ட்ரிம்'மாக இருக்கும் அவர்களைக் கண்டதும் அவருக்குச் சந்தேகம் வந்து விட்டது. கணக்கன் கண்ணனைக் கூப்பிட்டு, ''நம் ஆபீஸில் மொத்தம் எத்தனை கட்டைகள்?'' என்று விசாரித்தவர், அவன் விழிப்பதைக் கண்டதும் பயந்து விட்டார். ''கொஞ்சம் விழிக்காமல் இருக்கிறாயா? கேள்வி புரியாவிட்டால் கேளேன் சொல்கிறேன். நம் ஆபீஸில் மொத்தம் எத்தனை பிரம்மச்சாரிக் கட்டைகள் என்கிறேன்.''

''அதுவா ஸார்!'' முகத்தைத் துடைத்துக் கொண்டான் கண்ணன். ''என்னோடு சேர்த்து முப்பத்தி ஆறு.''

''என்ன முப்பத்திஆறு?'' என்றவர் சட்டென்று சொன்னார், ''புதுக் கட்டிடம் கிடையாது''.


''ஸார்!'' கண்ணன் அலறிவிட்டான். ''பாதிக்கு மேல் கொண்டு போயாயிற்று!''

''அதனாலென்ன? திரும்பக் கொண்டு வந்துவிடு. அங்கே பக்கத்துக் காம்பவுண்டில் பெண்கள் கல்லூரி இருக்கிறது. இந்தப் பிரம்மச்சாரிகளைக் கொண்டு போனால் வேலையா பார்ப்பார்கள்? வேடிக்கைதான் பார்ப்பார்கள். ஆகவே புதுக் கட்டிடம் கிடையாது'' என்று கையை விரித்து விட்டார், பூதம்.

ஆபீஸில் கொந்தளிப்பு. முனகல் குரல்கள்.

''இதென்ன கந்த 'ஹுக்ளக்' ராஜ்யமான்னு போச்சு?'' என்று சீறி எழுந்தாள் 'ஜானகி மாமி! என்று அழைக்கப்பெறும் மிஸ் ஜானகி. வயதுதான் இருபதே தவிரப் பேச்செல்லாம் அசல் அம்மாமி ஸ்டைல்தான். ''சித்தப் பொறுங்கோ. நான் போய்ப் பேசிட்டு வரேன்'' என்று உள்ளே போனவள், பத்து நிமிஷத்துக்கெல்லாம் திரும்பி வந்தாள் சிரிப்புடன். ''மிஸ்டர் கண்ணன், போங்கோ கூப்பிடுறார்'' என்று கூறிவிட்டுத் தனது இடத்தில் போய் அமர்ந்தாள்.

திரும்பி வந்த கண்ணன் பரப்பிய சேதி எல்லோரையும் ஜானகியின் ஆசனத்துக்கு முன்னால் வந்து சுற்றி நிற்கவைத்து விட்டது. ''என்ன பண்ணினாய்?'' வேண்டவே வேண்டாம்னுரே! எப்படிச் சம்மதிக்க வைத்தாய்?'' என்பது போன்ற கேள்விகள்.



''இதென்ன பிரமாதமாம்?'' மிஸ் ஜானகியின் கையிலிருந்த காப்பியிங் பென்சில் அவளது உதட்டில் நீல நிறப் புள்ளி ஒன்றை வைத்தது. ''கொடுத்த அட்வான்ஸ் மொத்தம் பதினைந்தாயிரமாச்சே! அது திரும்பக் கிடைக்காதே! அதை எந்தக் கணக்கிலே வைக்கப் போறேன்னு கேட்டேன். 'வே'ன்னு விழிச்சார். 'ஹெட் ஆபீஸிலிருந்து எக்ஸ்பிளனேஷன் கேட்பாங்களே என்ன சொல்லப் போறேள்ன்னு கேட்டேன். அவ்வளவுதான். உடனே பாய்ந்தாரே ஒரு பாய்ச்சல் 'மாற்றச் சொல்லு, மாற்றச் சொல்லுன்னு' ''.

அத்தனை பேர்களும் சொன்ன நன்றி நவிலலைப் புன்சிரிப்புடன் ஏற்றுக் கொண்டாள் ஜானகி. ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த பூதத்தின் முகம் ஆயிரம் கோணலாயிற்று.

ஒரு தரம்...

'' 'ரிசப்ஷனிஸ்ட்' என்றால் வழியில்தான் உட்கார வேணுமா?'' என்று ஒரு மூலையைத் தேர்ந்தெடுத்து உட்கார்த்தி விட்டார்.

காற்று இல்லாத மூலையில் வதங்கிய அந்த விசாரணைக் குமாஸ்தா மிஸ் ரூபி, ஜானகியிடம் ஒரு குறை அழுதாள். ''நீ இரு, நான் போய்ச் சொல்கிறேன்'' என்று உள்ளே போய்ப் பேசிவிட்டு வந்தாள். அவள் பின்னாலேயே வந்த ஆட்கள் 'விசாரணை' மேஜையைத் தூக்கி வாசலிலேயே போட்டு விட்டார்கள்.

வியப்புடன் விசாரித்தவர்களைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்தாள் ஜானகி. ''என்ன சொன்னேன்? ஒண்ணும் பிரமாதமா யில்லே! வருகிறவாளெல்லாம் 'விசாரணை எங்கே'ன்னு என்னையே விசாரிக்கிறா. அவர்களை விசாரணைக்கு அனுப்பி வைக்கிற வேலையையும் சேர்த்து நான் செய்யறேன். ஆக எனக்கு சம்பள உயர்வு தரணும்'னேன். உடனே இடத்தை மாற்றுன்னு அலற ஆரம்பிச்சுட்டாரே அந்த துக்ளக்!''

ஒட்டுக் கேட்டு நகர்ந்த பூதம் பல்லைக் கடித்தார். நாளுக்கு நாள் தம்மால் அந்த ஜானகிக்கு மதிப்பு ஏறுவதை அவரால் தாங்க முடியவில்லை. எப்படியாவது அவளுக்கு ஏதாவது கெடுதல் செய்யாவிட்டால் அவருக்குத் தாங்காது போலிருந்தது. 'சமயம் வரட்டும்' என்று கறுவிக் கொண்டார்.

சமயம் வந்தது.

சில மாதங்களுக்குப் பிறகு பம்பாயிலிருந்து அனுப்பப்பட்ட சில ஆடிட்டர்கள் வந்திருந்த சமயம் அது.

மத்தியான டிபனுக்குக் கொண்டு வந்திருந்த வெங்காய அடையைத் தின்று தீர்த்துவிட்டு, கையிலுள்ள எண்ணைப் பசையைத் துடைப்பதற்காக ரஃப் பேப்பரிலிருந்து ஒரு பேப்பரை பரட்டென்று கிழித்த ஜானகி விருட்டென்று எழுந்து விட்டாள்.

அலறியடித்துக் கொண்டு ஓடிவந்த மிருத்யு பூதத்தைக் கண்டு வெல வெலத்துப் போய் நின்றாள். ''என்ன ஸார்?'' என்று நடுங்கினாள்.

''ஜானகி!'' மூச்சு இரைத்தது அவருக்கு. ''பாவிப் பயல்கள். அந்த ஜாலி ஜிம்கானா எஸ்டிமேட்டைக் கேட்கிறார்கள்.

''ப்பூ! அவ்வளவுதானா?'' சாவகாசமாக மேஜை மேல் விழுந்துவிட்ட ரஃப் பேப்பரை எடுத்துக் கை எண்ணெயைத் துடைத்துக் கசக்கிப் போட்டாள். ''கேட்பென்னு தெக்கு நன்னாத் தெரியும். அதனாலேதான் எடுத்து வைச்சிருக்கேன்'' என்று சாவகாசமாக மேஜையைத் துழாவினாள். பிறகு பரபரப்புடன் தேடினாள். மேஜை மேல்...மேஜை டிராயர்கள்...மேஜைக்குக் கீழே... குப்பைக் கூடையில்... தேடு தேடென்று தேடிவிட்டு பூதத்தைப் பார்த்து விழித்தாள். ''பத்திரமா எடுத்து வைச்சேனே'' என்று கையைப் பிசைந்தாள்.

''அதுதான் எங்கே?''

''ஆங்! அதுதான் மறந்து போச்சு. எங்கேன்னு தெரியல்லே ஸார்.''

''நான் ஸென்ஸ்'' என்று ஆரம்பித்து மிருத்யு பூதம் பத்து நிமிஷம் குறையாமல் திட்டித் தீர்த்துவிட்டு, பொழிந்து தள்ளி நிறுத்தினார். பிறகு வெடித்தார். ''இன்னும் ஏன் என் கண் முன்னாலே நிற்கிறாய்? வயிற்றைப் பற்றி எரிகிறது. போய்த் தொலை!''

''அதெப்படி? அஞ்சரை மணி வரை ஆபீஸ் இருக்கே?''

''பேசாதே! பேசாதே என்றால் பேசாதே!'' சீறினார் பூதம். ''உன்னை ரெண்டு நாளைக்கு சஸ்பெண்ட் பண்ணியிருக்கேன். போய்ச் சேர்.''

அவளை டிஸ்மிஸ் பண்ணச் சந்தர்ப்பம் வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்த அவருக்கு, குறைந்தபட்சம் இரண்டு நாட்கள் சஸ்பெண்டாவது பண்ண முடிந்ததே என்ற திருப்தி கிடைத்தது.

''மிஸ்டர் பூதம்'' கைகளைக் கட்டி, நெஞ்சு நிமிர அவள் அப்படிக் கூப்பிட்டதை அவர் ரசிக்கவில்லை என்பது அவரது முகம் போன போக்கிலேயே தெரிந்தது. ''உங்களை ஆபீஸிலே 'துக்ளக்'ன்னு பட்டம் கட்டியிருக்காளோல்லியோ? அது பொருத்தமாத்தானிருக்கு. இரண்டு நாளா? சஸ்பெண்டா? சரி, நான் வரேன்'' என்று டம்பப் பையை எடுத்துக் கொண்டாள். போகிற போக்கில் ''அந்த ஆடிட்டர்கள்கிட்டே மாட்டிண்டு நீங்க நாசமாத்தான் போகப் போறேள். 'அந்த 'ஹிஸ்டாரிக்கல் ஃபேம்' துக்ளக்கூட இப்படித்தான் முன்னே பின்னே யோசிக்காம தண்டிச்சிடுவானாம். என்னையா சஸ்பெண்ட் பண்றேள்? அவஸ்தைப்பட்டுச் சாகப் போறேள்'' என்று சபித்தவாறு போயே போய் விட்டாள்.

கையைப் பிசைந்தவாறு கொஞ்ச நேரம் திருதிருவென்று விழித்த பூதம், ஆடிட்டர்களின் நினைவு வரவே, மூக்குக் கண்ணாடியைச் சரியாக நிமிர்த்தி விட்டவாறு குளிர் சாதன அறையினுள் நுழைந்து கொண்டார்.

இரவு மணி பத்து.


ஊரடங்கி, தெருவும் அடங்கி, அந்த ஆபீஸும் அடங்கி வெறிச்சோடிப் போய் நெடுநேரமாகிறது.

பூதம் நெளிந்தார். கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த ஆடிட்டர்களின் பேச்சு ஒரு 'தினுசாக' மாறுவதைக் கண்டதும் அவரது கையும் காலும் லேசாகத் தந்தியடிக்கலாயின. அந்த மூன்று பேரில் ஒருத்தர் அடிக்கடி, ''பெட்டி கேஷ் எவ்வளவு இருக்


பெரிய அளவிலே சமையலா ?
அவசரமான சமையலா ?
சிக்கனமான சமையலா ?
எவ்வகைச் சமையலையும் எளிதாக்குகிறது
கால்காஸ்
கால்காஸ் - சமையலுக்கான நவீன எரிபொருள்- ஓட்டல்கள், மருத்துவ மனைகள், உணவு விடுதிகள் எதற்கும் இன்றியமையாதது. ஏனெனில், கால்காஸ்- உடனடியாக சூடுபிடித்து விரைவிலே நன்கு சமைக்க உதவுகிறது-நேரத்தையும், பணத்தையும் மிச்சமாக்குகிறது-உபயோகிக்கவோ எளிதானது- தேவைக்கேற்ப ஏற்றலாம், அணைக்கலாம்- சுத்தமும், சிக்கனமும்கூட. சமையல் நேரத்தை மணிக்கணக்கில் குறைக்கிறது.
கால்காஸ் பாதுகாப்பானது...கால்காஸ் பாதுகாப்பான எஃகு சிலிண்டர்களில் வருகிறது.
C GAS
வீட்டிலே டெலிவரி கொடுக்கப் படுகிறது !
ஏகபோக விநியோகஸ்தர்கள் : ஈஸ்ட் கோஸ்ட் காஸ் கோ.
48-9-5, கோ-ஆபரேடிவ் காலனி, துவாரகாநகர், விசாகப்பட்டணம்-4.
டெலி : 3516, கன்னிமாரா அனெக்ஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்-2.
டெலி: 83428.
ஏஜெண்டுகள் : மதராஸ், காக்கிநாடா, விசாகப்பட்டணம், விஜயவாடா, ஏலூரு, குண்டூர், பாலகோல், ராஜமுண்டிரி, நெல்லூர், விஜயநகரம், மசூலிப்பட்டணம், சேலம், காட்பாடி, ஓங்கோல், வாரங்கல், பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், கர்நூல், சித்தூர், திருப்பதி, போபிலி, பார்வதிபுரம், ராமசந்திர புரம், சோம்பேட்டா, பெர்ஹாம்பூர், நரசாரவ்பேட், ஸ்ரீகாகுளம், கூடூர், ஜெய்ப்பூர், கம்மம், ஈரோடு.
கால்டெக்ஸ் தயாரிப்பு
C-GAS-G-5-68 TM.



அ..ப்..பா!...தாங்க முடியாத ஜலதோஷம்!



அன்பையே தடவுவதுபோல, கொஞ்சம் விக்ஸ் வேபோரப்பை தடவுங்கள்

மூக்கிலும், மார்பிலும், முதுகிலும் விக்ஸ் வேபோரப்பை தடவியதும், அவனுக்கு ஜலதோஷத்திலிருந்து, உடனே நிவாரணம் கிடைக்கிறது. விக்ஸ் வேபோரப்பின் இளம் சூடான ஆவியினால், உங்கள் செல்வம் சுகமாக மூச்சு விடுகிறான். இரவு பூராவும் அவன் நிம்மதியாக உறங்குவான்.



விக்ஸ் வேபோரப்

ஒரே இரவில் ஜலதோஷத்திலிருந்து நிவாரணம் அளிக்கிறது

றது?'' என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்.

''என்ன ஐயா ஆபீஸ் இது? இன்னும் கூட மணி பத்து அடிக்கவில்லே. அதுக்குள்ளே வெறிச்சோன்னு போயிடுச்சு. ஓர் ஈ காக்கையைக் கூடக் காணோமே. கூர்க்கா கூட மவுண்ட் ரோடு புகாரிக்குப் போயிட்டான், சாப்பாடு கொண்டு வர. இப்ப இந்த ரூம் இருக்கிற இருப்பிலே உன்னைக் கொலே செய்தாலும் கூடக் கேட்பாரில்லே போலிருக்கே?''

''கொலே'' துள்ளி எழுந்து மேஜைமீது சாய்ந்த பூதத்தின் கைப்பட்டு அவருக்கே தெரியாமல் 'இன்டர் காம்போன்' கருவியின் பித்தான் அழுத்திக்கொண்டது. ''கொலேயா? என்ன பேசறீங்க?'' என்று பயங்கரமாக அலறினார்.

''ஷட் அப்!'' என்ற கோரலுடன் மூன்று நாற்காலிகள் பின்னுக்குத் தள்ளப்படும் ஓசையும் கேட்டது. 'டக் டக்' என்ற பூட்ஸுகளின் ஒலியுடன் அவரது நெஞ்சின் படக் படக் ஓசையும்கூடக் கேட்டது. உற்றுப் பார்த்தவாறு பூதத்தை நெருங்கி வந்தவர்கள் சட்டென்று மூன்று கத்திகளை எடுத்து அவர் நெஞ்சுக் குழியில் பதித்ததும், உயிரே போய்விட்டாற் போல், ''யாவ்! கத்திகள்'' என்று அலறி விட்டார்.

''ஸ்ஸு! கூச்சல் போட்டே ஒரே சதக்!'' என்று மீசைக்காரன் அதட்டினான். ''நீ ஒரு மடையன்.... முட்டாள்! எங்களைப் போய் ஆடிட்டர்கள் என்று நம்பினையே! பம்பாயிலிருந்து வந்த ஆடிட்டர்களை வழியிலேயே மடக்கி மறைச்சு அவர்களின் அத்தாட்சிப் பத்திரங்களைப் பறிச்சிட்டு வந்து நின்னோம். எங்கள் முகமூடிக் கொள்ளைக் கூட்டத் தலைவி ரொம்ப புத்திசாலி. அவள் யோசனை பலிச்சிட்டது நீயும் ஏமாந்தாய். அது சரி, பெட்டி கேஷ் எவ்வளவிருக்கு? சொல்லிடுடா நாயினு!'' என்று கத்தியின் கூரான முனையை அவர் கழுத்தில் பட்டும் படாமலுமாக ஓட விட்டான்.

கொஞ்ச நேரத்தில்.... நாற்காலியோடு கட்டிப் போடப்பட்ட பூதம் விழிக்க, பெட்டியிலிருந்த மூவாயிரம் ரூபாயையும் ளெப்பிக் கொண்டு, 'பை பை' என்று சொல்லி வெளியே வந்து ஹாலேயும் கடந்து ரோட்டுக்கு வந்து ஆடிட்டர்கள் திடுக்கிட்டு நின்று விட்டார்கள். உள்ளே....

திணறி, திமிறிக் கொண்டிருந்த பூதம், கதவு மெல்லத் திறக்க, இரட்டைப் பின்னலும் முகமூடியுமணிந்த ஓர் உருவம் உள்ளே வரவே, ''யார் நீ?'' என்று அலறினார். ''நானு? கொள்ளைக் கூட்டத் தலைவி இதோ! ராஜஸ்தான் முக மூடி!'' என்றவாறு நெருங்கி வந்து அவர் நெஞ்சில் கத்தியைப் பதிய வைத்ததும்.... ''யாவ்...வ்...... போலீஸ்....'' என்று அலறிய பூதத்தினால் நம்பவே முடியவில்லே.



குதிரைப் பந்தய மைதானத்துக்குள் போக நுழைவுச் சீட்டுக்குக் கட்டணம் ரொம்ப அதிகம். கொஞ்சம் குறைச்சலா இருந்தால் என்னைப் போன்ற ஏழைகளும் போய் எங்களுடைய பணத்தை தொலைக்கட்டு வரலாமில்லையா?

திமுதிமுவென்று அறையில் நுழைந்தது போலீஸ் கூட்டம். கட்டுக்களை வெடுக் வெடுக் கென்று அந்த முகமூடி அறுத்து விடவே துள்ளி எழுந்த பூதம், அவள் முக மூடியை இழுத்துப் பார்த்து ''அடிப் பாவி! நீயா? நீயா அந்த முகமூடித் தலைவி? போச்சே! என் ஆபீஸ் பணம் மூவாயிரம் போச்சே! இன்ஸ்பெக்டர்! கைது செய்யுங்க இவளை!'' என்று கத்தினார்.

''என்ன ஸார், இது? இன்ஸ்பெக்டர் சொன்னார். ''இவர்கள்தானே போன் பண்ணி எங்களை வரவழைத்து. இத்தனை திருடர்களையும் பிடித்துக் கொடுத்தாங்க. அதற்கு நாங்க நன்றி தான் சொல்லணும். நீங்க இவங்களை அரெஸ்ட் பண்ணச் சொல்றீங்களே?''

''அப்படியா ?''

''ஆமாம், சார்!'' ஜானகி சொன்னாள். ''ஆபீஸுக்குள்ளே நான் நுழையவும், 'இன்டர்காம்' போனிலே உங்க அலறல் கேட்டது. ஆரம்பத்திலேயிருந்தே எனக்கு அந்த முகமூடி ஆடிட்டர்கள் பேரிலே சந்தேகம். எல்லாம் கேட்டுப் புரிஞ்சுகிட்டேன். உடனே பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ணினேன். அவர்களும் ரைட் டயத்துக்கு வந்து வாசலிலேயே மடக்கிப் பிடிச்சுகிட்டார்கள்.''

பூரித்துப் போன பூதத்துக்குச் சந்தேகம் வந்துவிட்டது. ''அது சரி, நீ எங்கே இங்கே வந்தாய் ? அதுவும் இந்த நேரத்திலே.... அதுவும் தவிர நான் சஸ்பெண்ட் வேறு பண்ணியிருக்கேனே?''

''ஆத்துக்குப் போனதும்தான் சந்தேகம் வந்தது. ரஃப் பேப்பரை என்னெய் துடைக்க எடுத்தேனல்லியோ, நீங்க வந்த வேகத்தைப் பார்த்ததும் டேபிள் பேலேயே மறுபடியும் எடுத்தப்ப தவறுதலா அதோடகூட எஸ்டிமேட்டையும் எடுத்து கசக்கிட்டேன் போலிருக்கேன்னு சந்தேகம். காலையிலே குப்பை வாரிப் போட்டுடுவான்களேன்னு இப்பவே பார்த்துண்டு போகலாம்னு வந்தேன். வந்ததும் நல்லதாத்தான் போச்சு!'' என்றவள், ''இந்தாங்கோ ! உங்க வெள்ளியிலே செஞ்சு, தங்க முலாம் பூசி, வைரக் கல்லு பதிச்ச பெரிய எஸ்டிமேட்'' என்று கசங்கி, என்னெய் ஊறிப் போன எஸ்டிமேட்டை அவர் கையில் வைத்தாள் ஜானகி.

மிருந்து பூதத்துக்கு வாயெல்லாம் பொக்கையாயிற்று. ''கொழந்தே ஜானகி! என்னை துக்ளக்னு சொன்னாயே, அது ரொம்பவும் சரி. உன் சஸ்பெண்டை வாபஸ் வாங்கிண்டேன். நாளைக்குக் காலையில் ஆபீஸுக்கு வந்துவிடு !'' என்றார் பாசத்துடன்.

பொன்னிவனத்துப் பூங்குயில்



கொத்தமங்கலம் சுப்பு

அத்தியாயம் 46

தன்னை இழந்தாள்

திருவரங்கம், திருவானைக்காவல் உச்சிப் பிள்ளையார் கோயில் ஆகிய மூன்றையும் பற்றிக் கர்னாடக இசையில் குயிலி பாடியவுடனே கூட்டமும் தன்னை மறந்தது. குயிலியும் தன்னை மறந்தாள். ஆவேசம் கொண்டவள் போல் ஆடினாள். பரதம் ஆடிய அவள் பாதங்களில் ஆதி தாளம் பிறந்தது. அவளது அங்க அசைவுகளில் லயித்து ரூபத்தையே அகமாகக் கொண்டு தாளம் விளங்கியதால் ரூபத்திலிருந்து ரூபகம் பிறந்தது. மத்தளத்தின் அரைச் சாப்பில் முத்து முத்தாகச் சாப்புத் தாளம் ஜமாய்த்தது. பண்ணில் ராகமும் பத்து விரல்களில் பாவமும் மிதந்தன. ஆட்டத்தின் உச்ச நிலை. பந்து போல் தாவினாள். அரசர் அவளை வியப்புடன் பார்த்தார். உடனே உயரே நோக்கினார். அங்கு அரண்மனைப் பெண்கள் உட்காரும் மேற்பரப்பின் சாளரத்தில் தொங்கிய பட்டுத் திரையை விலக்கிய அவரது பத்தினி அன்னபூரணி தேவியாரின் கண்கள் அவரைச் சந்தித்தன. 'அற்புதம் அற்புதம்' என்று கூறின. இதே நேரத்தில் குயிலியின் கண்களும் மேல் உப்பரிகையை நோக்கின. அங்கே மேல்தளத்தில் திறந்திருந்த ஒரு சாளரத்தின் ஓரத்தில் சிப்பாய் வேஷத்தில் சிங்கன் நின்று கொண்டிருந்தான். அவனது சிவந்த விழிகள் குயிலியின் நெற்றியில் வெற்றித் திலகத்தை இட்டன. அதே நேரத்தில் அவனது வலக் கண், ''அதோ பார், அதோ பார்!'' என்று அரங்க மேடையின் மேல் தொங்கும் அலங்கார விளக்கை அவளுக்குக் காட்டியது. ஆட்டத்தின் இடையே குயிலி அவசரமாக அங்கு கூர்ந்து நோக்கினாள். ஓர் அநியாயம் நடந்தது. அமைச்சர் சின்னப் பெருமாள் விளக்குக் காரனுக்குத் தன் கண்ணால் ஏதோ ஜாடை செய்வதையும் அதற்குப் பணிந்து அவன் விளக்குக் கயிறுகளில் பொருத்தப்பட்டிருந்த சிறு நூல் ஒன்றைப் பிடித்து இழுப்பதையும் கண்டாள். அடுத்தகணமே அந்த விளக்கிலிருந்து நறுமணத் தைலம் தாரை தாரையாகத் தரையில் கொட்டியது. தையலின் ஆட்டத்தையே பார்த்த மக்கள் தைலத்தைப் பார்க்கவில்லை. குயிலி கொண்டாள் கோபம். ஆட்டத்தில் தன்னைக் கவிழ்க்கச் சூழ்ச்சி நடக்கிறது என்று புரிந்து கொண்டாள். 'ஆவியை விட்டாலும் விடலாம், ஆட்டத்தை நிறுத்தக் கூடாது', 'தாள்கள் தவறினாலும் தாளம் தவறக் கூடாது', 'கால் வழுக்கினாலும் கலை வழுக்கக் கூடாது' என்று அவள் இதயம் எச்சரிக்கை செய்தது.

தகிட தகிட தகிட என்று துரித காலத்தில் முழக்கினான் சின்னத்தம்பி. அதில் ஒன்றை அரை ஆக்கி அவளது கால்களிலிருந்து ஜதிகள் பிறந்தன. அப்போது அம்மா! அவளது இடது கால் எண்ணெயில் சிக்கி வழுக்கியது. மக்கள் ''ஹா!'' என்றனர். அதே வேகத்தில் தன் உடலையும் அதே திசையில் சாய்த்த குயிலி அரங்கத்தின் இடப் பாகத்துக்குச் சரேலென்று வழுக்கியபடி சென்றாள். அங்கிருந்த

விளக்குத் தூணில் தன் சட்டை விரலால் லாகவமாகத் தாளத்தோடு ஓர் அழுத்து அழுத்தினாள். உடனே கண்ணாடிக் கல் நெடுபாகுந்தன் வலது புறத்தில் சாய்ந்து பாய்ந்து ஆடினாள். இடதுசாரி வலதுசாரியாக அவள் ஆடுவதைக் கண்ட ரசிகர் கூட்டம் பேராரவாரத்துடன் கரகோஷங்களை முழக்கியது. எண்ணெய் வழுக்குவது அவர்களுக்குத் தெரியவில்லை. அந்தப் பெண்ணின் பேராற்றலைப் புகழ்ந்தார்கள். சின்னத் தம்பி மூத்தாய்ப்பை வைத்து நிறுத்தும்வரை அவள் நின்ற இடத்தில் நில்லாமல் சாய்ந்தும், நெளிந்தும் சலங்கை குலுங்க, ருசிகர் முழங்கச் சபையோரின் விழிகளை பிதுங்க நாட்டியம் புரிந்தாள். மத்தளம் நின்றது. அதனால் தெரியும் பிறகு வேண்டியதாயிற்று. நின்றவுடனே அவளது கால்கள் துவண்டன. எண்ணெய்த் தரையில் சாய்ப் போனாள். அடுத்தகணமே அரசரது கரங்களில் அவள் கிடந்தாள்.



ஆபத்தை உணர்ந்த அரசர் சரேலென்று எழுந்து தம் கையால் அவளைத் தாங்கி விட்டார். அதையும் மக்கள் அரசரது பாராட்டாகவே கருதினார்கள். ''சபாஷ் மகளே, சபாஷ்!'' என்று அவளது முதுகில் இலேசாகத் தட்டினார் தஞ்சை மன்னர். அதற்குள் குயிலி அவர் கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அரசர் பெருமான் காலடியில் விழுந்து வணங்கினாள்.

''பெண்ணே, எழுந்திரு!'' என்றார் அரசர். குயிலி எழுந்தாள். மூச்சு வாங்கத் தலை குனிந்து நின்றாள். அது வரை கூட்டத்தினரின் கரகோஷம் அந்த மஹாலை நிரப்பிக் கொண்டிருந்தது.

''அருமை! அருமை! பெண்ணே, இவ்வளவு அருமையாக நாட்டியம் செய்ய நீ யாரிடம் கற்றுக் கொண்டாய்?'' என்று மிகப் பரிவுடன் கேட்டார் நாட்டிய நூலை நன்கு அறிந்த மன்னர்.

''மகாராசா, இவை யெல்லாம் உங்கள் பிச்சைதான். அழிய விடாமல் நீங்கள் காப்பாற்றி வரும் காவேரிக் கரைக் கோயில்களில்தான் இந்தக் கலைச் செல்வங்களைக் கற்றுக் கொண்டேன். உங்கள் காலடிதான் என் கலைப் பள்ளி'' என்று கூறி மறுமுறையும் காவலன் திருவடியில் விழுந்து வணங்கக் குனிந்தாள் குயிலி. அப்போது அவளுடைய நயனங்களில் பொங்கிய கண்ணீர்த் துளிகள் நற்கலைகளைக் காக்கும் அரசரின் நளின மலர்ப் பதங்களை நனைத்தன. குயிலி எழுந்தாள்.

அப்போதுதான் எதிரிலிருந்த ஆடும் மயிலைப் பார்த்தாள். அவளை அறியாமல் ஏதோ ஒரு பாசம் அவளை ஆட்டி வைத்தது. அவளுடன்தான் நாம் போட்டி போட்டோம் என்பதையும் மறந்து 'வணக்கம் இளவரசி!' என்று கைகளைக் கூப்பினாள். ஆனால் அரசிளங் குமரியோ தன் முகத்தை அலட்சியமாகத் திருப்பிக் கொண்டாள்.

''பெண்ணே, பரதம் மட்டுமல்ல. உன்னிடம் பண்பும் நிறைந்திருக்கிறது'' என்ற மன்னர் பின்வருமாறு உரைத்தார்:


''இளவரசியார் இன்று அற்புதமாக ஆடினார்கள். கலை எல்லைகளுக்கு அப்பாற்பட்டது. அதில் மேல்நாடு, கீழ்நாடு என்ற பேதமில்லை. அது கறவைப் பசுவின் பால் போன்றது. ஆயினும் அதில் பக்தியைக் கலக்கும் பொழுது பாலில் சர்க்கரை போட்டது போல் ஆகின்றது. வெறும் இன்பத்தை மட்டும் கலக்கும் பொழுது பாலில் உப்பை இட்டது போல் ஆகி விடுகின்றது. சிருங்கார ரசம் ஒன்றையே கொண்ட மேல்நாட்டு ஆட்டம் இன்று நம் கண்ணிலே நிற்கவில்லை. அந்த இசையோ காதிலே நிற்கவில்லை. குயிலி வந்தவுடன் அவை எங்கோ ஓடிவிட்டன. குயிலியின் குரலே முதலில் நம்மைக் கவர்ந்தது. நான் எத்தனையோ இசை நூல்களை எழுதியவன். ஆனால் இசையைப் பற்றி எவ்வளவு எழுதினாலும், எவ்வளவுதான் பேசினாலும், இந்தப் பெண்ணின் குரல் போன்ற சுகமான சாரீரத்தில் வரும் ஒரு கார்வைக்கு எங்களது எழுத்தும் பேச்சும் இணையாகாது என்பதை நான் உணர்ந்தேன்.

''இந்தப் பெண்ணிற்கு இன்றையப் போட்டி வெற்றியின் சன்மானமாக உங்கள் மகாராணி மீனாட்சி தேவியின் சார்பாக இந்தப் பொன் இழைத்த சேலையையும், திருவரங்கப் பெருமான் உடுத்துக் களைந்த பீதாம்பரம் ஒன்றையும், கல் இழைத்த கங்கணங்கள் இரண்டையும் பரிசாக அளிக்கின்றேன். இதை இளவரசியார் கையாலேயே கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்....'' என்று பரிசுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த வெள்ளித் தாம்பாளத்தைத் தன் கரத்தால் இளவரசியிடம் கொடுத்தார். இளவரசி அதை வாங்கிக் குயிலியின் முன் நீட்டினாள். குயிலி அதைப் பெற்றுக் கொள்ளும் போது இளவரசியின் பார்வை கூரிய வாள்போல் குயிலியின் விழிகளில் குத்தியது. மக்களின் கரகோஷத்துக்கிடையே மன்னர் தம் கையில் இரண்டு பொற்கிழிகளைத் தாங்கியவண்ணம், ''மேல்நாட்டு ஆட்டத்தில் சிறந்து விளங்கியதற்காகவும், கீழ்த் திசைக் கலையில் சிறந்து விளங்கியதற்காகவும் இந்தப் பொற்கிழிகளை அரசிளங் குமரிக்கும், குயிலிக்கும் என் காணிக்கையாக அளிக்கிறேன்'' என்று கூறி ஆடும் மயிலின் கரத்தில் ஒரு பொற் பையை வைத்தார். அவள் மரியாதைக்காகப் பெற்றுக் கொண்டாள். ஆனால் குயிலியோ அரசர் கொடுத்த பரிசைத் தன் ஆவியிலும் மேலாக எண்ணி இரு கைகளையும் ஏந்திப் பெற்றுக் கொண்டு தன் அறையை நோக்கி ஓடினாள்.

ஒப்பனை அறைக்கு வந்தாள் அரண்மனைச் செல்வி. அவள் உள்ளே நுழைந்ததுமே அங்கிருந்த அயல் நாட்டுப் பணிப் பெண்கள் ஆவலோடு அவளைச் சூழ்ந்து கொண்டு, ''வெற்றி,

V. S. K.

'பவழவாய்ப் புன்னகைக்கே...பல்லாயிரம் நவமணிகள் உதிரும், உலகமெலாம் ஒளி சிதறும்; என் குழந்தையின் வளர்ச்சிக்கே கோடி வாழ்த்துக்கள் பொழியும். என் பாக்கியம், நான் தேர்ந்தெடுத்தது லீவர்ஸ் குழந்தை உணவு. பாரத நாட்டிலுள்ள குழந்தைகளை ஊட்டிவளர்ப்பதற்கென்றே உருவாக்கப்பட்டது. இயற்கையாகவே அது அவனுக்குப் பூரணமாகப் பொருந்தும் உணவு.



'வழக்கமான எல்லா வைட்டமின்களையும் தவிர, வைட்டமின் B12 சத்தினையும் என் குழந்தைக்குக் கிடைக்கச்செய்கிறது லீவர்ஸ் குழந்தை உணவு. அதோடு ஃபாலிக அமிலமும் கூட. இரண்டுமே இரத்த விருத்திக்கு மிகச் சிறந்தது என்கிறார் என் டாக்டர். புரத சத்துக்களும் அதில் வளப்பமாக உள்ளன. என் குழந்தை திடமாக வளருவதில் வியப்பென்ன. எல்லாவற்றிற்கும் மேலாக, உகந்த ஊட்டப் பொருள்கள் யாவினையும் உசிதமான விகித அளவுகளிலே அடங்கப்பெற்றது— எனவே, முழுமையான 'சரிவிகித' சத்துள்ள குழந்தையுணவு.

'ஆம். லீவர்ஸ் குழந்தை உணவு உண்மையிலேயே முழு நிறைவான உணவு. குழந்தைக்கு மேற்கொண்டு நான் எதையுமே தரத் தேவையில்லை ...அன்பைத் தவிர. உங்கள் குழந்தைக்கும் இதுவே பரிபூரணமான பாலுணவாக அமையும் என்பது திண்ணம்'.



பாரதநாட்டிலுள்ள குழந்தைகளை ஊட்டிவளர்ப்பதற்கென்றே உருவாக்கப்பட்டது

லீவர்ஸ்

குழந்தை உணவு

பரிபூரணமான பாலுணவு

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

வெற்றி ! எங்கள் பாராட்டுக்கள் ! இந்திய நாட்டிலேயே உங்களைப் போல் எங்கள் நடனத்தை ஆடக் கூடிய வர்கள் ஒருவரும் கிடையாது!'' என்று கூறி அவனது கையைக் குலுக் கினார்கள். அதில் அவன் கை செந்தூரம் போல் சிவந்தது. கை சிவந்தால் கண் ணில் நெரி கட்டுமா என்ன? அவள் கண்களும் கோவைப் பழம் போல் சிவந் திருந்தன. தன் கையிலிருந்த பொற் கிழியை ஆத்திரத்தோடு ஒருபுறம் எறிந்தாள். ''என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். நான் தனிமையை விரும்புகிறேன்'' என்று அவர்கள் மீது எரிந்து விழுந்தாள். உடனே அத்தனை பேரும் வெளியே சென்றனர். இள வரசி தொப்பென்று அங்கிருந்த ஆசனத் தில் அமர்ந்தாள்.

''அரண்மனைச் செல்வி அவர்களே ! என் பாராட்டுதலை ஏற்றுக் கொள் ளுங்கள்'' என்று ஒரு குரல் கேட்டது. இளவரசி வியப்புடன் நாற்புறமும் நோக்கினாள். ஒரு தூண் மறைவி லிருந்து மோகன முத்துரங்கம் இள நகை ததும்பும் முகத்துடன் வெளியே வந்தார். அந்தப் புன்முறுவலிலே அப் பூவையின் கோபம் விடைபெற்றது. ஆத்திரம் ஆவலாக மாறியது. ஆயி னும் அமர்த்தலாக, ''ஓ, வித்துவானா? நாட்டியசாலை எங்கும் உம்மைத் தேடி னேன். இத்தனை நேரம் இந்தத் தூணுக்குள்ளா மறைந்திருந்தீர்கள்?'' என்று கூறிக் கொண்டே ஆசனத்தை விட்டுக் குதித்து அவர் கையைக் குலுக் கினாள் இளவரசி.

அந்த மலர்க் கரத்தைத் தொட்ட வுடன் அவள் மனத்தில் ஒரு காந்த சக்தி பரவுவதைக் கண்டாள். ஆயினும் பெண்ணல்லவா ? பேச்சில் விட்டுக் கொடுப்பாளா ?

''வித்துவானே, ஏன் சபைக்கு வராமல் ஓடிவிட்டீர் ?'' என்று ஏளன மாகக் கேட்டாள்.

அவர் சிறிது யோசித்தார்.

''அவளும் சபைக்கு வரவில்லையே!'' என்றார்.

''எவள்?''

''அவள்தான். அந்த அகங்காரம் பிடித்த அரண்மனைச் செல்வி என்னும் தோழி.''

இளவரசி முத்துரங்கத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவர் புன் னகை மாறவில்லை. ''இளவரசியார் அவர்களே, அன்றைக்கே நீங்கள் உங்கள் உண்மைப் பெயரைக் கூறியிருந் தால் நான் இந்தப் போட்டிக்கே ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன். தங்கள் மனத்துக்கும் இத்தனை சிரமம்



''ரேடியோ வேண்டாங்க ! நல்லதா நகர போன் இருந்தால் கொடு சார் !''



''ஊருக்குப்போன என் அம்மாவுக்கு உடனே தந்தி அடியுங்கள் ! காணாமல் போன அவ ளுடைய பத்து காசு கிடைத்து விட்டது!''



''இன்று நான் வீடு திரும்ப நேரமாகும். ஒரு பொதுக்கூட்டத்தில் பேசப்போகிறேன்.''
''சரி, இந்தாருங்கள் முதல் உதவிப் பெட்டி!''



'' எங்கள் சங்கத்துக்கு தாங்கள் லட்ச ரூபாய் செக் கொடுத்தது பற்றி நன்றி ! ஆனால் செக் கிலே தாங்கள் கையெழுத்தும் போடலியே?''
''தரும காரியத்துக்கு நானே என் பெயரை எழுதித் தம்பட்டம் அடித்துக் கொள்வது எனக் கும் பிடிக்காது.''

ஏற்பட்டிருக்காது. நிகழ்ந்தவற்றுக்கு வருந்துகிறேன். இளவரசியாரே! என்னை வழுக்கவில்லை. உங்கள் எண்ணம் வழுவியதுதான் மிச்சம். வணக்கம்'' என்று கூறி வித்துவான் வேகமாக வெளியே நடந்தார்.

ஒப்பனை அறையில் ஒரு மூலையில் தொங்கிய மாலையை எடுத்துக் கொண்டு விரைந்தாள் குயிலி. வசந்த மாளிகையின் மேல் வீட்டில், பழைய அறை ஒன்றில் சிங்கன் இப்போது அவள் அணிவித்த மலர் மாலையோடு நின்றான். தன் கையில் இருந்த பீதாம்பரத்தையும் எடுத்து அவன் மீது போர்த்தினாள் குயிலி.

''போதும், போதும்'' என்றான் அவன்.

''முடியாது. நீ இல்லாட்டி நான் ஏன் அரண்மனையிலே ஆடப்போறேன்? அத்தனை பரிசும் உனக்குக் கிடைச்ச பரிசுகள்தான்!'' என்று கூறி அந்தப் பொன் இழைத்த புடவையையும் அவன் கழுத்தில் தூக்கிப் போட்டாள் குயிலி. அப்படியும் அவள் ஆவேசம் அடங்கவில்லை. மூச்சில் சூடேறியது. விழிக்கடைகளில் பிறந்த பார்வை அந்தச் சிங்கனை அள்ளி விழுங்கியது. என்றுமில்லாத ஒரு பரவசம் அவனை அவள் வசமாக்கியது. இதற்கிடையில் ஒரு போராட்டமும் அவனைப் போட்டுத் துன்புறுத்தியது.

'அவள் இளவரசனையும் காதலிக்கிறாள். அதே நேரத்தில் தன்னையும் விரும்புகிறாள். இதுதான் அவளுடைய போராட்டம்' என்பதைச் சிங்கன் உணர்ந்தான். குயிலி அவன் கரத்தை ஆவலுடன் இறுகப் பற்றினாள். அவன் திடுக்கிட்டான். அவள் அவசரமாகத் தாம்பாளத்தில் இருந்த பொற்கடகம் ஒன்றை எடுத்து அவன் கையில் இடப் போனாள்.

''அடே, நான் என்ன பொம்பளையா?'' என்று திமிறினான் சிங்கன்.

''அது எனக்குத் தெரியாது. இது உன் பங்கு. நீ இதைப் போட்டுக்கிட்டுத்தான் ஆகணும்'' என்று கூவினாள் குயிலி. அவன் கையை நீட்டினான். அதில் கங்கணத்தை இட்டு அந்தக் கையின் அழகைக் கனிவுடன் பார்த்தாள் குயிலி. அவளையே ஆவலுடன் பார்த்தான் சிங்கன். அரசர் கொடுத்த பொற்கிழியில் முடிந்திருந்த பட்டுக் கயிற்றை அவசரமாகப் பிரித்தாள் குயிலி.

''சிங்கா, எங்க மகாராசா கொடுத்த பரிசு. இந்தா, இதிலே பாதி உனக்கு!'' என்று கூறிக் கொண்டே பையிலிருந்த பொற் காசுகளை அவன் தலை மீது கலகலவென்று கொட்டிக் கனகாபிஷேகம் செய்தாள் குயிலி. சிங்கனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியது. அசையாமல் நின்றான். அதில் ஒரு மோகரா கீழே விழுந்து உருண்டு ஓடிக் குயிலியின் கால் மீது பட்டது. அரசர் கொடுத்த பொற்காசு தன் கால் மீது படுவதை அவள் விரும்பவில்லை. திடுக்கிட்டுக் காலை இழுத்துக் கொண்டாள். சரேலென்று கீழே குனிந்து. அந்த மோகராவை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளப் போனாள். திடுக்கிட்டாள். ஆம், அந்த முகம், அந்த மோகராவின் ஒருபுறத்தை அலங்கரித்த முகம் அவளைப் பார்த்து நகைத்தது. ஆச்சரியத்தோடு தன் தலையை மெல்ல உயர்த்தி இருவிழிகளாலும் எதிரில் இருந்த சிங்கனின் திருமுக மண்டலத்தை நோக்கினாள் குயிலி. ஆம், அவரேதான்! அவள் விழிகள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன. ''சிங்கா... நீ... நீங்கள்... நீங்கள்....'' என்றாள். நா தழுதழுத்தது; நயனம் பேசியது.

''ஆம் குயிலி, உனக்குச் சிங்கன்; இந்த ஊருக்கு முத்துரங்கன்; உலகத்துக்குப் பிரதாபசிம்மன்!'' என்று கூறி அவளைத் தம் இரு கரங்களாலும் தழுவினார் பிரதாபசிம்மர்.

''என்னை விடுங்கள், இளவரசே! இதற்கு நான் தகுதி அற்றவள். நான் தாசி'' என்று அவர் கைப்பிடியிலிருந்து நழுவி அவர் கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினாள் குயிலி.

இளவரசர் அவளைத் தூக்கி நிறுத்தி அன்பு மொழி பகர்ந்து ஆறுதல் அளித்தார். குயிலி தன்னை மறந்தாள்.

''சிங்கா! இதுவரை எனக்குக் கிடைத்த பரிசுகளில் பாதியை உனக்குப் பிரித்துக் கொடுத்தேன். ஆனால் இன்றைக்கு முழுமையாக என்னையே கொடுத்து விட்டேன்!'' என்றாள்.

அப்போது 'படீர் படீர்' என்று அதிர்வேட்டுச் சத்தம் கேட்கவே இருவரும் திடுக்கிட்டார்கள். குயிலியை விட்டு விட்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றார் இளவரசர். அங்கு சர்க்கரை நின்றான்.

''தங்கள் தந்தையார் தங்களைத் தேடிக் கொண்டு தஞ்சைக்குச் சென்று விட்டார்கள். அதற்காகத்தான் அதிர்வேட்டுக்கள். தாய் அன்னபூரணிதேவி மட்டும் அரசியோடுகூட விருந்தினர் மாளிகையில் இருக்கிறார்கள், திருமணத்தைப் பற்றிப் பேச'' என்று ரகசியமாக அவர் காதில் உரைத்தான் சர்க்கரை. சொல்லியவன் சர்க்கரை

தலைவலியா?



அவேதன்



சாப்பிட்டு உடனடியாக நிவாரணம் பெறுங்கள்



SQUIBB

SARABHAI CHEMICALS

இ. ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பொரேட்டட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். காம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமைபெற்றவர்கள்.

அற்புத 'எபேப்' அடங்கிய அவேதன தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ மற்றும் இதர சாதாரண வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் துரிதமான, தீமையற்ற, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கிறது.

Shilpi SC 51A/67 Tam

உங்கள் முதலும் வட்டியும், சென்னை அரசாங்கத்தாரால் உத்திரவாதம் அளிக்கப்படுகின்றன.

பிக்ஸட் டெபாசிட்கள்

கீழ்க்கண்ட கவர்ச்சிகரமான வட்டியில் ரூ 50,000 வரை இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

ஒரு வருடமும், அதற்கு மேலும் ஆனால் 2 வருடங்களுக்குள்ளாக	—$5\frac{3}{4}$%
2 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்குள்ளாக	—6%
3 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்களுக்குள்ளாக	—$6\frac{1}{4}$%
5 வருடங்களும், அதற்கு மேலும்	—$6\frac{1}{2}$%

குறைந்த பக்ஷம் ஏற்றுக்கொள்ளப்படும் பிக்ஸட் டெபாசிட் தொகை ரூ. 1000/-

MIIC மதருஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்பொரேஷன் லிமிடெட்.

எல். எல். ஏ. பில்டிங்ஸ். 150-A. மவுண்ட் ரோடு. மதருஸ்-2.
கிளை : 1231, தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்

டி. வி. நரஸிம்மன், எம்.ஏ., ஸி.ஏ., ஐ.ஐ.பி.
செக்ரட்டரி

Criterion MIIC 2083

யாக இருந்தாலும் அந்தச் சொற்கள் நஞ்சுபோல் அவர் காதில் விழுந்தன.

இதே நேரத்தில் தன் அறையிலிருந்த இளவரசி ஆடும் மயில், ''மோசம், மோசம்! அடே பாவி!... நீதானா மோகன முத்துரங்கம்?'' என்று அலறினாள். அவள் கையில் இருந்த தஞ்சாவூர் மோகரா கீழே விழுந்து உருண்டு ஓடியது. ஆனால் இளவரசி விடுவாளா? குபீரென்று பாய்ந்து எடுத்தாள். ''நீ எங்கே ஓடினாலும் உன்னை விடமாட்டேன்'' என்று கூவிவிட்டு அதைத் தன் உள்ளங்கையில் வைத்து இறுக மூடிக் கொண்டாள்.

''என்ன சத்தம். மயிலே, என்னைக் கூப்பிட்டாயா?'' என்று கேட்டவாறே ஆஜரானார் சின்னப் பெருமாள்.

''மாமா, தஞ்சை இளவரசன்தான் மோகன முத்துரங்கம்!'' என்றாள் மயில்.

'' அப்படியா? பின்னே விட்டுத் தள்ளு. நானே உன்னைக் கட்டிக் கொள்கிறேன்'' என்று வீராவேசத்துடன் முன்வந்தார் சின்னப் பெருமாள்.

இளவரசி தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு அவரிடம் குழைந்தாள். ''மாமா, அந்தக் குயிலியின் மோகத்தில்தான் மாமா, அவன் என்னைப் போட்டிக்கு அழைத்திருக்கிறான். அவளுக்கு நான் மட்டமா?'' என்று அழுகையும் ஆத்திரமுமாக மாமனைப் பார்த்தாள் இளவரசி.

''மயிலே, கவலைப்படாதே. இன்று தைலத்திற்குத் தப்பிவிடலாம். நாளை என் தந்திரத்துக்குத் தப்ப முடியாது'' என்று சபதம் போட்டு விட்டு நடந்தார் அந்தச் சகுனி.

மங்கம்மாள் அரண்மனையை அடுத்து உள்ள ''ஆதித்ய மஹால்'' என்று அழைக்கப்படும் அரசாங்க விருந்தினர் விடுதியில் எதிர் எதிராக இருந்த இரு மக்மல் பீடங்களின் மீது மகாராணி மீனாட்சி தேவியும் அன்னபூர்ணாதேவியும் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். ஓர் ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த தஞ்சை ஊதுவத்திகளின் நறுமணம் அவர்களிடையே திருமணப் பேச்சை மிக சுவாரசியமாகத் துவக்கியது. எதிரே உள்ள ஓர் உயர்ந்த பீடத்தின் மீது யானைத் தந்தத்தால் ஆகிய முக்காலியின் மேல் இளவரசர் பிரதாப சிம்மரின் ஓவியம் இருந்தது. மகாராணி மீனாட்சி தேவியார் அதையே உற்றுப் பார்த்தார். ஆஜானுபாகுவாக அழகின் இரு உருவமாக விளங்கிய அந்தச் சித்திரம் ரங்கமன்னாரின் கைவண்ணமும் கலந்து பரிமளித்தது.

மகாராணி, ''இளவரசருக்கும் என் மகளுக்கும் அழகுப் பொருத்தம் மிக நன்றாகவே இருக்கிறது. அதிர்ஷ்டமும் பொருந்த வேண்டும்'' என்றார்.

பிள்ளையை ஈன்ற நாளைக் காட்டிலும் இந்நாளில் அன்னபூர்ணாதேவி அதிகமாக அகமகிழ்ந்தார். ஆயினும், அதே நேரத்தில், ''ஆரம்பத்திலேயே சில உண்மைகளைத் தங்களிடம் சொல்லிவிட ஆசைப்படுகிறேன். என் மகன் பிரதாபசிம்மன் தஞ்சை அரியணைக்கு வர இயலாதவன். எங்கள் அரச வம்சத்தின் முறைப்படி முடி சூடும் உரிமை மூத்த பரம்பரைக்கே உண்டு'' என்றார் அன்னபூர்ணாதேவி.

இதைக் கேட்ட மகாராணி மிக்க ஆறுதல் அடைந்தார். ஒரு பெருமூச்சு விட்டார். அதில் அவருடைய அழகு பெருக்கெடுத்து ஓடியது.

''அதனால் என்ன? தஞ்சைப் பட்டம் இல்லாவிட்டால் திருச்சிப் பட்டம் இருக்கிறது. என் கணவர் இறக்கும் போது எனக்கே இந்நாட்டை உரித்தாக்கிவிட்டார். எனக்குப் பிறகு நான் யாருக்கும் இந்நாட்டை அளிக்கலாம்.''

''தங்கள் பட்டத்திலும் ஏதோ பங்காளித் தகராறு இருப்பதாக....''

''பட்டம் பதவி என்றால் குட்டிச் சுவர்கூட ஆசைப்படும் அல்லவா? பங்காரு திருமலை நாயக்கர் இப்பொழுது ஆற்காடு நவாபை உதவிக்கு அழைக்கப் போயிருக்கிறார். நவாபின் படை வந்தால் நமது இரு நாட்டுக் கலைகளும் நாசமாகிவிடும். அதற்குள் உங்கள் திருமகனை எனக்கு மருமகனாக்கிக்கொண்டு விட்டால் கவலை இல்லை.''

இந்தத் திருமணத்துக்கு இன்னும் தன் மகன் ஒப்புதல் தரவில்லையே என்ற கவலை ஒருபுறத்திலும், 'அன்னபூர்ணா! இந்தக் கல்யாணத்தை எப்படியேனும் நடத்தி நாட்டைக் காப்பது உன் பொறுப்பு' என்று ஊருக்குப் போகும் போது தன் கணவர் இட்ட கட்டளை ஒருபுறமும் நின்று அன்னபூர்ணாதேவியை ஆட்டி வைத்தது.

கதவை யாரோ படபடவென்று தட்டி, ''அம்மகாரு'' என்று அழைக்கும் குரல் கேட்டது. அந்தக் குரலில் ஒலித்த ஆத்திரத்தைக் கண்டு அரசி மீனாட்சி விரைந்து தானே வாசலை நோக்கிச் சென்றார். கதவு திறந்தது. அரசி வெளியே சென்றதும் கதவு மறுபடியும் சாத்தப்பட்டது.

சற்று நேரத்துக்குப் பின் திரும்பி வந்த மகாராணி மீனாட்சி, ''அன்னபூரணாதேவி! இந்தத் திருமணம் நடைபெறவே முடியாது. தாசிலோலனுக்கு என் மகளைக் கொடுக்க மாட்டேன்.

உங்கள் குமாரன் ஒரு வேசியின் வலையில் விழுந்தவன். அவன் ஒரு வேஷக்காரன். அவளைக் கொண்டே என் மகளை அவமானம் செய்தவன். ஏதோ உண்மையைச் சொல்வதாக ஆரம்பித்தீர்கள். முழு உண்மையையும் சொல்லவில்லையே'' என்று கோபத்துடன் கூறினார். தம் கையாலேயே கதவைப் படாரென்று சாத்திவிட்டுத் தம் அரண்மனையை நோக்கிப் போய் விட்டார் மகாராணி மீனாட்சி. அவரோடு கூடவே ஆடும் மயிலும் நடந்தாள். அன்னபூர்ணா தேவி பிரமித்து நின்றார்.

இளவரசரைப் பிரிந்த குயிலி வெகு நேரம் அவர் வருகைக்காகக் காத்திருந்தாள். அவள் கண்கள் வாசல் கதவையே பார்த்தன. இரவும் ஆயிற்று. இளவரசர் வரவில்லை. எழுந்து வெளியே செல்லவும் தன் இனத்தாராகிய சின்னத்தம்பி, முதலியோர்களைப் பார்க்கவும்கூட அவளை வெட்கம் தடுத்தது. இமையை மூடாமலேயே இன்பக் கனவுகள் கண்டாள். அழகிய மஞ்சத்தின் மீது அவள் உடல் கிடந்தாலும் இளவரசரின் தோளில் தலை வைத்து மயங்கிக் கிடந்த அந்த ஒரு கண நேரத்தை அவள் சொர்க்க போகமாகவே கருதினாள்.

'நான் எங்கே? அவர் எங்கே? அவரா சிங்கன்? அவரையா நான் 'போ' 'வா' என்று கூப்பிட்டேன், மரியாதை இல்லாமல் பேசினேன்? அடியே, குயிலி! நீ கொடுத்து வைத்தவள். தஞ்சாவூர் அரண்மனையிலே நீ ராணியாக வேண்டாம். அவர் காலைப் பிடிக்கும் தாசியாகவாவது உனக்கு யோக்கியதை இருக்கிறதா?' அவள் கண்களில் கண்ணீர் பெருகியது. 'அவர் மீது இப்படி ஆசைப்படுகிறாயே? நீ என்ன மங்கள விலாசத்தில் அடைபடவா பிறந்தாய்? சே! என் ராஜா அப்படிப்பட்டவர் அல்ல. அவர் ஆயிரம் பேரை மணக்க மாட்டார். எனக்காகவே பிறந்தவர். திருச்சி அரச குமாரியைக் கூடத் திரும்பிப் பார்க்காதவர். ஏதோ காரியமாகத்தான் போயிருக்கிறார். அரசன், கணிகையை உதறித் தள்ளலாம். அரச காரியத்தை உதறித் தள்ள முடியுமா? அம்மா! இவர் என் சிங்கனாகவே இருந்திருக்கக் கூடாதா? ஏழைச் சிங்கன் எப்பொழுதும் என்னுடன் இருப்பானே! அடி முட்டாளே! இது என்ன பைத்தியக்கார எண்ணம்!

'எங்கே போனார்? ஏன் வரவில்லை? அவர் சென்ற அவசரத்தை நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கிறதே. 'இளவரசே!' என்று யாரோ கூப்பிட்டார்களே, என்ன சொல்லி விருப்பார்கள்? 'நீங்கள் எடுத்த சபதம் தீர்ந்து விட்டது. வெற்றி அடைந்து விட்டீர்கள். இனி இந்த ஏழைக் குயிலியிடம் உமக்கு என்ன வேலை?' என்று கேட்டிருப்பார்களோ? இருக்காது, இருக்காது. இதுவரை நான் யாருக்கும் கெடுதல் செய்ததில்லை. எனக்கும் யாரும் கெடுதல் செய்ய மாட்டார்கள்.

'இதில் கெடுதல் என்ன? உன்னை நீ உணர்ந்து கொள். நீ தாசி வீட்டிலே பிறந்தவள். உனக்குத் தாலி கட்டி விடுவார்களா? அவர் உன்னைக் கட்டித் தழுவலாம். கழுத்தில் தாலி கட்ட முடியுமா? அங்கு பிறந்தது என் குற்றமா? நான் ஒன்றும் கணிகை அல்ல. அவர் வரட்டும். அவரைச் சிங்கனாகவே மாற்றி அந்தச் சிங்கனும் சிங்கியும் எங்காவது போய் விடுகிறோம்.'



''ஏனுங்க நர்மாவரம், ஆரணி, மதுரை, காஞ்சிபுரம் - இவைகளை நினைச்சா உங்களுக்கு உடனே என்ன ஞாபகத்துக்கு வருது?''
''திருப்பதி, திருத்தணி!''

அதிகாலை அரசரது படகில் அவர் எதிரில் நின்றார் பிரதாப சிம்மர். அவர் சொல்லியதை யெல்லாம் கேட்ட பிறகு ''மைந்தா, மனைவியின் ஜாதகத்தைச் சோதிடரிடம் காட்டுபவன் ஒரு மதியற்றவன். அதைப் போலவே தன் மனைவியாக வரப் போகிறவளை முதலில் சோதனை செய்து பார்ப்பவனும் மதியற்றவன். இளவரசியிடம் நீ கண்ட அத்தனை குறைகளையும் நானும் கண்டேன். ஆனால் அரசன் வேறு, மனிதன் வேறு. உனக்காக நீ அவளை மணக்கவில்லை. நாட்டின் நன்மைக்காக நீ அவளை மணக்கிறாய். இது உனக்குப் புரியவில்லையே!'' என்றார் அரசர்.

''அல்ல, தந்தையே. அயல் நாட்டு நாகரிகத்தில் மூழ்கிய அவளை நான் மணப்பது, அயல் நாட்டு ஆட்சியையே தஞ்சைக்கு அழைப்பது போலாகும். ஓர் ஏழை எப்படி இருந்தாலும் நாடு அவர்களைப் பின்பற்றாது. ஓர் அரசனோ, அரசியோ, ஒரு துறவியோ, தலைவனோ, பண்பில் கெட்டு விட்டால் அவனைப் பார்த்து மக்களும் கெட்டுவிடு

இருமலா?

க்ளைகோடின்

சாப்பிட்டதும் போய்விட்டதே!



சற்று முன்புதான் அவள் இருமலால் தவித்துக் கொண்டிருந்தாள் என்றால் நம்புவீர்களா? பிறகு க்ளைகோடின் சாப்பிட்டாள். க்ளைகோடின் அவள் இருமலை வெகுசீக்கிரம் பூரணமாக நிறுத்திவிட்டது

பூரண இருமல் கட்டுப்பாட்டுக்கு க்ளைகோடினுக்கு இணை எதுவுமில்லை!

பாதிக்கப்பட்ட எல்லா பகுதிகளிலிருந்தும் இருமலை விரட்டியடிக்க மருத்துவரீதியாக அங்கீகரிக்கப்பட்ட க்ளைகோடின் புதிய ஃபார்முலா செயல்படுவது எப்படி என்று பாருங்கள்:

தொண்டையில்—
சளி அடைப்பை அகற்றி, எரிச்சலைச் சமனப்படுத்துகிறது.

நுரையீரல்களில்—
அடைத்துக் கொண்டிருக்கும் கோழையைத் தளர்த்தி, சளியை வெளியேற்றுகிறது.



மூளையில்—
இருமல் கேந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது.

மார்பில்—
இறுகிய தசைநார்களுக்கு இதமளித்து சுலபமாக சுவாசிக்க உதவுகிறது.



க்ளைகோடின்

டெர்ப் வசாகா

இருமல்களுக்கு, மிக அதிகமாக விற்பனையாகும் வீட்டு நிவாரணி

Alembic

அலெம்பிக் கெமிகல் ஒர்க்ஸ் கோ. லிட்., பரோடா-3

everest/352e/AWC tm



நொடிப் பொழுதில் பளிச்சிடும் தூய்மைக்கே...
SUPER FOAM
Vim
CLEANS
நுரைவளமோங்கும் விம்
கடுமை வாய்ந்த, மலிவான தேய்ப்புச் சாதனங்களை நம்பியிருக்க முடியுமா? கண்டிப்புடன் பெற்றிடுவீர் நுரைவளமோங்கும் விம். பேசின், தொட்டி, பீங்கான் பாண்டங்கள், பாத்திரங்கள், எதுவாயினும் சரி—விம் பட்ட இடமெல்லாம் ஒளிப் பிழம்பே. துப்புரவாக்குவதில் அதிக ஆற்றல் வாய்ந்த விம், விடாப்பிடியான பிசுக்குக்கும் விடைகொடுக்கும். துப்புரவான இல்லங்களுக்கு அடையாளம் ஒப்பிலாத விம் ஒளி.
ஓங்கிய ஒளிபெறவே—வாங்குவீர் விம்.
பாங்கான இல்லங்களிலே—விம், பளிச்சிடும் இல்லங்களிலே விம்
ஹிந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்-V.15-140 TM

வார்கள். இந்த ஆடும் மயில் தஞ்சைக்கு வந்தால் நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததைப் போலாகிவிடும். அந்தப்புரத்தில் புகுந்த அயல் நாட்டு மோகம் அடுக்களைகளிலும் புகுந்துவிடும். மங்கையர் மாறினால் மாந்தரே மாறிவிடுவார்கள். நீங்கள் நவாபின் படையெடுப்பால் கலையும், பக்தியும் கற்கோயிலும், சிலையும், வழிபாடும் கெட்டுவிடும் என்று பயப்படுகிறீர்கள். ஆனால் முஸ்லிம் நாகரிகமாக இருந்தாலும் ஆங்கில நாகரிகமாக இருந்தாலும் இரண்டும் படையெடுப்புத்தான்.''

''பிரதாபா, உன் வாதம் அர்த்தமுடையதுதான். ஆனால் இத்தனையும் நீ உன் குயிலிக்காகப் பேசுகிறாயா? அப்படி இருந்தால் நீ அவளை உன் தாசியாக வைத்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபம் இல்லை.''

''தந்தையே, அவள் தாசி குலத்தில் பிறந்தாலும் குலவதியாக விரும்புகிறாள். அவளைத் தாசியாக்க நான் விரும்பவில்லை. அவளைக் காப்பாற்றுவது என்கடமை. நான் அவளை என்னில் ஒரு பாதியாக ஏற்றுக் கொண்டுவிட்டேன்.''

இதைக் கேட்டு அரசர் யோசித்தார்.

''மகனே, தஞ்சை அரசின் தலையெழுத்தை நீ மாற்றுவாய் என்று நம்பினேன். மீனாட்சியின் நாட்டை ஆர்க்காடு நவாபு ஊடுருவினால் திருச்சிக்கு வந்த தீமை தஞ்சைக்கு வர நேரம் செல்லாது. அதனாலேயே திருச்சியைக் காக்க நான் இத்தனை அக்கறை எடுத்துக் கொண்டேன். ஆனால் நீயோ பிடிவாதமாக இருக்கிறாய். உன் கல்யாணம் உன்னைப் பொறுத்தது. அதில் நான் தலையிட விரும்பவில்லை. உன் இஷ்டம் போல் செய்'' என்று கூறிவிட்டார் மன்னர்.

தந்தையின் ஒப்புதலைக் கேட்டு இளவரசர் ஆனந்தமடைந்தார். இவ்வளவு எளிதில் தகப்பனார் இதற்குச் சம்மதிப்பார் என்று அவர் எண்ணவே இல்லை. ஆனால் அவருடைய ஆனந்தத்தில் ஏற்பட்ட ஒரு திருஷ்டி பரிகாரம் போல் ஒரு நிகழ்ச்சி அதே நேரத்தில் திருச்சியில் நடந்து கொண்டிருந்தது.

பொழுது புலர்ந்தது.

''என்ன குயிலி! ராத்திரி யெல்லாம் தூங்கவே யில்லையா? கண்ணெல்லாம் சிவப்பாக இருக்கிறதே!'' என்றான் சின்னத்தம்பி.

''இனிமே தூக்கம் ஏதடா? அதைத்தான் இளவரசர் கொள்ளையடிச்சுக்கிட்டுப் போயிட்டாரே!'' என்றான் முந்திரிக் கொட்டை.

''ஏலே! எடம் பாத்துப் பேசுங்கடா. இனி அதைக் குயிலின்னு கூப்பிடக் கூடாது. முன்னாலே போய் இப்படி ஒரு கும்பிடு கும்பிட்டுவிட்டு 'மகாராணி! இரவில் நித்திரை ஷெய்யவில்லையா' என்று மருவாதையாப்பேசணும்'' என்று பாவம் பிடித்தான் சட்டாம்பிள்ளை.

''அம்மா! உங்களுக்கு வெந்நீர் போடவா? நேற்று ஆடியதில் கால் எல்லாம் வலிக்குமே'' என்று மிக மரியாதையுடன் சொல்லிக் கொண்டே பட்டியல் கல்மேல் உட்கார்ந்திருந்த குயிலியின் கால் கட்டை விரலைச் சொடுக்கு எடுத்தாள் சின்னம்மா.

இந்தத் திடீர் மாறுதலைக் கண்ட குயிலி, மனம் வெதும்பினாள். சாதாரண காலமாக இருந்தால் முந்திரிக் கொட்டை அவள் ஆடிய குறத்தி ஆட்டம் முழுவதையும் அவள் முன்னே ஆடிக் காட்டிவிடுவான். சின்னத்தம்பி, ''அந்த ததிங்கிணதோமிலே நீ தாவி ஆடுறபோது என் கையும் உன்னோடே தாவிட்டுது, குயிலி. தாளம் தவறிடுமோன்னு பயந்துட்டேன்'' என்பான். இரவெல்லாம் அங்கு கூத்தும் கும்மாளமுமாக இருக்கும். ஆனால் இன்றோ எல்லோரும் பத்தடி தள்ளியே இருப்பதையும் பக்கம் பார்த்துப் பேசுவதையும் குயிலி கண்டாள். அவள் கண்கள் கலங்கின. திடீரென்று எழுந்தாள். முந்திரிக் கொட்டையின் காதைப் பிடித்து செல்லமாக ஒரு திருகு திருகினாள். அட கடவுளே! இந்த நிகழ்ச்சிக்கு எப்போதும் சிரிக்கும் அந்தக் கூட்டம் இப்போது திகைத்தது. ''மன்னிச்சுக்குங்க. தெரியாமல் பேசிவிட்டேன்'' எனப் பயபக்தியோடு பணிந்தான் முந்திரிக் கொட்டை. இதைப் பார்த்துக் குயிலி கதறினாள். அவர்கள் தன்னைத் தள்ளி வைப்பதை அந்தப் பெண்ணால் தாங்க முடியவில்லை. ''போங்கடா, எல்லோரும் போங்க. எல்லோரும் என்னை ஒதுக்கி ஒதுக்கிப் பேசுறீங்க. என்கிட்ட உங்களுக்குப் பிரியமே இல்லை'' என்று சொல்லும்போதே அவள் நெஞ்சு குமுறியது. குயிலி அழுதுவிட்டாள். ஆம். கேவிக் கேவி அழுதாள்.

''அம்மா அழாதே. அழாதே அம்மா. இளவரசர் வந்து ஏன் அழ விட்டீங்கன்னு கேட்டா நாங்க என்ன சொல்றது? ஆத்தாளே அழாதே....'' என்று சின்னம்மாள் குயிலியின் முகவாய்க் கட்டையைத் தாங்கினாள். இளவரசர் என்ற வார்த்தையைக் கேட்டதும், ''அவர் எங்கே சின்னம்மா?'' என்று கேட்டு விசும்பி அழுதாள் குயிலி.

(தொடரும்)

மணங்கள்

ராஜம் கிருஷ்ணன்

பூமழை பெய்து குளிர்ந்த ஈர மணம் கண் விழிக்கு முன் காப்பிக்கொட்டை முறுகும் மணம் காலை நேரத்துச் சுருசுருப்புடன் நாசியில் புகுகிறது. பீபரிக் கொட்டை பச்சை மாறித் தைலம் கசிய எழும் மணம். இந்த மணம் ஏகபோகமாகச் சுவாசங்களை வசமாக்கிக் கொள்வதா? பால் பொங்கி நெருப்பில் வழிந்து பொசுங்கும் நாற்றம் மூக்கைத் துளைக்கிறது. இந்த மணத்தை மட்டும் அமுக்கி வைக்க இயலாது. எட்டு வீடுகளுக்கு அப்பாலும் புகுந்து புறப்படும்.

''ராது....? ......ராது....!''

மூன்று அடுப்புக்களை எரிய வைத்துக் கொண்டு இடையே பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருப்பாளாக இருக்கும். எரி வாயு அவள் வந்து சமையலறையில் புகுந்தாலே தீர்ந்து போய்விடும். இரண்டு காற்றழுத்த அடுப்புக்கள் உச்சத்தில் இரையும்போது, வீட்டின் ஒரு மூலை அறையிலிருந்து உடல் நலிவுற்ற குடும்பத் தலைவி கூப்பிடும் குரல் அவள் செவிகளில் எப்படி விழும்?

அவளிடம் வணக்கம், பணிவு என்ற அம்சங்கள் பொருந்தி இருக்கவில்லை. நடையின் பரபரப்பில் நிலம் அதிரும். மல்லிகைக் கொடியில் காயரும்புகள் ஒடிந்து விழும்; பாத்திரங்கள் ஒலி வகைகளை எழுப்பிக் கொண்டிருக்கும். குழாயில் நீர் வழிந்து ஓடும்.

ஆனால் குடும்பத் தலைவி உடல் நலிவுற்ற காலை, அந்தக் குடும்பத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சமையலறையில் இயங்க, அவளைத் தவிர வேறு எவராலும் முடியாது.

காலை எட்டரை மணிக்குள் மூன்று பெண் மக்களுக்கு எண்ணெய்க் குளி முடித்து வைத்து விட்டை இரண்டு பண்ணும் மூன்று ஆண் குழந்தைகளைச் சமாளித்து, வீட்டுத் தலைவருக்குச் சுவை குறையாமல் காலைப் பலகாரம் செய்து கொடுத்து, பள்ளிக்கு, கல்லூரிக்குச் சாப்பாடு செய்து முடித்துப் பரிமாற அவளால் முடியும். எட்டு மணிக்கு நீர் வந்து, எட்டரைக்குள் நின்று போகும் தெருக் குழாயிலிருந்து நான்கு குடம் நல்ல நீர் தூக்கி வந்து வைப்பாள்; வேலைக்காரி துலக்கிய பாத்திரங்களைக் கழுவி எடுப்பாள்.

பால் பொங்கித் தீய்ந்து மணம் வருவது அதிசயமில்லை. ஆனால்... அந்த மணம் அமுங்கு முன் கம்மென்று நாசியை வந்து நிறைக்கிறது, மல்லிகை வத்தியின் நறுமணம்.

அப்பப்பா....! கம் கம்மென்று சுழன்று மூக்கைத் தாங்காமல் கிளர்ச்சியூட்டும் மணம்.

இந்த வத்திக் கட்டு அவன் கண்களில் எப்படிப்பட்டது? அதை எதற்கு இப்போது கொளுத்தி வைத்திருக்கிறான்?

பளிச்சுப் பளிச்சென்ப் பிறரைக் கவரவே ஆடை அணிந்து குலுக்கி மினுக்கும் நாண மற்ற தன்மைக்கு ஒப்பான மணம். பத்து வத்திகளின் விலை மூன்று ரூபாய்க்கு மேலாகிறது. ராது சுவாமி அலமாரியில் இதை எதற்குக் கொளுத்தி வைத்திருக்கிறான்? வத்திக் கட்டை அவள் அந்த அறையில் அல்லவா வைத்திருந்தாள்? ராது அங்கே போனானா?

சுவாமி அலமாரி இருக்கிறது; ஆனால் காலையில் விளக்கேற்றி ஊதுவத்தி கொளுத்தி வைத்து மலர் தூவி வழிபாடு செய்ய அந்தக் குடும்பத் தலைவிக்குப் பொருந்துவதில்லை. பொழுதுக்கும் பிடுங்கும் குழந்தைகளின் தொல்லை; ஆழ்ந்து தங்கிய வேறு கவலைகள்; உடல் நலிவு.

ஆனால் மாலை நேரங்களில் வீச்சாகக் கிளர்ந்து சுவாசங்களை நிறைக்கும் மல்லிகை வத்திகளைக்



கொளுத்திப் புகையை வைப்பாள். திரும்பிய இடங்களி லெல்லாம் அந்த மணம் கனத்துப் பரவும். மாலை என்றால் விளக்கு வைக்கும் நேரம் என்று கொண்டு விடலாகாது. ஒவ்வொரு நாள் ஐந்து மணிக்கே மணம் பரவும்; ஒவ்வொரு நாளில் எட்டு ஒன்பது மணியாகும். குடும்பத் தலைவர் அங்கு தங்காத மாலை நேரங்களில் அந்த வத்தி நினை வுக்கே வந்ததில்லை.

இந்த மணம் மூச்சு முட்டக் கனத்துப் பரவுகிறது. பூஜை யறைக்கு இந்த வத்தியை வைக்கலாமா? ஒருகால் மிகத் தொலைவில் இதைக் கொளுத்தி வைத்தால், இரவின் அமைதி யில் தொலைவில் கேட்கும் நாத கர இசைபோல் நுகர ரம்மிய மாக இருக்கலாம். ஆனால் அந்த மணத்தை ஆழ்ந்து



நுகர்ந்து அனுபவிப்பதற்காகவா அந்த வத்திகளை வைத்திருக்கிறாள்?

பணிவற்ற படாடோபமான மணம், குறையுள்ள உண்மைகளை மறைக்கும் என்ற நோக்கத்தில் இருபது ஆண்டுகளாக அவள் இந்த மணத்தைப் பழக்கிக் கொண்டிருக் கிறாள். திருமணமான புதிதில், பங்களூரில் குடும்பம் தொடங்கிய புதிய நாட்களில், கணவனுக்குப் பழக்கமான பல வாசனைகளை ஏற்க இயலாதவளாய்ப் போராடிய நாட்களில் இப்படி ஒரு மாற்றத் தைக் கண்டு பிடித்தாள்.

தலையில் முட்டாக்கும், செவி நிறைய வளையங்களுமாக முதிய பெண்மணி ஒருத்தி மூட்டை கட் டிக் கொண்டு வத்தி வியாபாரம் செய்ய வருவாள். அவளிடம்தான்

முதலில் இந்த வத்திகளை வாங்கிக்கொளுத்தி வைத்தாள்.

இந்த மணம் அருகிலே ஆழ்ந்து ஆழ்ந்து வளையமிட, ராதுவுக்கு எப்படி வேலை ஓடுகிறது ?

ராது, தாயும் தந்தையுமற்ற ஏழைப் பெண். எங்கோ எட்டிய உறவில் ஒட்டி, அவர்களுடைய அதிகாரங்களில் பணிந்து குறுகிய பதமடைந்த குழந்தை. அவளைக் கண் முன் ஒட்டாமல் வைத்துக் கொண்டே அந்த உறவினர் ஆசைகளுக்கேற்ப அநுபவிப்பார்களாக இருக்கும். அந்த உறவுக் குடும்பத் தலைவனின் அலுவலக மேலதிகாரியின் குடும்பத்திற்கு உதவி செய்ய அவள் வந்திருக்கிறாள். நட்பும், சுதந்திரமும் உள்ள இடம் என்று புரிந்தபின் அவளுடைய ஆசைகள் சிறகு விரித்துக் கொண்டு அந்த இல்லத்தை ஆண்டு அநுபவிக்கக் கிளம்பி விடுகின்றனவோ ?

எல்லாப் பாத்திரங்களையும் எடுத்துப் புழங்கித் தேய்க்கக் குவிக்கிறாள். வானொலிப் பெட்டி உச்ச நிலையில் அலறுகிறது: விசிறிகள் சுழல்கின்றன ; விளக்குகள் அணைவதில்லை. காணாது கண்ட வறுமையில் அள்ளிப் போட்டுக் கொள்ளும் பரபரப்பு.

மல்லிகை வத்தியின் மணம் இன்னமும் தேயவில்லை. ஆனால் வெங்காயம் கூட்டிய நெய்த் தாளிதம் 'உப்புமா' என்று கட்டியம் கூறி நாவில் நீரூறச் செய்யும் மணம் தேடிக் கொண்டு அந்த அறையில் புகுகிறது. பெருங்காயமும் கருவேப்பிலையும் மணக்கக் குழம்பு காயும் வாசனையும் இணை சேருகிறது.

ஊடே, ரோஜாவும் மருக்கொழுந்தும் இணைந்த கதம்பத்தில், புகையிலைக் காம்பு புகுந்தாற்போல் சிகரெட் புகையும் மணமும் வருகிறது. குடும்பத் தலைவர் துயில் நீங்கி எழுந்து காப்பியருந்தியபின் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டு செய்தித் தாள் படிக்கிறார்.

இனி அடுத்துச் சந்தன சோப்பின் நறுமணம்; உயர் ரக வாசனை என்று பெயர் பெற்ற அழகுச் சாதனங்களின் பல்வேறு வகை நறுமணங்கள் எல்லாம் குப்பி கவிழ்ந்தாற்போல் தொடர்ந்து பரவுகின்றன. இந்தப் படாடோபமான மணங்களெல்லாம் குடும்பத் தலைவரிடம் ஏறி, நகரின் அடுக்கு மாடிக் கட்டடத்தின் ஒரு குளிர் சாதன அறையில் கொலுவிருக்கப் பவனி புறப்படும்.

இந்த மணங்கள் அகன்ற கையோடு இன்னும் பல மணங்கள் புறப்படுகின்றன.

ராது தேங்காயெண்ணெயில் தாளிதம் செய்கிறாள்.

அந்தக் குடும்பத் தலைவிக்குத் தேங்காயெண்ணெய்த் தாளிதத்தில் மணமும் சுவையும் கூடுதலாகும் என்ற உண்மை தெரியாமலில்லை. ஆனால் அவள் குடும்பத் தலைவியல்லவா ? அடக்கமற்ற மணங்களை யெல்லாம் நுகர்ந்து பழகிய பலவீனமுடையதொரு ஆணின் குடும்பத் தலைவி.

கட்டுப்பாட்டைப் பற்றிய பிரக்ஞையில்லாத நிலையில் பெருகிய குடும்பம். நைலக்ஸ் ஹகோபா, குஞ்சலம், போலியணிகள், இரண்டு ரூபாய் மதிப்புக்குக் குறையாமல் ஒரு நேரத்துக்குக் கூந்தல் சிங்காரத்துக்குப் பூ ஆகியவைகளை வாங்கும் தேவைகள் மாசா மாசம் நெருக்கித் தள்ளும். எனவே, தேங்காயெண்ணெயின் சுவையும் மணமும் நினைவில் வருமுன் அதன் விலையைப் பற்றிய பிரக்ஞை தோன்றி விடுமே ?

ராதுவுக்கு அவற்றை யெல்லாம் பற்றிக் கவலை ஏது? ஏதோ அழைப்பு விடுத்தால் உதவிக்கு இரண்டு நாட்கள் வந்து தங்குகிறாள். நாளையே அந்தக் குடும்பத் தலைவிக்கு உடல் நிலை சரியாகி விட்டால் ராதுவுக்கு வயிறு நிறையச் சாப்பாடு போட்டு, இரண்டொரு பழைய துணிகளைக் கொடுத்து, மின் வண்டிச் சத்தத்துக்கு மேல் ஒன்றிரண்டு கொடுத்து அனுப்பி விடுவாள். அந்த நிரந்தரச் சிறை வாழ்வுக்கு இது ஒரு ஜன்னல். ஜன்னலில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்த போது, எட்டிய தொலைவு வரையிலும் பார்வையைச் செலுத்துவது இயல்புதானே?

இன்னொரு வகை முகப் பொடியின் மணம் காற்றிலே கலவையிடுகிறது. இந்த மணத்துக்கு, மனத்தை ஆழமாகச் சென்று கிள்ளும் தன்மையில்லை. கொட்டிக் கொட்டிக் குழந்தைகள் முகத்தைத் திருத்திக் கொள்ள விரயமாக்கும் மலிவு விலை முகப் பொடி. குழந்தையின் பால் மணக்கும் வாயைப் போன்றதோர் இலேசான மணம்.

எல்லோரும் உணவு கொள்ளப் போய் விட்டார்கள் போலிருக்கிறது. தட்டுகள் ஓசைப்படுகின்றன. 'எனக்கு ரசம், எனக்குப் பருப்பு' என்ற கீழ்க் கடைகளின் கூச்சல்கள்.

பொரித்த கூட்டு மணக்கிறது; தக்காளி ரசம் மணக்கிறது. யாருக்கோ அப்பளம் வாட்டுகிறாள் போலிருக்கிறது; அதுவும் மணக்கிறது. இந்த ராதுவுக்குத்தான் என்ன கைமணம் ! தெருவில் செல்பவர்களைக்கூடச் 'சாப்பிட வாருங்கள்' என்று அழைக்கும் மணம்.

குபீரென்று பாம்பு வாணம் சீறினாற்போல் லாவெண்டர் சென்டின் மணம் நாசியில் ஏறுகிறது.

துணுக்கென்றொரு குலுக்கல்.

மணி ஒன்பதாகிறதே ? அப்போதே அலுவலகம் போய்விடவில்லையோ, அந்த வீட்டுத் தலைவர் ? தலைவியோ உடல் நலிவால் படுத்து இருக்கிறாள்.

யார்...? யார்....? அந்த அலமாரியைத் திறந்து....


''அம்மா ? இந்த ஜக்குவைப் பாரு ? அப்பாவோடே சென்டை எடுத்துப் பூசிக்கிறாள் !''

''நான் எங்கேடா எடுத்தேன் ? தடியா? அம்மா, இவன் அலமாரியைத் திறந்து எடுத்துட்டு என்னைச் சொல்றாம்மா !''

''முழுப் பொய்யம்மா ! இவள்தான் எடுத்துப் புருவமெல்லாம் தடவிக்கிட்டு மினுக்கிறா. நான் அவசரமா ரூமுக்குள்ளே வரப்ப, அப்பா அலமாரி திறந்திருந்ததைப் பார்த்திட்டேன். பழியை எம் மேலே போடறா !''

''தடியா, உன்னைக் கொன்னுடுவேன்'' என்று கல்லூரிக் குமரியான ஜக்கு, இரண்டுங்கெட்டான் தம்பியை அடிக்க ஓடுகிறாள்.

டாடாவிஷன்



டாடாவின் பெருநோக்கு. தீர்க்க தரிசனமுள்ள கருத்துக்கள் இருந்து என்ன? அவை மக்களிடையே பரவாவிட்டால் என்ன பயன்?— அவை மக்களைத் [illegible] என்று செயல்படுத்த வேண்டாமா?

ஜாம்ஷெட்பூரில் நல்ல கருத்துக்கள் செயலாகாமல் வீணாவதில்லை. ஏற்ற உதவிகளும் சூழ்நிலையும் அங்கே உள்ளன. இத்தகைய ஒன்றே குடும்ப நலத்திட்டம்.

இந்தத் திட்டம் ஜாம்ஷெட்பூரில் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் 'விவாத-வட்டங்களில்' கலந்து கொள்வோர் தொகை பத்து மடங்காக உயர்ந்து விட்டது. விவாதத்தின் விளைவாக எழுந்த தெளிவான உறுதி; 1965-இல் ஜாம்ஷெட்பூரில் பிறப்புவிகிதம் குறையத் தொடங்கி விட்டது.

டாடா எஃகு ஸ்தாபனத்தின் குடும்ப நலத் திட்டத்தினால் ஜாம்ஷெட்பூர் மக்களுக்கு என்ன பயன்?

இரண்டு நவீன நகரத்துக் குடும்பத் திட்ட நிலையங்களும் ஆறு பிரசவ, குழந்தை பராமரிப்பு வி[illegible]களும் இனாமாகக் குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களை வழங்குகின்றன; ஆலோசனை கூறுகின்றன.

இரண்டு நகர நிலையங்களிலும் டாடா மெயின் ஆஸ்பத்திரியிலும் 'வாஸக்டமி' ஆபரேஷன் செய்யப்படுகிறது. அதைச் செய்து கொள்ளும் கம்பெனி ஊழியருக்கு ஆபரேஷன் செலவு இல்லை. அதோடு ரொக்கப் பரிசாக ரூ. 200/- தரப்படுகிறது. போனவருஷம் ஆகஸ்டு டிசம்பர் காலத்தில் 1650 பேர் ஆபரேஷன் செய்து கொண்டதில் வியப்பில்லை. கம்பெனி ஊழியரின் மனைவியர் 'டியூபெக்டமி' ஆபரேஷன் செய்து கொண்டாலோ, 'லூப்' பொருத்திக் கொண்டாலோ ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கம் வழங்கப்படுகிறது.

டாடா ஸ்டீல்

TH 4426

இந்தக் குறுகிய மணம் உன்னே குழம்பிச் சுழன்று தலே வேதனையைக் கூட்டு கிறது.

இந்த மணங்களை எப்படி மாற்றலாம்? குற்றமற்ற ஜடமான பெருங்காயச் செப்பே மணத்தை ஒளிக்க இயலாதபோது, அழுக்குக் கும் நாற்றத்துக்கும் உறை விடமானதோர் உடலே வைத்துக் கொண்டு ஊறிப் போன மணங்களை எப்படி மாற்றலாம்? எப்படி ஒளிக்கலாம்?

''ஒருத்தராலும் தண்ணீருற்றுவதில்லே'' என்று ராது தண்ணீரைப் பிடித் துப் பிடித்துக் கக்கூசில் கொட்டுகிறுள். பின்னல் மணம் காச்சல் கண்ட உட லில் ஏறும் அனலேப்போல் எஞ்சி நிற்கும் மணங்களே வெற்றி கொள்ள ஏறு கிறது.



''நகரத்திலுள்ள எல்லா ஆஸ் பத்திரிகளிலும் நான்போய்ப்படுத் திருந்து விட்டு வந்திருக்கிறேன்.''

''என்ன 'டுப்' அடிக்கிறயே பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போயி ருக்க முடியாதே!''

''அங்கேதானே நான் பிறந் தேன்!''

பட்டுப்போல சிவப்பு ரொம்ப அழகாயில்லே?..

''ஆமாம், காலமே ஊது வத்தி கொளுத்தி வச்சே போலிருக்கே?''

''பூஜை அலமாரியிலே கோலம் போட்டு விளக் கேற்றினேன். ஊதுவத்தி இருக்கிறதான்னு ராஜு' விடம் கேட்டேன். அவன் கொண்டு கொடுத்தான்..''

''சரி, இனி என்னேக் கேட்காமல் நீயாக அல மாரியைக் குடையாதே. குழந்தைகளிடமும் சொல்ல வேண்டாம்.''

''சரிக்கா....!''

வறுமையில் மலரும் மணம், இந்தப் பணிவு. எட்ட இருந்து எப்படியோ எடை போட்டானே? இயல் பின் மணம் நெருங்கினல் தானே தெரிகிறது? ரசத் தைக் குடித்துவிட்டுப் படுத் துக் கொள்கிறுள்.

மணி பதினென்று.

வீட்டிலே முழு அமைதி ஆட்சி செய்யும் நேரம்.

ராது போராகக் குவிந்த துணிகளுக்குச் சோப்புப் போடுகிறுள் போலிருக்கிறது. வெள்ளையாகக் காயும் நிலேயற்ற வெய்யில். பார்சோப்பு நுரைத்துக் கக்கும் மணம் வருகிறது. வெறும் பேதை மணம். நெடி ஏற்றும் வீச்சில்லாத மணம். துணி துவைக் கும் ஓசை கேட்கும் நேரத்தில், மிளகு ரசம் காயும் வாசனே வருகிறது.

காய்ச்சலில் மாவு படிந்த நாவுக்கும் அலே கொடுக்கும் மணம். அந்த மணம் நெருங்கி, ஆவி கமழ அறைக்குள் வருகிறது.

''அக்கா, மிளகு ரசத்தில் நாலு பருக்கை களேப் போட்டுக் கரைத்து வந்திருக்கிறேன். நாரத்தங்காயைத் தொட்டுக் கொண்டு இரண்டு டம்ளர் சாப்பிடுங்களேன்?''

ஈரச் சேலேயைத் தூக்கிச் செருகிக் கொண்டு நிற்கிறுள் ராது.

சாயமே புரியாததொரு சேலே. முன்பு வந் திருந்த போது, கொடுத்தனுப்பிய ரவிக்கை களில் ஒன்றை அணிந்திருக்கிறுள். கையிலே கிழிந்த இடம் தெரியாமல் தைத்து இருக் கிறுள். ரோஜா நிறம் அவள் மேனிக்குப் பொருந்தியிருப்பது மட்டுமல்ல. புதையப் புதைய இவ்வளவு பாங்காக எப்படி மாற்றி ஞள், அந்தப் பழைய ரவிக்கையை?

கண்களிலே மை. நெற்றியிலே... ஹரித்துவாரத்துச் சிந்தூரம் போலல்லவா இருக்கிறது? அவளுடைய முகத்துக்குப் பட் டாக ஒளிர்ந்தாலும்....

''பூஜை அலமாரியெல்லாம் குடைந்திருக் கிறுய் போலிருக்கே? இந்தக் குங்குமம் அத்தை ஹரித்துவாரத்திலிருந்து வாங்கி வந்ததல்லவா? நான் உள்ளே வைத்திருந் ததுதானே?''

''நான் சாம்பிராணி இருக்கிறதோன்னு தேடினேனக்கா. ஒரு டப்பியில் இருந்தது.

வெய்யில் உக்கிரமாக உறைக்கிறது. இலேசாகத் தலேயை வலிக்கிறது.

ராது காப்பியைக் கொண்டு வருகிறுள்.

காப்பிக் கொட்டையின் மணமா, அல்லது வறுமையில் மலர்ந்திருக்கும் கையின் மணமா?

அவள் கைப் பாங்கில் இப்படி மணம் கமழுமோ? அந்த மணங்களேச் சொல்லக் கூடியவருக்கு, அந்த மணங்களின் ரசனே இல்லேயே? இவளுடைய மணங்களே மட்டும் கண்டு கொள்வாரோ?

காப்பியின் மணம் அடித் தொண்டையில் கசக்கிறது.

''அம்மா?....''

''ஏண்டி ஜக்கு? காலேஜ் விட்டாச்சா? மணி மூணு அடிக்கலே போல் இருக்கு?''

''இல்லேம்மா, எங்க பாடனி க்ரூப்பிலே எக்ஸ்கர்ஷன் போறேம், மகாபலிபுரம் வரையிலும் போயிட்டுக் காலேயிலே வரேம். நான் சொல்லிட்டுப் போகலாம்னு வந் தேம்மா....!''

''என்னமடீ, திடுதிப்புனு? அப்பாட்டச் சொல்லியிருக்கியா, காலமே?''

''இப்பதாம்மா, நிச்சயமாச்சு. அப்பாக்கு ஆபீசுக்கு....போன் பண்ணிட்டேம்மா!''

''என்னமோம்மா, எனக்குப் புரியலே.... எத்தனே பேர் போகிறீர்கள்? உன் சிநேகிதி கம்சு வராளா?''

''உனக்கு ஒண்ணும் புரியாது. சமயத் திலே கழுத்தறுப்பே. அங்கே காத்துக்கிட் டிருக்காங்கம்மா, வண்டிய வச்சிட்டு?''

''எங்கே?''

''மெயின் ரோடிலே. நான் சொல்லிட்டு வரேன்னு ஓட்டமா ஓடி வந்தேன்....''

''ஏன் வண்டியோடு இங்கு வந்து காத் திருக்கக் கூடாதோ?'' என்று கேட்கத் தோன்றுகிறது.

ஆனல் பேச்சைக் கேட்க அவளுக்கு நேர மில்லே.

மணங்கள் வெள்ளமாய்க் கமழுகின்றன: அலமாரிக் கதவைத் திறந்து மூடுவாள். ஆம், திறந்து மூடுகிறாள்.

தலைவலி விண்விண்ணென்று தெறிக்கிறது.

வாயிற் பக்கம் சரிகைக் கொடி போட்ட நைலக்ஸில் ஒரு மின்னற்கொடி தோற்றம் கண்களைப் பறிக்கிறது. குமுகுமுவென்று புகுந்து நெஞ்சைக் கிள்ளும் மணங்களை உள்ளே விசிறுகின்றன.

பிறகு ஓர் ஓட்டம்.

எல்லா மணங்களும் அவளுள் குழம்புகின்றன. இந்த மணங்களை வீட்டுக்குள் வைத்துக் கொண்டு எத்தனை நாட்களுக்குத் தான் பூட்டுப் போட முடியும்? குழந்தைகள் பெரியவர்களாகும் போது அந்த மணங்களின் வீச்சையும் வேகத்தையும் போல் தானே அறிவும் ஆர்வமும் வளருகிறது ?

அந்த அலமாரியை அப்பா எப்போதும் பூட்டுப் போட்டு வைத்திருக்கிறார்; அலுவலகத்திலிருந்து வந்ததும், அந்த அறைக் கதவையே சாத்திக் கொள்கிறார். அம்மா முன்னறையில் மல்லிகை வத்திகளைக் கொளுத்தி வைத்துக் கொண்டு, "அப்பா படுத்திருக்கிறார். சத்தம் போட்டுக் கதவை இடிக்காதீர்கள்!" என்று சொல்கிறாள். 'அந்தி சந்தி நேரத்தில் அப்பா மட்டும் படுக்கலாமோ?' என்று கேட்டால் எதையோ சொல்லி மழுப்புகிறாள். பணம் காசு வைத்துள்ள அலமாரியைக்கூட அம்மா பூட்டுவதில்லை. அந்த அலமாரியில் என்ன இருக்கும்' என்று உள்ளே புழுங்கும் மணங்களைப் பற்றி அறியத் துடிப்பு இருக்காதோ ?

ஆனால் அதற்காக அலமாரியைத் திறந்து போடலாமா ? அந்த மணங்களைக் குழந்தைகள் நுகர்ந்தால்..... கற்பனையிலேயே எண்ணிப் பார்க்கும் திண்மைகூட வருவதில்லை. ஜக்குவுக்குத் தெரிந்திருக்கும். ராஜுவுக்கும் தெரிந்திருக்குமோ ?

தலைவலி பொறுக்க முடியவில்லை.

வெளியே விட இயலாத மணங்கள். அந்த இறுக்கத்தில் அழுந்திப் புழுங்குகிறாள். இது எத்தனை நாளைக்கு?

வாசனையை மீறிப் புடவை சரசரப்புக் கேட்கிறது:

"யாராலும் வந்தானாக்கா ?"

"ஜக்குதான் வந்தாள். உனக்கேன் இப்படி ஓட்டப் பந்தயம் ஓடி வந்தாப்போல மூச்சிறைக்கிறது?"

"இல்லேக்கா, வாசல் கதவு ரூம் கதவெல்லாம் திறந்து கிடந்தது. நான் எல்லாம் சாத்திட்டுப் போனேனே. திருடன் யாராலும் நுழைஞ்சுட்டானோன்னு பயமாப் போச்சு."

"ஜக்குதான் வந்தாள். காலேஜ்காரரோடு எக்ஸ்கர்ஷன் போறாளாம். நாளைக்குத்தான் வருவேன்னு...."

"ஜக்குவா ?"

"ஆமாம், ஜக்குதான் !"

"எப்ப போனா ?"

"நீ என்னடி, குறுக்குக் கேள்வி கேட்கிறே ? இப்பத்தான் பத்து நிமிஷம் இருக்கும். காலேஜ் வண்டி மெயின் ரோடிலே காத்திட்டிருக்குன்னு நின்ற கால் தரிக்காம ஓடிப் போனாள்."

ராது எதையோ சொல்ல வந்து விழுங்கிக் கொண்டாற்போல் போகிறாள்.

கோதுமை மாவு பதமுள்ள கனியாகி, நெய்யிலே வெந்து மணக்கும் மணம்; உருகும் நெய் மணம்; வெல்லப் பாகு காயும் மணம்.

"ராது.... ராது! ராது இங்கே இருக்கிறாளா?"

வீச்சும் விரைப்புமாக வரும் நெடிகள்; இணைந்த ஒலிகள். அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டாற் போல் இருக்கிறது. நலிந்த மனசின் பலவீனங்களை மறைக்கும் எல்லா வாசனைகளும் பெட்டி திறந்தாற்போல் வருகின்றனவே?

கார் வந்த ஒலியே கேட்கவில்லையே?

"இதுதா, ஊதுவத்தி கேட்டாயாமே காலையில்? இது நல்ல பூஜை வத்தி என்றான். அந்த வத்தி இந்த அம்பாளோடது. தொட்டால் கோபிப்பாள்..."

ஒரு அர்த்தமற்ற சிரிப்பு.

அவளுக்குப் பழகிய பழ வாசனை நெடியடிக்கிறது. நெஞ்சுக்குள் புரையோடிய புண்ணைத் துழாவுகிறது. கருக் கருக்கென்று ஆயிரமாயிரம் ஊசிகள் பிடுங்குகின்றன.

ஊதுவத்தி கேட்டாளா ராது? ராது, ஊதுவத்தி கேட்டாயா, நீ அவரிடம்?

"அப்ப, நான் வர நேரமாகும். டாக்டரிடம் சொல்லியிருக்கிறேன். வந்து பார்ப்பார்!"

'பார்ட்டி ஸ்பிரிட்' இப்போதே வந்து விட்டதா? மூடின கண்களிலிருந்து நீர்த் தாரை வழிகிறது. அப்படியும் தலைக் கனம் குறையவில்லை. விண் விண்ணென்று தெறிக்கிறது. ராது புதிய ஊதுவத்திகளைக் கொளுத்தப் போகிறாள் போலிருக்கிறது.

வாசனை தண்ணீர்ப் பாலின் ஏடு போல் புரிந்தும் புரியாமலும் இருக்கிறது.

ராதுவுக்கு இந்தப் போதை மணங்களையும் போதையூட்டும் நெடி மணங்களையும் பிரித்துப் பார்க்கத் தெரிந்திருக்குமோ?

தெரிந்துதான் தெரியாத பேதை போல் நடிக்கிறாளோ?

ஊதுவத்தி... உருளைக் கிழங்குக் கார வதக்கல்... முட்டை மணங்கள் விரிக்கும் கவர்ச்சி வலையில் விழுந்து விடுவாளோ? நாளையே அவளை அனுப்பிவிடலாம். ஆனால், அவளை அனுப்பினால், மல்லிகை வத்தியாய் உள்ளத்தை ஒளித்துவிட முடியுமோ?

"யாரம்மா? கமலா? நீ போகலியா?"

"எங்கே மாமி? நான் இப்பத்தான் காலேஜிலேந்து வந்தேன். ஜக்குதான் தலைவலின்னு மட்டம் போட்டு விட்டு வந்து விட்டாள். என் நோட்டை வாங்கிப் போகலாமென்று வந்தேன். ஜுரமா மாமி?"

"நீயும் 'பாடனி' தானேடி?"

"ஆமாம் மாமி. ரெண்டு பேரும் ஒண்ணாத்தானே சேர்ந்தோம்?"

"பின்னே, நீ எக்ஸ்கர்ஷன் போகலியா?"



வைட்டமின்கள்
செறிந்த சரிவிகிதச்
சிருணவு. வளரும்
குழந்தைக்குப்
பரிபூரணப்
பாலுணவு
Amul
அமுல்
பாலுணவு
உங்கள் குழந்தைக்குத் தேவையான 7 வைட்டமின்கள் அடங்கியது.

"எக்ஸ்கர்ஷனு? என்ன மாமி தூங்கிட்டேன்? கனவு கண்டேனா?"

"கனவுதானு? ஜக்கு வரலே? சரிகை போட்ட நைலான் உடுத்தி, ஜொலிக்கும் மின்னற் கொடியாக வாசனைகளைச் சிதற விட்டுக் கொண்டு ஓடலே?"

"நீங்க அருமையான கனவு கண்டிருக்கிறீர்கள். அவ 'தலைவலி, ஃப்ளூ வரும் போலிருக்குன்னு முதல் வகுப்பிலேயே மட்டம் போட்டு வந்தாள். இப்ப ஏது எக்ஸ்கர்ஷன்? இந்த மாசக் கடைசின்னு நினைச்சிருக்கோம். அவ்வளவுதான். நான் வரேன் மாமி. ஜக்கு வந்தா என் நோட்டைக் கொண்டு வரச் சொல்லுங்க..."

தலைவலியா? தலைவலியா, எக்ஸ்கர்ஷனு? அந்த வாசனைகள்....

"எனக்கா தலையைப் போட்டு உருட்டறேளே? அமிர்தாஞ்சனம் தடவி விடட்டுமா?

தலை நோவுக்கு ஜில்லென்று இதம் தரும் மென்தால் வாசனை அவளுக்கு உகப்பாக இருக்கும். மாத்திரைகளையே அவள் நாட மாட்டாள்.

ஆனால் கண்களில் புதிய பெருக்கு ஊறி உடைகிறதே ஒழிய, அந்த நோவும் நிற்கவில்லை; மணமும் உகப்பாக இல்லை.

"அக்கா, நீங்க கோவிச்சுக்க மாட்டியளே? ஜக்குவைதான், நான் பார்த்தேன்."

என்ன சொல்லுகிறாள், இந்தப் பெண்? உருப் புரியா வாசனைகளும், உருப் புரியும் இழைகளும் குழம்பி முறுகி, மூச்சைப் பிணிக்கின்றன.

"நீங்க சொல்லும் ஜிலுஜிலு புடவை உடுத்திட்டு ஸ்கூட்டரில் உட்கார்ந்து அவள் போனாள். யாரோ ஒருத்தன், பிரஷ்ஷை ஒட்டவச்சிட்டாப்போல ஸ்டைல் தாடி வச்சிட்டு, அசிங்கமா சராய் போட்டிருந்தான். நாங்க ரிப்பன் வாங்கையிலே அடுத்த மருந்துக் கடை வாசலிலே அவன் நின்றான். அப்புறம் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் ஜக்கு அவன் பின்னாடி அவன் தோளில் கைவச்சின்டு உக்கார்ந்து போறா..."

லாவண்டர் வாசனை நினைவில் வந்து வயிற்றைப் புரட்டுகிறது. பூட்டி வைத்த மணங்கள் வெளியேறி விட்டன. அவளைச் சத்தி சிரிக்க வைக்க அந்த மணங்கள் போகின்றன.

'ஜக்கு போய்விட்டாள். ஜக்கு... ஜக்கு... அடி, உன் மணத்தை மறைக்க எக்ஸ்கர்ஷன்னு யாரிடம் ஊதுவத்தி கொளுத்தி வைக்கறே? இருபது வருடமா ஊதுவத்தி கொளுத்தி வைக்கிறவடி நான்....இருபது வருஷமா.... அம்மம்மா... மூச்சைப் பிடிக்கிறது. தாங்க முடியவில்லையடி, தாங்கவில்லை.' ராது பதறிப் போனாள்.

"என்னக்கா? என்ன பண்ணுகிறது?...: அக்கா? ஐயோ, உடம்பு சில்லுனு போச்சே?"

நெஞ்சை நீவி விடுகிறாள். காலைத் தேய்க்கிறாள். பேச்சு மூச்சே இல்லை.

"டே, ராஜு! மீனு! அப்பாவைக் கூட்டிக்கிட்டு வாங்களேன்....அம்மா..."

"அம்மாவுக்கு மயக்கம் வந்துடுத்தா?" என்று ராஜு நிதானமாகக் கேட்கிறான்.

மீனுவுக்குத் திரை கானம் கேட்கும் சுவாரஸ்யம்.

"அலமாரியில் 'ஸ்மெல்லிங் ஸால்ட்' இருக்கு பாரு. ராது, அதை மூக்கிலே காட்டு; முழிச்சுக்கிடுவா!"

"நீ எடுத்துக் குடு வா..."

"போ, போ, என்னால் முடியாது."

"மீனு, மீனு, சமர்த்தில்லையா, நீ. அம்மா கட்டையா வெளுத்துப் போயிட்டாடீ?"

மீனு எழுந்து சென்று அந்தக் குப்பியையே காணுமென்று தெரிவித்து விட்டு மீண்டும் திரை கானம் கேட்க வருகிறாள்.

"அம்மாவுக்கு இப்படித்தான் அடிக்கடி வரும் ராது. முகத்திலே ஓங்கித் தண்ணியை விசிறினா முழிச்சுக்கிடுவா" என்று ராஜு தெரிவிக்கிறான்.

அவர்கள் யாருமே தீவிரம் காட்டவில்லை.

முகம் வெளுக்கக் கட்டையாகக் கிடக்கிறாள். குழல் விளக்கின் இதமற்ற ஒளியில் குளித்துக் குளித்து மணமும் நிறமும் வெளிறிய மலர் போல் கிடக்கிறாள் அந்தக் குடும்பத் தலைவி.

ராதுவுக்குச் சட்டென்று நினைவுக்கு வருகிறது. ஒரு டப்பியில் கண்ட பழனி விபூதி.

நெற்றியில் அதைக் கொண்டு வந்து பூசுகிறாள்; வாயைத் திறந்து அதைப் போடுகிறாள்.

வைகறையில் இரு கரை பெருக ஓடும் அகண்ட காவிரியில் மூழ்கிவிட்டு ஈரம் உடுத்துப் பட்டை பட்டையாக மேனி எங்கும் பொலியும் பால் வெண்ணீறுடன் திரும்பும் கோலங்கள் நினைவில் வந்து சிலிர்க்கிறது; உடல் குலுங்குகிறது. கண்ணிதழ்கள் அகலுகின்றன. இது என்ன மணம்?

அழுக்கை யெல்லாம் கரைத்து நிர்மலமாக்கும் மணம். புழுங்கும் வெம்மைகளை எல்லாம் குளிர வைக்கும் தூய மணம்.

காவிரியில் மூழ்கி, அந்தத் தூய நீரை இரு வாய் குடித்து உட்புகுந்திருந்த எல்லா மணங்களின் துன்ப நினைவுகளையும் அழித்து விட்டாற் போன்ற அனுபவத்தைத் தரும் இதமான மணம். அந்த மணத்தை இன்னும் இன்னும் அருகே ஏற்றுப் புனிதமடைய வேண்டும்.

"ராது...? விபூதிதானே? இன்னும் கொஞ்சம் கொண்டாயேன்."

"இந்தாருங்கள்க்கா. எனக்கு ரொம்பப் பயமாப் போச்சு. ஒன்னுமே தெரியலே. அப்புறம் சுவாமியை நமஸ்காரம் பண்ணிட்டு இந்த டப்பியில் இருந்த இந்த விபூதியை எடுத்து வந்து இட்டேன். இப்ப எப்படி இருக்கக்கா? ஒரு வாய் காப்பி தரட்டுமா?"

"ஒன்னும் வேண்டாம். ஒரு டம்ளர் குளிர்ந்த தண்ணி கொண்டா போதும். ஏதேதோ மணமெல்லாம் குழம்பிடுத்து. இது தெம்பா யிருக்கு..."

அம்மாடி, என்ன தூய்மை, என்ன ஆரோக்கியம், என்ன குளிர்ச்சி! டப்பியிலுள்ள பஸ்மத்தை நெற்றியிலும், நெஞ்சிலும் வயிற்றிலும் பூசிக் கொண்டு அதன் மணத்தில் பூரணமாகக் குணம் காணக் கண்களை மூடிக் கொள்கிறாள் அந்தக் குடும்பத் தலைவி.

கலைத்தேவி கலங்குகிறாள்



மணியத்தின் மறைவு கேட்டு மனந் துடித்தேன்: தமிழர் மறுமலர்ச்சிக் காலத்தில் அவர் மாண்டமை கொடிதே. அவர் இறப்பினால் நல்லோர் உறும் துயர் கடலினும் பெரிது; வானினும் உயர்ந்தது.

காரைக்கால்
1–10–68
திருமேனி நாகராசன்

ஓவியர் மணியம் அவர்கள் இவ்வுலகை விட்டுச் சென்று விட்டார் என்பதை அறிந்தவுடன் பெருந் துயரடைந்தேன். அவரது மறைவு இந்திய ஓவிய உலகுக்கே ஒரு பெரும் நஷ்டமெனக் கருதுகிறேன்.

சிவகாசி
30–9–68 கு. சே. கிருஷ்ணமூர்த்தி

அமைதியான நீரோட்டத்தில் சிவியா என்னும் சுழல் அலைகளை ஏற்படுத்தினாலும் சுழல் ஓய்ந்த பின் அமைதி...பரிபூரண அமைதி. என்ன அருமையான கதை! முடிவில் வசந்தனும், குழலியும் இணைந்து விடுவது மனதுக்கு இனிக்கிறது.

சென்னை-23
18-10-68 பி. ராஜி

கல்கியின் தீபாவளி மலர் கிடைத்தது. அடிமுதல் நுனிவரை மிகுந்த உத்ஸாகத்தோடு படித்தேன். கல்கியின் தனி சிறப்புக்கு அடையாளமாக மலர் அமைந்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்பத்திலிருக்கும் பரமாசாரியாளின் படம் பெரியவாள் நேருக்கு நேராக இருப்பதுபோல் அமைந்துள்ளது. ஆசார்யாள் தங்களுடைய பத்திரிகையில் வந்து உட்கார்ந்து நேரில் தரிசனம் அளிப்பதுபோல் தோன்றுகிறது.

கும்பகோணம் அக்னிஹோத்ரம்
22-10-68 ராமானுஜதாதாசாரியார்

தீபாவளி மலர் பற்றிய எனது உள்ள எழுச்சியை என்னால் தெரிவிக்காமலிருக்க முடியவில்லை.

'மணியம்' இல்லாக் குறையை வெகு திறமையுடன் போக்கிவிட்டார் 'வினு' அவர்கள். 'அழகு அலைகள்' நெஞ்சை அள்ளுகின்றன. பார்த்துக்கொண்டே இருக்கலாம். அமரர் மணியம் அவர்கள் அமரர் உலகம் சென்றபின் தெய்வ தரிசனம் கண்டு வரைந்து அனுப்பி வைத்த படம்போல் அமைந்திருக்கிறது. மலரில் இடம் பெற்றிருக்கும் மணியத்தின் தெய்வப் படம்.

'கவரிமான் கூட்டம்' நிழற்படம் மிகவும் கவர்ச்சியாக அமைந்திருக்கிறது.

கீதகோவிந்தம் மிக அற்புதமாக அமைந்து விட்ட ஒரு தெய்வீகக் கலைப்பகுதி. அப்படியே பத்திரப்படுத்தி வைக்கத்தக்க அபூர்வச் செல்வம்.

ராஜாஜி அவர்கள் 'குழந்தைகளுக்கு' என்று எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் அனைவரும் அறிவிலும் வயதிலும் குழந்தைகள் தானே! அதனால்தான், பாலகர் முதல் முதியோர் வரை அனைவருக்கும் பொருந்தும் அறிவொளியை நமக்கு அருளியிருக்கிறார்கள்.

கணிகையின் முன் தமிழுக்காக 'தமிழ் தாதா' காட்டிய பணிவு..... அப்பப்பா மெய் சிலிர்க்கிறது. அதே நேரத்தில் நாம் என்ன செய்துவிட்டோம் — 'தமிழை வளர்த்தோம் தமிழை வளர்த்தோம்' என்று இப்படிக் கூச்சல் போடுகிறோமே என்று நினைத்தால் அவமானத்தால் மெய் கருங்குகிறது. இந்த நினைவுக் குறிப்பைத் தந்தது கி. வா. ஜ. அவர்கள் காலத்தே தமிழர்களுக்குச் செய்த உதவி.

'சோமு', அழகிரிசாமி, அகிலன் ஆகியோர் தரமான சிறு கதைகளைத் தந்திருக்கிறார்கள். நாடோடி அவர்கள் நகைச்சுவைக்கென்று பிறந்த ஆயிரம் காலத்துப் பயிர். 'Satire' (அங்கதம்) எப்படிக் கொஞ்சி விளையாடுகிறது அவர் கையில். அற்புத விளக்கோடு அவர் பட்டிருக்கும் பாடே சான்று. இதுதான் தரமான நகைச்சுவை.

அருமையான மலர் ஒன்றைத் தந்துதவியதற்குத் தமிழ்கூறும் நல்லுலகு உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

சென்னை - 34
20-10-68 தாமரை மணாளன்

தான் சுயநல வாழ்க்கையை விடப் பள்ளியில் முப்பத்தாறு குழந்தைகளின் பிஞ்சு முகங்களைக் கண்டு களிக்கும் கடமை உணர்ச்சியும் தியாக உள்ளமும் கொண்ட **'அக்கினிப் பரீட்சை'** மீராவின் செயலை நினைக்கும்போது என் போன்ற ஆசிரியைகளின் மனம் பூரிப்பதோடு பெருமிதமும் அடைகின்றது.

வடபாதிமங்கலம்
23–9–68 மரியாள்

"**து**ரோணன்" எழுதிய "அக்கினிப் பரீட்சை"யைப் படிக்கும் வாய்ப்பு கிட்டியதற்குப் பெருமைப்படுகிறேன்.

"உலகத்தில் வாழ்பவர்களுக்கு உரிமையாகச் சில குழந்தைகள்தாம் உண்டு. ஆனால் எனக்கோ வருஷத்துக்கு முப்பத்தாறு குழந்தைகள்!" என்னும் மீராவின் கூற்று என் கண்களில் நீரை வரவழைத்து விட்டது.

அழகான புடமிட்ட பொன்னாக மிளிரும் மீராவை எண்ணிப் பாரதப் பெண் குலம் நிச்சயம் பெருமை கொள்ளும்.

சென்னை — 11
20–9–68 ஜெயா சந்திரசேகரன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam


தாயிடமிருந்து மகளுக்கு வரும்
உட்வர்ட்ஸ் அறிவுரை

உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

உட்வர்ட்ஸ்

கிரைப் வாட்டர்

தலைமுறை தலைமுறையாக புத்திசாலித் தாய்மார்கள் தங்கள்
குழந்தைகளுக்குக் கொடுத்து வருவது உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர்.
குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புக் கோளாறுகள்
ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம் தருவது உட்வர்ட்ஸ்.



காத்துக் கொள்வீர்
கண்டிப்புடனே.
எப்போதும் ஒரு புட்டி
உங்கள் கைவசமிருக்கட்டும்




உட்வர்ஸ் கிரைப் வாட்டர்
நூறு ஆண்டுகளுக்கு மேலாக
புத்திசாலித் தாய்மார்களால்
உபயோகிக்கப் பட்டு வருகிறது.

AT. 30 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

AMCO

A NAME THAT SPEAKS FOR ITSELF IN THE BATTERY WORLD



AMCO BATTERIES
STAY STRONGER LONGER

AMCO BATTERIES LTD.,
BANGALORE

AM/56/MAC-B